Registered as a Newspaper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

வாரப் பதிப்பு THE EELANAATHAM

நாதம் 01 பிரமோதூத ஸ்ரீ சித்திரை மீ 09ஆம் உ ஞாயிற்றுக்கிழமை (22 - 04 - 1990) ஹிஜ்ரி 1410 றம்ழான் 25 ஓசை 63

## ஊழல்களைப் பார்த்தபின் நானும் ஓரளவு பயங்கரவாதியே - பிரேமதாசா

(கொழும்பு)

உங்களது முழுநேரத்தையும் பயன்படுத்தி வறுமையை ஒழித்து கஷ்டப்படும் மக்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை நீங்கள் உடனடியாக மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் ஒருவருடகாலம் கடத்தாமல் 'குதிரை'களை மாற்றவும் நான் தயாராகவுள்ளேன். இதுவும் பயனுள்ள முடிவுகளைத் தரத் தவறினால் பாராளுமன்றத்தைக் கலைத்து, மக்களின் ஆணையைப் புதிதாகப் பெறவும் நான் பின்னிற்கப் போவதில்லை. குறுகியகால அறிவித்தலுக்கு இணங்க திடீர்த் தேர்தலை நடாத்த தயாராக இருக்கும்படி தேர்தல் ஆணையாளருக்கும், அரசாங்க அச்சகருக்கும் நான் அறிவித்துள்ளேன். இவ்வாறு கடந்த புதனன்று ஜனாதிபதி செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடந்த மகாநாட்டில் ஜனாதிபதி பிரேமதாசா தனது இரண்டுமணிநேர உரையில் (6ஆம்பக்கம் பார்க்க)

# 24 வீத சிங்களவர்களுக்கு 51 வீத நிலம் திருமலையில்!

## கோட்பாடு ரீதியான முரண்பாடு இரு முஸ்லிம் இளைஞர் கடத்தல்

(வவுனியா)

ஆண்டியா புளியங்குளத்தில் காவல் கொட்டிலில் படுத்திருந்த இரு முஸ்லிம்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது.

ஆண்டியா புளியங்குளத்தில் இஸ்லாம் மதத்தின் மரபைக் கடைப்பிடித்து வருபவர்களுக்கும் புதிய சிந்தனையாளர்கள் என்று கூறப்படும் பிரிவினருக்குமிடையே அண்மையில் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றது தெரிந்ததே.

இம்மோதல் சம்பவங்களின் போது புதிய சிந்தனையாளர்களில் மூன்றுபேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதும் (4ஆம் பக்கம் பார்க்க)

## அனுராதபுரத்தில் இருந்து வவுனியாவிற்கு சமாதான குழு

(வவுனியா)

எதிர் வரும் ஏழாந்திகதி அனுராதபுரத்தில் இருந்து வட மேற்கு மாகாணசபை உறுப்பினர் நிஸங்க திசநாயக்க என்பவர் ஆயிரம் பொதுமக்களைக் கூட்டிக் கொண்டு சமாதான யாத்திரை ஒன்றை அநுராதபுர மகா போதியில் இருந்து வவுனியாவுக்குசெல்லவிருக்கிறார்.

இது சம்பந்தமாக வவுனியா அரசியல் பொறுப்பாளர் தினேஷ் கூறுகையில் அவர்களுக்கு தாம் ஒத்துழைப்பு நல்குவதாகவும்அதேவேளை இப்பாதயாத்திரை பேச்சளவில் இல்லாமல் நடைமுறையில் இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். (தி)

## வன்னிக் கிராமங்களுக்கு மின்சாரம் அபிவிருத்தி உதவி

## 37 முகாம்கள் இங்கே உள்ளன இந்நிலையில் ஆயுதம் களைவதா?

### திருமலைக் கூட்டத்தில் மகேந்திரராசா கேள்வி

(திருக்கோணமலை)

இலங்கை சுதந்திரமடைந்தபின் திருக்கோணமலை மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தினால் இன்று இம் மாவட்டத்தில் இருபத்திநான்கு வீதமான சிங்களவர்கள் ஐம்பத்தொரு வீத நிலத்தில் வாழ்கின்றார்கள், இன்று திருமலை மாவட்டத்தில் முப்பத்தேழு சிங்கள இராணுவ முகாம்கள் இருக்கின்றன. இந்நிலையில் நாம் ஆயுதங்களைக் கீழே போடுவதென்ற பேச்சுக்கே இடமில்லை. வடக்கு மாகாணம் தமிழ் மண் என்று ஒப்புக்கொண்டவர்கள் கிழக்கு மாகாணமும் தமிழ் மண் என ஒப்புக்கொள்ளும் வரை ஆயுதங்களைக் கைவிட முடியாது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) திருக்கோணமலை முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு வருகை தந்தபோது மக்கள் தமக்களித்த பிரமாண்டமான வரவேற்பிற்கு மகேந்திரராசா தனது பேச்சின் ஆரம்பத்தில் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் 6 வீதத்திற்குக் கீழ் இருந்த சிங்களவர்கள் இன்று 24 வீதத்திற்கு மேல் இருப்பதற்குக் காரணம் திட்டமிட்ட குடியேற்றமே என்றார். 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் வரும் வரையில், கிழக்கில் இருந்து ஒரு சிங்கள எம். பி. தானும் பாராளுமன்றம் செல்லவில்லை என்று தெரிவித்த மகேந்திரராசா திட்டமிட்ட குடியேற்றத்தின் அடிப்படையில் இன்று கிழக்கில் இரண்டு சிங்களத் தொகுதிகள் ஏற் (4ஆம் பக்கம் பார்க்க)



யாழ். வைத்தியசாலை

## மேற்பார்வையாளருக்கு கடமையுணர்ச்சி குறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலையில் தொழில் புரியும் மேற்பார்வையாளர்களின் கடமை உணர்ச்சி தற்போது வெகுவாகக் குறைந்துள்ளது.

இவர்கள் பற்றி பல புகார்கள் செய்யப்பட்டும் இவர்கள் அதிகாரிகளின் உத்தரவுகளுக்குகீழ்ப்படிவதில்லை என வைத்தியசாலை மேற்பாவை சம்பந்தமான அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இவர்கள் அதிகமாக கடமைக்கு நேரத்துக்கு சமுகமளிக்காமை போன்ற குற்றங்களைத் தவறாது தினமும் செய்து வருவதாக அவ்வதிகாரிகள் குறிப்பிட்டனர். இது பற்றி விளக் (6ஆம் பக்கம் பார்க்க)

## முருகண்டி-அக்கராயன்குள வீதி 3,70000 ரூபா செலவில் திருத்தம்

(கிளிநொச்சி)

முருகண்டி அக்கராயன் குளம் வீதி 3,70000 ரூபா செலவில் திருத்தி அமைக்கப் படவுள்ளது. பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியிலிருந்து இப்பணத்தை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு, க. மாணிக்கவாசகர் ஒதுக்கியுள்ளார்.

முருகண்டியிலிருந்து வன்னேரிக்குளம்செல்லும்வீதியும், ஸ்கந்தபுரம் செல்லும் வீதியும் பல வருடங்களாகத் திருத்தப் படாமல் குன்றும் குழியுமாக இருந்து வருகிறது.

மேற்படி பாதைகளின் சீர்கேட்டினால் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னேரிக்குளம் (4ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கு 50 இலட்சம் ரூபா

(கிளிநொச்சி)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்காக ஈழவர் முன்னணி 50 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது ஒதுக்கப்பட்ட இப்பணம் இம் மாவட்டத்தின் ஒரு பகுதியைக் கூட அபிவிருத்தி செய்யப் போகமானதாக இருக்கமாட்டாது. கிடைத்த பணத்தைக் கொண்டு அத்தியாவசிய அபிவிருத்தி வேலைகளையாவது ஆரம்பிக்க வேண்டும்.

ஈழவர் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. கணபதிப்பிள்ளை தில்லைநாதன் தெரிவித்தார்.

## சார்க் இலங்கையிலா, மாலைதீவிலா முடிவில்லை

(கொழும்பு)

பாகிஸ்தான் இந்த இரு நாடு

ஆண்டியா புளியங்குளத்தில் இஸ்லாம் மதத்தின் மரபைக் கடைப்பிடித்து வருபவர்களுக் களில் மூன்றுபேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதும்
(4ஆம் பக்கம் பார்க்க)

# அனுராதபுரத்தில் இருந்து வவுனியாவிற்கு சமாதான குழு

(வவுனியா)

எதிர்வரும் ஏழாந்திகதி அனுராதபுரத்தில் இருந்து வடமேற்கு மாகாணசபை உறுப்பினர் நிஸங்க திசநாயக்க என்பவர் ஆயிரம் பொதுமக்களைக் கூட்டிக் கொண்டு சமாதான யாத்திரை ஒன்றை அநுராதபுர மகா போதியில் இருந்து வவுனியாவுக்கு செல்லவிருக்கிறார்.

இது சம்பந்தமாக வவுனியா அரசியல் பொறுப்பாளர் தினேஷ் கூறுகையில் அவர்களுக்கு தாம் ஒத்துழைப்பு நல்குவதாகவும் அதேவேளை இப்பாதயாத்திரை பேச்சளவில் இல்லாமல் நடைமுறையில் இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். (தி)

# வன்னிக் கிராமங்களுக்கு மின்சாரம் அபிவிருத்தி உதவி

(முள்ளியவளை)

துணுக்காய், மல்லாவி, வவுனிக்குளம், பாண்டியன்குளம் ஆகிய பகுதிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளால் மின்சாரத்தை வழங்கும் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, இலங்கை மின்சாரசபையின் அனுசரணையுடன் நடக்கும் இவ் வேலைத் திட்டத்துக்கு போக்குவரத்து வசதிக்கு சொந்த வாகனங்கள் இல்லாமையால் பஸ்சில் பிரயாணத்தை மேற்கொள்வதால் கால தாமதம் ஏற்படுகின்றது.

மின்சார ஆய்வு வேலைகள் புதுக்குடியிருப்பு, விஸ்வமடு,
(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மறுமலர்ச்சிக் கழகத்தில்

# சமூக பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல்

கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகத்தின் அலுவலகத்தில் சமூக, பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமாகவும், சரித்திர சான்றுகள் பற்றியுமான கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரும், விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி செயலதிபருமான திரு. யோகரட்னம் யோகி அவர்கள் கலந்துகொண்டு, தமிழ்ப் பிரதேசத்தின் முன்னேற்றத்திற்குப் புத்தி ஜீவிகளின் பங்களிப்பு மிக மிக அவசியமானதென
(4ஆம் பக்கம் பார்க்க)

பட்ட திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தினால் இன்று இம் மாவட்டத்தில் இருபத்திநான்கு வீதமான சிங்களவர்கள் ஐம்பத்தொரு வீத நிலத்தில் வாழ்கின்றார்கள், இன்று திருமலை மாவட்டத்தில் முப்பத்தேழு சிங்கள இராணுவ முகாம்கள் இருக்கின்றன. இந்நிலையில் நாம் ஆயுதங்களைக் கீழே போடுவதென்ற பேச்சுக்கே இடமில்லை. வடக்கு மாகாணம் தமிழ் மண் என்று ஒப்புக்கொண்டவர்கள் கிழக்கு மாகாணமும் தமிழ் மண் என ஒப்புக்கொள்ளும் வரை ஆயுதங்களைக் கைவிட முடியாது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) திருக்கோணமலை முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு வருகை தந்தபோது மக்கள் தமக்களித்த பிரமாண்டமான வரவேற்பிற்கு மகேந்திரராசா தனது பேச்சின் ஆரம்பத்தில் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் 6 வீதத்திற்குக் கீழ் இருந்த சிங்களவர்கள் இன்று 24 வீதத்திற்கு மேல் இருப்பதற்குக் காரணம் திட்டமிட்ட குடியேற்றமே என்றார். 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் வரும் வரையில், கிழக்கில் இருந்து ஒரு சிங்கள எம். பி. தானும் பாராளுமன்றம் செல்லவில்லை என்று தெரிவித்த மகேந்திரராசா திட்டமிட்ட குடியேற்றத்தின் அடிப்படையில் இன்று கிழக்கில் இரண்டு சிங்களத் தொகுதிகள் ஏற்
(4ஆம் பக்கம் பார்க்க)



## முல்லைத்தீவு மாவட்டம்:

# அகதிகளை சொந்த மண்ணில் குடியமர்த்த புலிகள் முயற்சி

(முள்ளியவளை)

சொந்த மண்ணில் மீளக் குடியமர்த்தி பாதுகாப்பு வழங்கும் வேலைகளை முல்லைத்தீவுப் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ளனர்.

1984 ஆம் ஆண்டிலிருந்து அகதிகளாக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், முள்ளியவளை, வற்றாப்பளை, கணுக்கேணி, மாமூலை, தண்ணீரூற்று, சிலாவத்தை, அலம்பில், செம்மலை, குமிழமுனை ஆகிய கிராமங்களில் பாதுகாப்பாக திரும்பக் குடியமர்வதற்கான திட்டங்களை அந்தந்த பிரதேச அரசியல் பொறுப்பாளர்கள் மிக முனைப்புடன் செய்து வருகின்றனர்.

இப் பிரதேசங்கள் மீளக் குடியமர்த்தப்படுவதுடன் அங்கு புதிய அபிவிருத்தித் திட்ட வேலைகளை உருவாக்குவதிலும் இப் பொறுப்பாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (18)

# 6,117 துப்பாக்கிகளில் 4,446 திருப்பி ஒப்படைக்கவில்லை

(கொழும்பு)

ஜனாதிபதி, மாகாண சபைத்தேர்தல்களின் போது தற்காப்புக்கென வழங்கப்பட்ட 6,117 துப்பாக்கிகளில் 4,446 துப்பாக்கிகளை இன்று வரை சில முக்கியஸ்தர்கள் திருப்பிக் கொடுக்கவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் வருடம் மார்ச் 31ஆம் திகதிக்கு முன் துப்பாக்கிகளைத் திருப்பித் தராதவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று அரசாங்கம் அறிவுறுத்திய பிறகும் வழங்கப்பட்ட 6,117 துப்பாக்கிகளில் 1,671 துப்பாக்கிகள்தான் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளதாம்.
(4ஆம் பக்கம் பார்க்க)

திரு, க. மாணிக்கவாசகர் ஒதுக்கியுள்ளார். திலிருந்து வன்னேரிக்குளம்
(4ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கு 50 இலட்சம் ரூபா

(கிளிநொச்சி)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்காக ஈழவர் முன்னணி 50 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது ஒதுக்கப்பட்ட இப்பணம் இம் மாவட்டத்தின் ஒரு பகுதியைக் கூட அபிவிருத்தி செய்யப் போதுமானதாக இருக்கமாட்டாது. கிடைத்த பணத்தைக் கொண்டு அத்தியாவசிய அபிவிருத்தி வேலைகளையாவது ஆரம்பிக்க வேண்டும்.

ஈழவர் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. கணபதிப்பிள்ளை தில்லைநாதன் தெரிவித்தார்.

# சார்க் இலங்கையிலா, மாலைதீவிலா முடிவில்லை

(கொழும்பு)

ஐந்தாவது சார்க் உச்சிமகாநாட்டை ஸ்ரீலங்காவிலா அல்லது மாலைதீவிலா நடத்துவது என்பது இழுபறி நிலையில் உள்ளது. இந்த மகாநாட்டை எங்கு நடத்துவது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை, சார்க் அமைப்புக்குத் தலைமை வகிக்கும் பாகிஸ்தான் இந்த இரு நாடுகள் வசமே விட்டுள்ளது.

ஐந்தாவது சார்க் உச்சிமகாநாடு முதலில் கொழும்பில் நடைபெறாவிடில் மாலைதீவில் நடைபெறவிருக்கும் உச்சிமகாநாட்டில் ஸ்ரீலங்கா பங்குபற்றாது என்று வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த
(4 ஆம் பக்கம் பார்க்க)

# அத்துமீறிய இந்திய மீனவர் மன்னாரில் விடுதலை

(மன்னார்)

கடந்த புதன் கிழமை வடபகுதி கடற் பிரதேசத்தில் வைத்துப் பிடிக்கப் பட்ட இந்திய மீனவர்கள் நேற்றுக் காலை 9.00 மணியளவில் விடுதலைப் புலிகளால் இந்தியாவிற்குத் திருப்பியனுப்பப்பட்டார்கள். இவர்களை விடுதலைப்புலிகள் உறுப்பினர் திரு. லட்சுமணன் பேசாலை மத்திய மகா வித்தியாலயத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டார்கள்

விடுதலை செய்யப்பட முன்னர் இந்திய மீனவர்களால் எமது மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் பற்றியும் இது தொடர்ந்து நிகழுமானால் நாம் ஒரு போதும் அதை அனுமதிக்கப் போவதில்லை எனவும் அவர்களுக்கு விடுதலைப் புலிகளால் எடுத்துக் கூறப்பட்டது. மேலும் இவ்வாறான அத்துமீறல் சம்ப
(4 ஆம் பக்கம் பார்க்க)

# திட்டமிட்டு திலீபனைக் கொன்ற பாரதம் பூபதியையும் கொன்றது

(கிளிநொச்சி)

''தமிழீழப் போராட்ட வரலாற்றில் பூபதி அம்மாவின் தியாகம் மிகப்பெரியது. இந்திய வல்லாதிக்கத்தின் முகமூடியைக் கிழித்தார். திட்டமிட்டே இந்தியா திலீபனைக் கொன்றது, அதேபோல் நயவஞ்சகமாக பூபதி அம்மாவையும் கொன்றது. பூபதி அம்மாள் இந்தியாவின் விஷமத்தனமான பொய்ப் பிரசாரங்களை அம்பலப்படுத்தினார்''

இவ்வாறு நேற்றுமுன்தினம் அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டுநினைவுதினத்தையொட்டி தருமபுரம் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற எழுச்சிவிழாவில் தலைமைச் செயலக நிர்வாகி திரு. நடேசன் கூறினார்.
(4ஆம் பக்கம் பார்க்க)

# மந்திரிகளுக்குப் பதிலாக மாணவர்கள்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கான தனது முதல் விமானச் சேவையை எயர்லங்கா எதிர்வரும் மேமாதம் 4ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யவுள்ளது. எயர்லங்காவின் கன்னிச் சேவையில் வழமைபோல் பிரயாணம் செய்யவிருந்த சில அமைச்சர்களையும், அரசாங்க சிரேஷ்ட அதிகாரிகளையும் அப் பிரயாணத்தை
(4ஆம் பக்கம் பார்க்க)

# மரணச் செய்தி கொண்டு சென்றவர் மரணம்

(கல்லாறு)

பெரியகல்லாறு முதலாம் குறிச்சியைச் சேர்ந்த தம்பிராசா என்பவர் தனது உறவினரின் தற்கொலைச் செய்தியை பாண்டிருப்பில் உள்ள தனது உறவினர்களுக்கு அறி
(4ஆம் பக்கம் பார்க்க)

## மருந்துக் கடைகள்

# இலாப நோக்கில் இயங்கின் அவை மூடப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசத்தில் பணம் சம்பாதிப்பதையே நோக்காகக் கொண்டு, மருந்துக்கடை நடத்துவோரின் கடைகள் இனங்காணப்பட்டு, அவை உடன் மூடப்படவேண்டுமென நேற்று ஹோட்டல் சுபாஸில் நடைபெற்ற ஆங்கில மருந்து வர்த்தக சங்கப் பொதுக்கூட்டத்தில் உணவு, மருந்து விலைக் கட்டுப்பாட்டதிகாரி த. மாதவன் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார்.

மேலும் அவர் மருந்து வர்த்தகர்களுக்கு சில அறிவுறுத்தல்களை விடுத்தார். அவை வருமாறு:

ஒவ்வொரு மருந்துக்கடைகளிலும் நிச்சயமான ஒரு தராதரம் பெற்ற மருந்துக் கலவையாளர் அமர்த்தப்பட்
(4 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய லொறிகள்

(முள்ளியவளை)

முள்ளியவளை முல்லைத்தீவுமாவட்டத்தில் ஏற்கனவே புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்டலொறிகள் முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டு, துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய கூட்டுறவுச்சங்கங்களுக்கு கச்சேரி ஊடாக விநியோகிக்கப்பட்டன.

அது போன்று மேலும் சில
(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஓடியோ றெக்கோடிங்கிற்கும், ரி. வி. அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகலவிதமான ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்: NEW VENUS No: 60 Stanley Road, Jaffna. B/538

பரமேஸ் கோணேஸ் இசைக் குழுவின் முன்னணிப் பாடகர் வின்ரோ மகேந்திரா (சிப்பிரியன்) தொடங்கவிருக்கும் மெல்லிசைக் குழுவிற்கு Drums வாத்தியம் மீட்டுவதில் திறமையுள்ளவர் தேவை உடன் வரவும் 6. நவீனசந்தை மேல்மாடி. யாழ்ப்பாணம். 17 கோவில் வீதி, யாழ்ப்பாணம். (B417)

## விற்பனைக்கு

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M.G.M 777, K.K.S Road Jaffna (B–867)

### வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள பொலிஸ் நிலைய முன் ஒழுங்கையில் 4 பரப்பு வீடு மின்சார, நீர்தாங்கி வசதியுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு அன்ரன் பொன்மலர் 4ஆம் கட்டை ஆனைக்கோட்டை B/423

## அம்பாறை மாவட்டத்தில் 298 தமிழ்க்குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை

(அம்பாறை)

கல்முனை உதவி அரச அதிபர் தமிழ்ப் பிரிவில் உள்ள இருநூற்றி தொன்னூற்றி எட்டுப் பேருக்கு வன்செயல்களினால் பாதிக்கப்பட்டதற்கான புனர்வாழ்வு அமைச்சினால் கொடுக்கப்படும் நாலாயிரம் ரூபா இன்னும் கொடுபடவில்லை.

1989 ஆம் ஆண்டு கொடுபட வேண்டிய இந்த நிவாரணப் பணம் இன்னும் கொடுபடாததால் இம்மக்கள் விரக்தியடைந்துள்ளனர்.

இது விடயத்தில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென, அம்பாறை மாவட்ட உழைக்கும் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. கே. அருள் பிரகாஷ் புகார் தெரிவித்துள்ளார். (84)

## இப்படியும் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வேறு இடங்களிலிருந்து அழைத்து வந்த மக்களை மக்கள் வாழாத பகுதியில் உள்ள வீதியில் நிற்க வைத்து, அவ்வீதியால் பஸ்சேவையை நீடிக்கும்படி, வடபிராந்திய போக்குவரத்துச் சபை உயரதிகாரிகளிடம் காட்டிய சம்பவம் ஒன்று வடமராட்சி கிழக்கில் நடைபெற்றது.

யாழ். வெற்றிலைக்கேணி பஸ்சேவையினை ஆழியவளை வெற்றிலைக்கேணி கடற்கரை வீதியினால் நீடிப்பதை விரும்பாத சிலர், ஆழியவளை மருதடி வீதியில் பொதுமக்களை வேறு இடங்களிலிருந்து கொண்டு வந்து நிறுத்தினார்களாம்.

இவ்விடயம் ஏற்கனவே வடபிராந்திய போக்கு வரத்துச்சபை உயரதிகாரிகளிடம் பொது மக்களால் இடைவழியில் தெரிவிக்கப்பட்டது. (36)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### திருநெல்வேலி — அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் தேவஸ்தானம்


இத் தேவஸ்தான நிர்வாகி என்ற முறையில் 30 – 4 – 1988 தேர் திருப்பணி எம்மால் ஆரம்பிக்கப் பட்டது. அன்று தொடக்கம் 21 - 03 - 1989 தேர்த் திருப்பணிச்சபை எம்மால் நிறுவப்பட்டது வரை திரு. ம. பாலசுப்பிரமணியம் பணம் பெறுபவராக நியமிக்கப்பட்டிருந்தார். 21 - 03 - 1989 தனாதிகாரியாக நியமனம் பெற்று 7 – 04 – 1990ல் எம்மால் கலைக்கப்பட்ட தேர்த் திருப்பணிச்சபையிலும் செயலாற்றி இருக்கிறார். எம்மால் கலைக்கப்பட்ட தேர்த்திருப்பணிச் சபை 12 - 04 - 1990 கூடி நிர்வாகியான என்னைத் தேர்த் திருப்பணிச் சபையில் இடைநிறுத்தம் செய்வதாக விளம்பரப்படுத்தி இருப்பது அர்த்தமற்றதாகும்.

பல தடவை இரண்டு வருட கணக்கினை எமக்குச் சமர்ப்பிக்கும் படி கோரியும் இன்று வரை கணக்கு விபரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே தான் 08. 04. 1990 இல் புதிய தேர்த் திருப்பணிச் சபை திரு. சுந்தரம்பிள்ளை இராசநாயகம் (B. A. LONDON) அவர்கள் தலைமையில் திரு வீ. கணேசப்பிள்ளை அவர்களைக் காரியஸ்தராகக் கொண்டு எம்மால் நிறுவப்பட்டுள்ளது. எனவே அடியார்கள் பண உதவி செய்பவர்கள் புதிய தலைவருடன் அல்லது காரியஸ்தருடன் தொடர்பு கொள்ளுமாறு அம்பாள் பேரில் பணிவுடன் வேண்டுகிறேன்.

ச. தணிகாசலம்
நிர்வாகி

திருநெல்வேலி அரசடி
ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன்
தேவஸ்தானம். (R/424)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தியாக வேள்வியில் விளைந்த தியாக தீபமே!
அன்னை பூபதியே! ஈழ விடுதலைக்காய
தன்னுயிர் ஈந்த தியாகிகளே!!
அனைவர்க்கும் எமது அஞ்சலிகள்!!!



## க.பொ.த. பரீட்சைவிடைத்தாள் திருத்தும் நடவடிக்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர விடைத்தாள் திருத்தும் பணி இன்று இருபத்தோராம் திகதி காலை ஆரம்பமாகின்றது. இந்த விடைத்தாழ் திருத்தும் பணி இம்மாதம் 29ஆம் திகதிக்குள் பூர்த்தி யாக்கப்பட்டு 30ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டும் என யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவிக்கிறார்

அவர் மேலும் இத்திருத்த வேலை யாழ். இந்துமகளிர் கல்லூரி, இந்துக் கல்லூரி. யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, திருக் குடும்பக் கன்னியர் மடவித்தியாலயத்திலும் இடம் பெறும். அழைப்பு கடிதங்கள் கிடைக்கப் பெற்ற ஆசிரியர்கள் அந்தந்த நிலையத்திற்கு சமுகம் தந்து விடைத்தாள் திருத்தும் பணிகளை கவனிக்கும் படியும் திரு, இ. சுந்தரலிங்கம் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். (லோ)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பதவி வெற்றிடம்

இப் பல்கலைக்கழகத்தில் மேற் குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் 1990.05.17 வரை என்னால் ஏற்றுக் கொள்ளப் படும்.

பதவி:
சுருக்கெழுத்தாளர் (தமிழ்) தரம் II

சம்பளஅளவுத்திட்டம்:
ரூபா 2085–10x40-7x50 –2835/-
(மாதமொன்றுக்கு)

இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் செலுத்தப்படும்).

தகைமைகள்:

1. இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். திறமைச் சித்திகளுள் தமிழ் மொழி அல்லது இலக்கியம் அடங்கியிருத்தல் வேண்டும்.
2. தமிழ்ச் சுருக்கெழுத்தில் பின்வரும் ஆகக் குறைந்த வேகத்துடன் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

சுருக்கெழுத்து – நிமிட

### தாயும் மகனும் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தாயாரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றவர் சைக்கிளுடன் மோதினார். இச்சம்பவம் மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலில் இடம் பெற்றது.

கே. சுசீந்திரன் என்பவர் கே. விசாலாட்சி என்று தனது தாயாரை மோட்டார் சைக்கிளில் ஏற்றி சென்றுகொண்டிருந்தபோது, திடீரென வந்த சயிக்கிள் ஒன்றுடன் மோதுண்டதால் தாயும் மகனும் படுகாயத்துக்குள்ளாகி யாழ், போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (லோ)

### அடிக்கல் நாட்டு வைபவம்

(வேலணை)

நயினாதீவு ஸ்ரீ கணேசசன சமூக நிலையத்தின் நவீன கலை அரங்குக்கான அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் 23 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு நயினாதீவு கணேச சனசமூக நிலையத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா கலை அரங்கிற்கான அடிக்கல்லை சம்பிரதாய முறைப்படி நாட்டி வைக்கவிருக்கின்றார்.

### அச்சுக்கலைப் பயிற்சி

(உரும்பிராய்)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளத்தினால் நடாத்தப்பெற்று வரும் அச்சுக்கலைப்பயிற்சி வகுப்பு இன்று ஞாயிறு காலை 9 00 மணிக்கு யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் ஆரம்பமாகின்றது.

இப்பயிற்சி சம்மேளத்தினூடாக சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கட்கு இலவசமாக நடாத்தப் பெறுகின்றது. விரும்பிய ஆண் பெண் இருபாலரும் பங்குபற்றிப் பயன் பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

### யாழ்நகரில் இன்றைய சினிமா

**வின்ஸர்-யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

கடைசி சில தினங்கள்
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.30
(இன்று கடைசி தினம்)
**கொடி பறக்குது**
(கலர்)
28.4.90 முதல்
அர்ஜுன் - சீதா
ஏவி.எம்மின்
சங்கர் குரு

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)

## பார்வையற்றோர்

பொலிஸ் நிலைய முன் ஒழுங்கையில் 4 பரப்பு வீடு மின்சார, நீர்தாங்கி வசதியுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு அன்ரன் பொன்மலர் 4 ஆம் கட்டை ஆனைக்கோட்டை

B/423

இவ்விடயம் ஏற்கனவே வடபிராந்திய போக்கு வரத்துச்சபை உயரதிகாரிகளிடம் பொது மக்களால் இடைவழியில் தெரிவிக்கப்பட்டது.

(36)

திருநெல்வேலி அரசடி
ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன்
தேவஸ்தானம்.

(R/424)

கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் செலுத்தப்படும்).

தகைமைகள்:

1. இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். திறமைச் சித்திகளுள் தமிழ் மொழி அல்லது இலக்கியம் அடங்கியிருத்தல் வேண்டும்.
2. தமிழ்ச் சுருக்கெழுத்தில் பின்வரும் ஆகக் குறைந்த வேகத்துடன் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

சுருக்கெழுத்து – நிமிடமொன்றுக்கு – 70 சொற்கள்.

தட்டச்சில் பொறித்தல் – நிமிடமொன்றுக்கு 20 சொற்கள்.

வயது:
40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:
தேர்வு, நேர்முகப் பரீட்சை ஆகியனவற்றின் மூலம்.

குறிப்பு:
ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சுருக்கெழுத்துத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது சுய முகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டிய 23x10 செ.மீ அளவுடைய உறைகளை அனுப்பி தபால் மூலமாகவோ பெறவிரும்புவோர் இப் பல்கலைக் கழகத்திலுள்ள சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990. 04. 18

B/808

நாட்டு விழா எதிர்வரும் 23 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு நயினாதீவு கணேச சனசமூக நிலையத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா கலை அரங்கிற்கான அடிக்கல்லை சம்பிரதாய முறைப்படி நாட்டி வைக்கவிருக்கின்றார்.

## அச்சுக்கலைப் பயிற்சி
(உரும்பிராய்)


யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளத்தினால் நடாத்தப்பெற்றுவரும் அச்சுக்கலைப்பயிற்சி வகுப்பு இன்று ஞாயிறு காலை 9 00 மணிக்கு யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் ஆரம்பமாகின்றது.

இப்பயிற்சி சம்மேளத்தினூடாக சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கட்கு இலவசமாக நடாத்தப் பெறுகின்றது: விரும்பிய ஆண் பெண் இருபாலரும் பங்குபற்றிப் பயன் பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(32)


மூன்றாம் ஆண்டு

# நினைவஞ்சலி



## ஸ்ரீபோஸ் (சுவர்ணன்)

தமிழீழ மண்ணில் ஜனனம் **19–07–1967**

தமிழீழ மக்கள் மனதில் ஜனனம் **22–04–1987**

எங்கள் குடும்பத்தில் மூத்தபுதல்வராக;
ஒளிவீசிய எங்கள் தம்பியாக;
அன்பு நிறைந்த எம் செல்வமே!
எங்களை எல்லாம் பரிதவிக்கவிட்டு
மனம்பதைக்க உயிர்நீத்துவிட்ட ஆருயிரே!
புன்சிரிப்பு தவழும் உன் முகத்தை
இனி எப்போது காண்போம்!
எத்தனையோ கற்பனைகள்,
எத்தனையோ எண்ணங்கள் நீ மட்டுமல்ல
நாங்களும் கொண்டிருந்தோம்!
இவைகளை எல்லாம் மறந்து
உனக்கென ஓர்பாதை அமைத்து
தனிவழி சென்று விட்டாயே!
தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்!

சிறுவிளான்,
இளவாலை.

உந்தன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்காமார்,
தம்பிமார், உறவினர், நண்பர்கள்

B/796



தியாக வேள்வியில் விளைந்த தியாக தீபமே!
அன்னை பூபதியே! ஈழ விடுதலைக்காய
தன்னுயிர் ஈந்த தியாகிகளே!!
அனைவர்க்கும் எமது அஞ்சலிகள்!!!



## ஆனந்தா ஸ்ரோர்ஸ்

சுருவில் வீதி,
வேலணை மேற்கு, வேலணை.
உரிமையாளர்கள்: K. P. ஆனந்தன்
K. அருளானந்தன்

(R/422)



## 21ஆம் நூற்றாண்டை துணிவுடன் சந்திக்க நீங்கள் தயாரா?

அப்படியாயின் கொம்பியூட்டர் அறிவு சிறிதளவேனும் இன்றி வருங்காலத்தில் எந்தத் துறையிலும் பிரகாசிக்க முடியாதென்பது உலகறிந்த உண்மை.

எமது கொம்பியூட்டர் வகுப்புகளில் உங்கள் துறைக்குப் பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் படிப்பதன் மூலம் நீங்கள் சிறந்த பலனை அடையலாம்.

குறுகிய காலத்தில் குறைந்த செலவில் அனுபவமும், ஆற்றலுமுள்ள விரிவுரையாளர்களிடம் கற்று டிப்பிளோமா ஒன்றைப் பெற்று உங்கள் வாழ்வைத் தாய் நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ வளம் பெறச் செய்யுங்கள்.

உங்கள் ஆற்றலுக்கும் வசதிக்கும் ஏற்ற முறையில் மிக நவீன கொம்பியூட்டர்களில் நீண்ட நேரப் பயிற்சி அளிக்கும் சந்தர்ப்பத்தை இத் துறையில் முன்னோடிகளான எங்களுக்குக் கொடுங்கள்.

**BASIC & BASE III+, LOTUS I, 2, 3
WORD PROCESSING**

புதிய பிரிவுகள் 23. 04. 90 முதல்ஆரம்பம்
உங்களை அன்புடன் அழைக்கின்றது.

**SCHOOL OF
BUSINESS ADMINISTRATION**
(LEADERS IN COMPUTER EDUCATION)
**16, 3 RD CROSS STREET, JAFFNA.**

(B/809)



# பார்வையற்றோர் பார்வைகுறைந்தோருக்கான கல்வி

- மேற்படி கல்வி வசதி நவீல்ட் பாடசாலை கைதடியில் உள்ளது.
- கல்வி, விடுதிவசதி, உணவு யாவும் இலவசம்.
- சிறு பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு விசேட உதவியாளர் உண்டு.
- 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு வீட்டிலேயே பயிற்சி அளிக்கும் திட்டம் உண்டு.
- பல்கலைக்கழகப் படிப்புவரை வசதிசெய்து கொடுக்கப்படும்.

நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்க.
அதிபர்,
நவீல்ட் பாடசாலை
விழிப்புலனிழந்தோர் கல்வி நிலையம்
கைதடி.

(B/811)



## அறிவித்தல்

# இரசாயனவியல்

## திரு. மகாதேவா

அவர்களது வகுப்புகள் மீண்டும்
ஞாயிறு 22 - 04 - 1990 முதல்
வழமைபோல் நடைபெறும் எனஅறியத்தருகிறோம்

***BOND INSTITUTES***
யாழ்ப்பாணம்.
***NAGALINGAM INSTITUTES***
திருநெல்வேலி.
வாணி கல்வி நிறுவனம்
சுன்னாகம்.

(b/807)

# பிரிட்டிஷ் பிரதமர் தாட்சருக்கு மீண்டும் செல்வாக்கு வளருகிறது

உலக அரசியலில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரட் தாட்சர் குறித்து பல்வேறு வகையான செய்திகள் வெளியாகின.

அவரது கன்சர்வேட்டிவ் சட்சிக்குள்ளே பிளவு ஏற்படப் போகிறது. விரைவில் பொதுத்தேர்தல். அரசியலில் இருந்து ஒதுங்கப் போகிறார் என்றமாதிரி பல செய்திகள் வெளியாகின.

கொங்காங் பிரஜைகள் இரண்டு லட்சத்து இருபத்தையாயிரம் பேருக்கு பிரிட்டிஷ் பிரஜாவுரிமை வழங்குவது பற்றிய சட்டமூலம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பலத்த சாரசாரமான விவாதங்களையடுத்து நிறைவேறியுள்ளது.

இந்த சட்டமூலம் வருவதற்கு முன்னர் பிரதமர் மாகிரட் தாட்சரின் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்குள் பிளவு ஏற்படும் என்றும் திருமதி மாகிரட் தாட்சரின் செல்வாக்கு குறைந்துள்ளதாகவும் சில பிரிட்டிஷ் பத்திரிகைகளும் கருத்து வெளியிட்டிருந்தன.

இந்த சட்டமூலம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது கன்சர்வேட்டிங் கட்சி உறுப்பினர்கள் சிலர் தொழிற்கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து எதிர்த்துப் பேசியுள்ளனர். ஆனால் தொண்ணூற்றி ஏழு அதிகப்படியான வாக்குகளால் அது நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது திருமதி மாகிரட் தாட்சருக்கு பெரும் வெற்றியாகவே தற்போது கணிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் அண்மையில் வரி குறித்த புதிய சட்டமூலத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சிறைச்சாலைகளில் கலவரம்,



ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் என்பனவும் இடம்பெற்றுள்ளன.

சில இடைத் தேர்தல்களிலும் கன்சர் வேட்டிவ் கட்சி தோல்வியடைந்தது இவற்றின் மூலம் திருமதி மாகிரட் தாட்சருக்கு செல்வாக்கு குறைந்து வருகிறது என்று பேசப்பட்டு வந்தது. திருமதி தாட்சர் பதவி விலகுவார், பொதுத்தேர்தல் நடைபெறும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

தென்னாபிரிக்காவின் விடயத்தில் திருமதி மாகிரட் தாட்சர் ஒரு பிடிவாதப் போக்குடனேயே நடந்துவந்துள்ளார். காமன்வெல்த் உக்சிமாநாட்டிலும் தென்னாபிரிக்காவுக்கு ஆதரவாகவே அவர் பேசியுள்ளார். அது மட்டுமன்றி எங்கே போனாலும்தென்னாபிரிக்கா மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கக்கூடாது என்ற கருத்திலேயே பேசுவார்.

கடந்த திங்கட்கிழமை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா லண்டன் வந்தார். ஆனால் அவர் திருமதி மாகிரட் தாட்சரைச் சந்திக்க மறுத்துவிட்டார். அதாவது பிரிட்டன் தென்னாபிரிக்காவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்க வேண்டும்என்றகொள்கையை ஆதரிக்கவேண்டும் என்பதே அவரது விருப்பம்.

திரு. நெல்சன் மண்டேலாவின் விடுதலை குறித்து அமெரிக்கா, இந்தியா உட்பட உலக நாடுகள் வரவேற்றன. ஆனால் பிரிட்டன் எதுவுமே கருத்து வெளியிடவில்லை.

தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் கொள்கை ஒழிக்கப்படும்வரை பிரிட்டிஷ் பிரதமர் அங்குவரவேகூடாது என திரு. நெல்சன் மண்டேலா கூறியுள்ளார். இது இருநாடுகளிடையேயும் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வளவுக்கும் மத்தியில் திருமதி தாட்சர் தமது கொள்கையை விட்டுக்கெப்பாராடோ என்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.



லித்வேனியாவுக்கு எதிராக சோவியத்யூனியன் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இதனை அமெரிக்கா வன்மையாக கண்டித்துள்ளது.

**உலக அரசியல் நோக்கு**

**□ கரவையூரான் □**

சர்வதேச நாடுகளும் தமது கண்டனங்களைத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளன. அமெரிக்க சோவியத் உறவுகள் பாதிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

லித்வேனியாவுக்கு சோவியத் யூனியன் எரிபொருள் வழங்குவதை தடைசெய்துள்ளதால் பங்கீட்டு முறையில் அதனை வழங்குவதற்கு லித்வேனிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

எரிபொருளை சிக்கனம க உபயோகிக்கும்படியும் லித்வேனியா மக்களை லித்வேனியா அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

சோவியத் யூனியனின் இந்த நடவடிக்கையால் இனி லித்வேனியாவில் என்ன நடக்கப் போகிறது என்று உலக நாடுகள் எதிர்பார்க்கின்றன.

## ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் மாற்றம்

(கொழும்பு)

இவ்வாண்டு மே ஜூன் மாத ஓய்வூதி கொடுப்பனவுகள் மாற்றப்படவுள்ளன என பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அறிவித்துள்ளார்.

மே மாதத்துக்குரிய ஓய்வூதியம் முதலாம் திகதியும். ஜூன் மாத ஓய்வூதியம் ஐந்ஜாம் திகதியும் வழங்கப்படும்.


## கல்வி அமைச்சின் இணைப்பு செயலாளர்

(பருத்தித்துறை)

கல்வி அமைச்சின் மதிய உணவுப்பிரிவுக்கும், தமிழ் மொழிப் பிரிவுக்கும் பொறுப்பான கல்விப் பணிப்பாளர். திரு. வெற்றிவேலு சபாநாயகம் கல்வி துணை அமைச்சின் இணைப்புச் செயலாளராகவும் கல்வி அமைச்சினால் நியமிக் கப்பட்டிருக்கின்றார்.

திரு. சபா நாயகம் முன்னர் யாழ். கல்விப் பணிப்பாளாரகவும் வவுனியா மாவட்ட கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியது தெரிந்ததே.

# எதிர்க்கட்சிகள் மே தினத்தில் பேசப்போவது எதனை?



இம்முறை சிங்கள தமிழ் புத்தாண்டு நாடு முழுவதும் சிறப்பாக நடைபெற்றது. பாரதூரமான குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை என்றும் பொலிஸ் தலைமையலுவலகம் தெரிவித்துள்ளது.

அவரது கூற்றுக்கு ஏற்ப பெரிய வெள்ளிக்கிழமையன்று மட்டக்களப்பில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் எப்படி என்பது எல்லோருக்குமே தெரியும். பருத்தித்துறை வல்வெட்டித்துறையில் நடந்தவையும் தெரியும். இதனால் உடனடியாக பொலிஸார் இடமாற்றப்பட்டனர்.

அன்று அரசு எடுத்திருந்தால் வன்முறைகளும் இனக்கலவரமுமே தோன்றியிருக்காது. இப்போதாவது யார் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறார்கள் என்பதை ஜனாதிபதியின் பேச்சு தெளிவுபடுத்துகிறது.

அன்று நடந்ததுபோல அரசாங்கமும் பொலிஸார் செய்தவற்றுக்கு ஆதரவாக செயற்பட்டிருந்தால் மற்

பொலிஸாரும் இராணுவத்தினரும் மோதியுள்ளனர். மற்றொரு சம்பவத்தில் பாணந்துறையில் வீட்டில் தனிமையாகவிருந்த இளம் பெண் மீது சப் இன்ஸ்பெக்டரும் பொலிஸாரும் பலாத்காரம் செய்துள்ளனர். இவ்வாறாக நாட்டைப் பாதுகாக்கும் படையினரின் நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் தினமும் வெளி



றுக் கொண்டுதான் இருக்கின்றன.

கல்வியமைச்சுக்கு உலக வங்கியால் வழங்கப்பட்ட 80லட்சம் ரூபா பெறுமதியான விஞ்ஞான கல்வி உபகரணங்கள் நாரஹென்பிட்டியில் உள்ள களஞ்சிய சாலையில் கவனிப்பாரற்றுக் கிடப்பதை புதிய கல்வயமைச்சர் கண்டுபிடித்து அதன் பொறுப்பதிகாரியை வீட்டிற்கே அனுப்பியுள்ளனர்.

இவற்றை இங்கு ஏன் சுட்டிக்காட்ட வேண்டும் என்றால் ஜனாதிபதி கூறும் ஊழல், மோசடி, வீண்விரயம், வீண் செலவு என்பவற்றுக்கு உதாரணமாக அமைச்சர் லலித்தும், அமைச்சர் மெண்டிஸும் செயற்பட்டுள்ளனர். இப்படி ஏனைய அமைச்சர்களும் செயற்பட்டால்?

எதிர்க்கட்சிகளின் கூட்டு ஐ.தே.கட்சியை முறியடிக்க

போது கூறுகிறது. திருமதி சந்திரிகாவை சுதந்திர கட்சிக்குள் இழுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் திரு அனுராவுக்கு அது தலையிடியாகியுள்ளது சந்திரிகா வந்தால் அம்மாவைப் போல கணவனின் பெயரில் செல்வாக்குப் பெற்றுவிட்டால் தமது கதி என்ன என்று எண்ணிவிட்டார். இனி அடுத்த மே தினத்தை எதிர்கட்சிகள் வேவ்வேறு இடங்களில் கொண்டாட எண்ணியுள்ளன. முன்னர் மேதினத்தில் இரண்டுகொத்து அரிசி! பாண் வேண்டாம்! சீனி வேண்டாம்! என்று கோஷங்கள் எழுப்பப்பட்டன

இம்முறை ஐ. தே. கட்சி தமது மே தினத்தில் ஜனசக்தி வீடில்லாதவருக்குவீடு'வேலை



# எதிர்க்கட்சிகள் மே தினத்தில் பேசப்போவது எதனை?

இம்முறை சிங்கள தமிழ் புத்தாண்டு நாடு முழுவதும் சிறப்பாக நடைபெற்றது. பாரதூரமான குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை என்றும் பொலிஸ் தலைமையலுவலகம் தெரிவித்துள்ளது. வடக்கு கிழக்கிலும் முன்னர் புதுவருடத்தினம் கொலையும் விழுகிற அளவுக்கு பழைய கோபங்கள் கோஷ்டி சண்டையாக மாறிவிடுவது உண்டு.

ஜனாதிபதி அண்மைக்காலமாக வீண்விரயம், நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும், ஊழல் மோசடி இருக்கக் கூடாது என்ற வகையில் கூறி வருகிறார். அத்துடன் புதுவருடத்தன்று குருநாகலையில் அவர் கலந்து கொண்ட வைபவத்தில் இந்திய இராணுவம் அமைதியை ஏற்படுத்த தவறியதையும், சிலர் அமைதியைக் குலைக்க முயல்வதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

அவரது கூற்றுக்கு ஏற்ப பெரிய வெள்ளிக்கிழமையன்று மட்டக்களப்பில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் எப்படி என்பது எல்லோருக்குமே தெரியும். பருத்தித்துறை வல்வெட்டித்துறையில் நடந்தவையும் தெரியும். இதனால் உடனடியாக பொலிஸார் இடமாற்றப்பட்டனர்.

1975 இல் ஸ்ரீமாவோ ஆட்சியில் தமிழாராட்சி மாநாட்டில் பொலிஸார் நடந்துகொண்டதை எவரும் மறக்க முடியாது. 1977 இல் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற பொருட்காட்சி சம்பவ எதிரொலியாக பொலிஸாரின் காடைத்தனங்களால் யாழ். நகரில் பல அனர்த்தங்கள் ஏற்பட்டன. பஸ் நிலையப்பகுதி கடைகள் எரிந்தன. அது பின்னர் நாடு முழுவதுமே இனக்கலவரமாகவே மாறியதும் யாவரும் அறிந்ததே.

மட்டக்களப்பிலும், பருத்தித்துறையிலும் இப்போது எடுத்த நடவடிக்கைகளை அன்று அரசு எடுத்திருந்தால் வன்முறைகளும் இனக்கலவரமுமே தோன்றியிருக்காது. இப்போதாவது யார் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறார்கள் என்பதை ஜனாதிபதியின் பேச்சு தெளிவுபடுத்துகிறது.

அன்று நடந்ததுபோல அரசாங்கமும் பொலிஸார் செய்தவற்றுக்கு ஆதரவாக செயற்பட்டிருந்தால் மற்

**□ ரூபன் □**

றொரு இனக்கலவரம் எழுந்து நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டிருக்கும். அதாவது ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளும் தோல்வியடைந்திருக்கலாம் அல்லவா?

புதுவருடத் தினத்தில் சில இடங்களில் படையினருள் மோதல்கள் இடம்பெற்றதாகவும் செய்திகள் வருகின்றன. கற்பிட்டி கடற்படை முகாமில் ஒருவர் கொல்லப்பட்டார், நாவலப்பிட்டியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் மோதியுள்ளனர். மற்றொரு சம்பவத்தில் பாணந்துறையில் வீட்டில் தனிமையாகவிருந்த இளம் பெண் மீது சப் இன்ஸ்பெச்டரும் பொலிஸாரும் பலாத்காரம் செய்துள்ளனர். இவ்வாறாக நாட்டைப் பாதுகாக்கும் படையினரின் நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் தினமும் வெளிவருகின்றன,

இவ்வாறாக படையினரின் நடவடிக்கைகளினால் கலவரங்கள், வன்முறைகள் ஏற்பட்டு வருவது உயர் மட்டத்திலிருப்பவர்களுக்கே நன்கு தெரியும். தெற்கில் ஜே.வி.பிக்கு எதிரான நடவடிக்கைகளில் என்ன நடந்தவை என்று எதிர்க்கட்சியினரும் மனித உரிமைகள் சங்கமும் தெளிவாகக் கூறிவருகின்றன.

எல்லாவற்றையும் சீராக்கி வரும் ஜனாதிபதி இவர்களின் நடவடிக்கைகளையும் தற்போது குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளார். இதனால் மேற்கூறிய சம்பவங்கள் ஏற்படாது தடுக்கலாம்.

சென்றவாரம் இங்கு அமைச்சர் விஜயபால மென்டிஸ் எடுக்கும் நடவடிக்கைகளை சுட்டிக்காட்டினோம். இந்த வாரமும் தெமட்டகொட றயில்வே பகுதியில் பல லட்சம் ரூபா பெறுமதியான டீசல் திருட்டை அமைச்சர் நேரில் கண்டுபிடித்துள்ளார். இவ்வாறு கீழ்மட்டத்தில் நடைபெறும் மோசடிகள்தான் எத்தனையோ?

தில தினங்களுக்கு முன்னர் நீர்கொழும்பில் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இருந்து வந்த காரில் பல தங்கக்கட்டிகளை பொலிஸார் மீட்டுள்ளனர். இவை விமான மூலம் கொண்டு வரப்பட்டவை. இதில் ஏயர்லங்கா ஊழியர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது தெரிந்துள்ளது.

பம்பலப்பிட்டியில் ஒருஆடம்பரமான வீட்டின் பின் குதியில் கள்ளச்சாராயத் தொழிற்சாலை இயங்குவதைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இதில் விசேடம் என்னவென்றால் அரச வடிசாலை கூட்டுத்தாபன 'சீல்கள்' இங்கேயும் பாவிக்கப்படுகிறதாம். கொழும்பு மாநகரில் இவ்வளவு துணிச்சலாக இதனைச் செய்தவருக்கு யாரோ ஒரு பெரிய கையின் ஆதரவு

## தெள்ளிலங்கை அரசியல் ஒரு நோக்கு

கிடைக்காமல் இது நடைபெற்றிருக்க முடியாது. அந்த நபர் தற்போது தலைமறைவாகி விட்டதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

மற்றொரு சம்பவத்தில் கள்ளக்கடத்தல் கொள்ளையில் ஒரு ஏ. எஸ். பியும் சம்பந்தப்பட்டதாகச் செய்தி வெளிவந்துள்ளது. இவ்வாறாக இன்னும் எத்தனையோ சம்பவங்கள் வெளியே வராமல் நடைபெற்றன.

கல்வியமைச்சுக்கு உலக வங்கியால் வழங்கப்பட்ட 80லட்சம் ரூபா பெறுமதியான விஞ்ஞான கல்வி உபகரணங்கள் நாரஹென்பிட்டியில் உள்ள களஞ்சிய சாலையில் கவனிப்பாரற்றுக் கிடப்பதை புதிய கல்வியமைச்சர் கண்டுபிடித்து அதன் பொறுப்பதிகாரியை வீட்டிற்கே அனுப்பியுள்ளனர்.

இவற்றை இங்கு ஏன் சுட்டிக்காட்ட வேண்டும் என்றால் ஜனாதிபதி கூறும் ஊழல், மோசடி, வீண்விரயம், வீண் செலவு என்பவற்றுக்கு உதாரணமாக அமைச்சர் லலித்தும், அமைச்சர் மென்டிஸும் செயற்பட்டுள்ளனர். இப்படி ஏனைய அமைச்சர்களும் செயற்பட்டால்?

எதிர்க்கட்சிகளின் கூட்டு ஐ.தே.கட்சியை முறியடிக்கவே என்பது கடந்தகால நிகழ்ச்சிகளிலிருந்து தெரிகிறது. ஆனால் தற்போது திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க லண்டனிலிருந்து வந்ததும் அவர்களுக்குள் பிளவுகள் ஏற்படும் நிலைமை தோன்றிவருகின்றது.

ஜனாதிபதி - விடுதலைப் புலிகள் பேச்சுக்கு எதிராக ஸ்ரீமா கருத்தும் கேள்விகளும் எழுப்பிவரும் இவ்வேளையில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஜனாதிபதியின் முயற்சிக்கு ஆதரவு, நமது தலைவர் விஜயகுமாரணதுங்காவே புலிகளுடன் சமாதானம் பேசச் சென்றார் என்று தற்

சந்திரிகாவை சுதந்திர கட்சிக்குள் இழுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் திரு அனுராவுக்கு அது தலையிடியாகியுள்ளது சந்திரிகா வந்தால் அம்மாவைப் போல கணவனின் பெயரில் செல்வாக்குப் பெற்றுவிட்டால் தமது கதி என்ன என்று எண்ணிவிட்டார். இனி அடுத்த மே தினத்தை எதிர்கட்சிகள் வேவ்வேறு இடங்களில் கொண்டாட எண்ணியுள்ளன. முன்னர் மேதினத்தில் இரண்டுகொத்து அரிசி! பாண் வேண்டாம்! சீனி வேண்டாம்! என்று கோஷங்கள் எழுப்பப்பட்டன

இம்முறை ஐ. தே. கட்சி தமது மேதினத்தில் ஜனசக்தி வீடில்லாதவருக்குவீடு'வேலை வாய்ப்பு, நாட்டில் அமைதி விடுதலைப் புலிகளை ஜனநாயக வழிக்கு கொண்டு வந்தது. இந்தியப் படை வெளியேறுதல் எனபவற்றை எழுப்பலாமல்லவா?

எதிர்க்கட்சியினர் என்ன பிரச்சனையை வைத்து பேசப் போகிறார்கள். அவசரகால சட்ட சரத்துக்களும் வியாழக்கிழமை எடுக்கப்பட்டுவிட்டது சில சமயம் ஆறாவது சரத்து புலிகள் ஆயுதங்கள் வைத்திருப்பது போன்றவற்றை தமது மேதினத்தின் முக்கிய விடையமாக எடுக்கலாம்.



# வடமராட்சிப் பகுதியில் உள்ள வர்த்தகர் சங்கம் புனரமைப்பு

(பருத்தித்துறை)

வர்த்தகர்கள் இலாபத்தை மட்டும் கருத்திற் கொண்டு செயற்படாமல் பாவனையாளர்களின் நலன்களையும் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். நாட்டில் நிலவிய இக்கட்டான சூழ்நிலைகளினால் பொதுசேவை ஸ்தாபனங்கள் யாவும் சீரழிந்து நிலை குலைந்திருந்தன. தற்போது நிலமைகள் சீரடைந்திருப்பதனால் பொது சேவை நிறுவனங்கள் ஒழுங்காக இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டியது முக்கியமாகும்.

வர்த்தகர்களுக்கான சங்கத்தை புனரமைத்து வர்த்தக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்கான வடமராட்சிப் பகுதிக்கான வர்த்தகர் சங்கங்கள் இன்று புனரமைக்கப்படுகின்றன.

இவ்வாறு வடமராட்சிப் பகுதி வர்த்தகர் சங்கங்களின் புனரமைப்புக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வடமராட்சி மக்கள் முன்னணிப் பொறுப்பாளர். திரு குணம் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இவ்வர்த்தகர்களுக்கான கூட்டத்தில் சருத்தித்துறை வல்வெட்டித்துறை கரவெட்டிப் பகுதிகளைச் சேர்ந் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்

இக்கூட்டத்தின் ஆரம்பத்திலே வீரபரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கும், மரணமடைந்த பொதுமக்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து உரையாற்றிய வடமராட்சி பொறுப்பாளர் திரு' குணம் குறிப்பிட்டதாவது,

வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும்,வர்த்தகத் துறையைப்பலப்படுத்தவும் வர்த்தகசங்கங்கள் மிகமுக்கியத்துவம் பெறுகின்றன, வர்த்தகர் சங்கங்கள் சிறப்பாகச் செயற்படுவதற்குச் சகல வர்த்தகர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வர்த்தகர் சங்கங்கள் சிறப்பாக இயங்கும் போது வர்த்தகர்கள் பல்வேறு வகையான நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

லர்த்தகர்கள் பாவனையாளர்களைச் சுரண்டக் கூடிய எந்தவிதமான நடடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடாது.மிகப்பாதிப்படைந்து நொந்த நிலையில் உள்ள பாவனையாளர்களை வர்த்தகர்கள் சுரண்டக் கூடிய எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அனுமதியளிக்கக் கூடாது. அதே நேரத்தில் வர்த்தகர்களைப் பாதிக்கக் கூடிய எந்தவிதமான நடவடிக்கைளையும் ஊக்குவிக்கக் கூடிய நிலையையும் ஏற்படுத்தக் கூடாது.

# உற்பத்தித்திறன் முயற்சிக்கு உதவிவழங்கும் கருத்தரங்கு

(அம்பாறை)

கல்முனை உதவி அரச அதிபர் தமிழ்ப் பிரிவுலுள்ள உற்பத்தித்திறன் வாய்ந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஊக்குவிப்பு கடன் உதவி பெறுவது சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று சித்திரைப் புதுவருடத்தன்று கல்முனை உதவி அரச அதிபர் தமிழ்ப் பிரிவு காரியாலயத்தில் நடைபெற்றது.

உதவி அரச அதிபர் திரு. வி. அழகரெத்தினத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கருத்தரங்கில் உற்பற்தித்திறன்வாய்ந்த முயற்சியிலீடுபட்டுள்ளவர்கள் 132பேர்கள் கலந்துகொண்டனர்.

மற்றும் கல்முனை இலங்கை வங்கி உதவி முகாமையாளர் திரு. ஆ. ஆனந்தராசா, கல்முனை தமிழ்ப்பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். சிவபாதசுந்தரம் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

விவசாயம், மீன்பிடி. மட்பாண்டம் வனைதல், செங்கல் உற்பத்தி, கால்நடைவளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவர்களே கூடுதலாக இக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். கடந்த காலங்களில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டுள்ள இவர்களுக்கு தொழிலை மேம்படுத்த வங்கி மூலம் கடன் வசதிகள் பெற்றுக் கொடுக்கவேண்டுமெனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இக் கருத்தரங்கிற்கு தலைமைதாங்கிய உதவி அரச அதிபர் திரு. வி. அழகரெத்தினம் உரையாற்றுகையில்:- 'எமது பிரதேசத்தில் உள்ள உற்பத்தித் திறன்வாய்ந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் போதிய பண வசதிகள இல்லாமலும், ஆலோசனைகள் இல்லாமலுமே தற்போது கஷ்டநிலை ஏற்பட்டுள்ளது. இவர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காகவே இக்கருத்தரங்குகூட்டப்பட்டது. இவர்களுக்கு உதவ வங்கிகள் முன்னிற்பது பாராட்டக்கூடிய தொன்றாகும்.

கல்முனை இலங்கை வங்கி உதவி முகாமையாளர் திரு. ஆ. ஆனந்தராசா உரையாற்றுகையில்:- சுயதொழில் முயற்சியில் ஈடுபடும் உங்களுக்குஉதவ என்றும இலங்கை வங்கி தயாராயிருக்கின்றது' அதற்காக வங்கியில் நீங்கள் கணக்கொன்றை வைத்து நடைமுறைப்படுத்தவேண்டும் கணக்கு வைத்து சில மாதங்களில் எம்முடன் தொடர்பு கொண்டால் உங்களுக்கு கடன்வசதிகள் செய்து தரப்படும்'' என்றும் கூறினார்.

(48

ஈழநாதம்

## சனசமூக நிலைய திறப்பு விழா

குருநகர் புதிய வீட்டுத்திட்டத்தில் இன்று புதிய சனசமூக நிலையமாக பெஸ்கி சனசமூக நிலையம் திறக்கப்படவுள்ளது இவ்விழாவில் யாழ். மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

## மரணச் செய்தி

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

விக்கச் சென்றபோது பாண்டிருப்பில் துவிச்சக்கர வண்டிகார் வீதி விபத்தில் சிக்குண்டு பரிதாபமாக மரணமடைந்தார் ஐம்பது வயதான இவருக்கு மூன்று குழந்தைகள் உண்டு. (45)

# ஐந்து கோடி ரூபா செலவில் கரடியனாறு விவசாயப் பண்ணை புனரமைப்பு!

## மட்டக்களப்பு அரச அதிபர் யோசனை ஏற்கப்பட்டது

(நமது விசேடநிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு விவசாயப்பண்ணை, ஆராய்ச்சிப் பண்ணை, பயிற்சிப்பண்ணை ஆகியவை மேற்கு ஜேர்மனின் ஐந்துகோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட இருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் நடந்த சம்பவங்களில் சேதமடைந்து சிதைந்துபோன கரடியனாறு விவசாயப் பண்ணையைப் புனரமைக்க வேண்டுமென்று அண்மையில் கூடிய மாநாடொன்றில் முடிவு செய்யப்பட்டது.

''சிதைந்துபோனதைமுற்று முழுதாகப் புனரமைக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தால் அது நிறைவேறக்கூடிய காரியமல்ல. எந்தப் பகுதியிலாவது புனரமைப்பு வேலையை ஆரம்பித்துப் படிப்படியாகக் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்து வந்தால் புனரமைப்பு வேலையை நிறைவேற்றி முடிக்கலாம்'' என்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஆர். யோகநாதன் இக் கூட்டத்தில் தெரிவித்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இக் கூட்டத்தில் புனர்வாழ்வு அமைச்சின் பிரதிநிதிகள் ஐ. நா. அபிவிருத்தி நிறுவனப்பிரதிநிதிகள், பொறியியலாளர்கள், உயர் அதிகாரிகள், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கரடியனாறு விவசாயப் பண்ணையைப் புனரமைக்கும் வேலைகளை உடனடியாக ஆரம்பிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

முதலில் பத்து ஏக்கரில் விதைநெல் உற்பத்தி செய்வதென்றும் அடுத்த நூறு ஏக்கரில் நெற்செய்கை பண்ணுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பாதிக்கப்பட்ட பகுதிகளை உள்ளூர் பொறியியலாளர்களைக் கொண்டு திருத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

## இலாப

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

டிருக்க வேண்டும். மருந்துக் கடைகளில், மருந்துகள் பாதுகாத்து வைப்பதற்கு நிச்சயமாக ஒரு குளிர்சாதனப் பெட்டி வைத்திருக்க வேண்டும்.

மருந்துகள் விற்பனை செய்யும்போது அதில் உள்ள பாவனை முடிவுத் திகதி கண்டிப்பாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் அவை பாதுகாத்து வைக்கப்படுவதும், வழிகாட்டிகளின்படியே பாதுகாத்து வைக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் மருந்து சங்கப் பொதுநிர்வாகிகளாக சிறிகணேசன், விக்னராஜா, குமாரலிங்கம், சல்வரெட்னம் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

## திட்டமிட்டு

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பொதுமக்கள் சார்பில் பேசிய யாழ். மாநகர சபை ஊழியரான திரு, பஞ்சாட்சரம் தமதுரையில், இந்திய அரசின் திட்டமிட்ட பிரசாரத்தை முற்கூட்டியே உணர்ந்த பூபதி அம்மாள் அதை முறியடிக்கும் வகையில் தனது சட்டரீதியான வாக்குமூலத்தைக் கொடுத்துவிட்டு, சாத்வீகப் போராட்டமான உண்ணா நோன்பினை ஆரம்பித்தார் எனக் கூறினார்.

இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய திரு. சுரேஸ் மாஸ்டர் தமதுரையில், பூபதி அம்மாவின் தியாகம் மகத்தானது. அவர் இந்தியாவுக்கெதிரான போராட்டத்தில் தன்னுயிரைத் தமிழீழ விடிவிற்காக அளித்தார். அவர் இருந்த காலகட்டம் யாருமே வெளியில் செல்ல முடியாத ஊரடங்கு வாழ்வு. இந்த வேளையில் முக்கிய இரண்டு கோரிக்கைகளை முன் வைத்து உண்ணா நோன்பிருந்தாள். இது செவிடர்களான இந்தியாவின் காதில் விழவில்லை. இதனால் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமிழீழப் போராட்டத்திற்கு அர்ப்பணித்தாள் எனக் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் திரு. மரிசால், பண்டிதர் மாம்பழம் சுரேஸ், குருமாஸ்டர் ஆகியோர் உரையாற்றினார்கள்.

## மேற்பார்வை

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கம் கேட்டால் பஸ் இல்லை என்று சாட்டுச் சொல்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இம் மேற்பார்வையாளர் பற்றி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் பெரும் கவலை தெரிவிப்பதுடன் இவர்கள் தமக்கு தேவையான பல வசதிகளை செய்து தருவதில்லை என்றும் முறையிட்டுள்ளனர்.

வைத்தியசாலை சிற்றூழியர்களை வழிநடத்துவதும் அவர்களைக் கண்காணிப்பதும் இந்த மேற்பார்வையாளர்களின் கடமை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ

## முருகண்டி

செல்லும் பஸ் சேவையும் திடீர் என நிறுத்தப்பட்டது பஸ்சேவை நிறுத்தப்பட்டதால் வன்னேரிக்குளம் பகுதி விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை கிளிநொச்சிக்குக் கொண்டுவந்து சந்தைப்படுத்த முடியாது திண்டாடுகின்றனர்.

இது சம்பந்தமாக வன்னேரிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும், ஸ்கந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்

## ஊழல்களைப்

(முதற்பக்க தொடர்)

குறிப்பிட்டார்.

அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள் உயர்மட்ட அரசாங்க அதிகாரிகள், முப்படைத் தளபதிகள் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் இம் மகாநாட்டில் சமுகமளித்திருந்தனர்.

''சேவைசெய்யுங்கள்அல்லது வெளியேறுங்கள்'' இவ்வாறு கடுமையான சொற்பிரயோகங்களைப் பாவித்து ஒளிவு மறைவின்றி தனது அமைச்சர்களைப் பார்த்துக் கூறினார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் இவ்வுரை வெகுவிரைவில் ஓர் பாராளுமன்றப் பொதுத் தேர்தலைக் குறியிட்டுக் காட்டுவதாக அரசியல் அவதானிகளும், விமர்சகர்களும் கருதுகின்றனர்.

அரசியல் அவதானிகள் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடாத்துவதற்கு மூன்று முக்கியமான காரணங்களை முன்வைக்கிறார்கள். அவையாவன—

★ பாராளுமன்றத்தில் 2/3 அறுதிப் பெரும்பான்மையைப் பெறுதல்.

★ தீவிரவாதிகளைக்குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளை பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்வதன் மூலம், பாராளுமன்ற நடைமுறைகளில் புலிகளைப் பங்கு கொள்ள வைத்தல்.

★ மேலதிகமான இளைஞர்கள் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்தல்.

ஜனாதிபதி தனது மந்திரிகளைப் பார்த்துக் கருத்துத் தெரிவிக்கையில் நாசவேலைகளுக்காக தடுப்புக் காவலில் இருக்கும் இளைஞர்கள் தமக்கும் பாராளுமன்ற ஜனநாயகமுறையில் நம்பிக்கையில்லை என்று கூறியிருப்பதோடு, பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுபாராளுமன்றத்துக்குப் போகிறவர்கள் மக்களுக்குச் சேவைசெய்வதற்குப் பதிலாக தமது உற்றார் உறவினருக்கு உதவுகிறார்கள் என்றும், பாராளுமன்றத்துக்குப் போனதும் இரவோடு இரவாக அவர் கோடீஸ்வரர்களாக மாறிவிடுகிறார்கள் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்றார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது-

ஊழல்களையெல்லாம் பார்த்தபிறகு நானும் ஓரளவு புயங்கரவாதியாக மாறிவிட்டேன். நாட்டில் நிலவும் லஞ்சத்துக்கும் ஊழலுக்கும் ஒரு முடிவு கட்டி, சாதாரணமக்களுக்குச் சேவையாற்றுவது தான் எனது முக்கியமான

## பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் புலிகள் சிரமதானம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை (மந்திகை)யில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மக்கள் முன்னணியினரும், மகளிர்முன்னணியினரும் இரண்டுநாள் சிரமதான நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மக்கள் முன்னணி வடமராட்சி இணைப்பாளர் திரு. குணம் தலைமையில் இச்சிரமதான நடவடிக்கைகள் இடம் பெற்றன. மக்கள் முன்னணியினர் மகளிர் முன்னணியினர் உட்பட 100 க்கும் அதிகமானோர் இச் சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபை, கரவெட்டி பிரதேசசபை ஊழியர்களும் இச்சிரமதான முயற்சிகளில் பங்குபற்றினர்.

இச் சிரமதான நடவடிக்கைகளின்போது வைத்தியசாலை விடுதிகள், நோயாளிகளின் பாவனைட் பொருட்

அத்தியட்சகருக்குப் பலத்த புகார்கள் செய்திருந்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என்றும் நோயாளிகள் கவலை தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

இவ்வைத்தியசாலையில் நிலவும் சீர்கேடுகள், குறைபாடுகள் பற்றி ஆராய்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் திரு, அன்ரன் பாலசிங்கத்தின் பாரியார் திருமதி பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மக்கள் முன்னணி வடமராட்சி இணைப்பாளர் திரு. குணம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மகளிர் பிரிவு வடமராட்சிப் பொறுப்பாளர் ஆகியோரடங்கிய குழுவொன்று பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்குத் திடீர் விஜயம் செய்து பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பிரெஞ்சு வைத்தியக் குழு இணைப்பதிகாரி மருத்துவதாதி செல்வி. ஜக்குலின் ஆகியோருடனும் கலந்துரை

## சனசமூகநிலைய உத்தியோகத்தர் நியமனம்

(உரும்பராய்)

தற்போது புதிதாக ஐந்து சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் அவர்களுக்குரிய பிரதேசசபைகளில் கடமையாற்றுவார்கள். அவர்களது சம்பளமும், நிர்வாக ஒழுங்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் காரியாலயத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். (32)

## கூட்டுறவுச்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி

லொறிகள் முல்லைத்தீவு கச்சேரிக்கு வழங்கப்படஇருக்கின்றன. அவற்றை முன்பு வழங்கப்படாத கூட்டுறவுச் சங்கங்களாகிய முல்லைத்தீவு கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கும் முல்லைத்தீவு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட உள்ளன எனத் திட்டமிடல் அதிகாரி அவர்கள் தெரிவித்தார். (58)

# முல்லைத்தீவில் மாபெரும் எழுச்சி விழா

## ஊர்வலம், பொதுக்கூட்டம், பரிசளிப்புவிழா

(முல்லைத்தீவு)

அன்னை பூபதியினது இரண்டாவது ஆண்டு நினைவையொட்டியும், இந்தியப் படை வெளியேற்றத்தையொட்டியும் மாபெரும்எழுச்சி விழா கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவில் நடைபெற்றது.

இவ்விழா முல்லைத்தீவு மாவட்டத்திலே மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பெற்றது. இவ்விழாவில் மாபெரும் ஊர்வலமும்,

மாபெரும் ஊர்வலத்தில் முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவர்களின் பான்ட் வாத்தியக் குழுவினரும், சாரண அணியினரும், மகளிர் படைப்பிரிவு அணியினரும் அணிவகுத்து அழகாகச் சென்றார்கள்.

மாபெரும் பேரணி முல்லைத்தீவு பஸ்தரிப்பு நிலை

## மந்திரிகளுக்கு

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மேற்கொள்வதைத்தவிர்த்துக் கொள்ளும்படி ஜனாதிபதி செயலகம் பணிப்புரை வழங்கியுள்ளது. பதிலாக க. பொ.

முன்னணியினரும், மகளிர்முன்னணியினரும் இரண்டுநாள் சிரமதான நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மக்கள் முன்னணி வடமராட்சி இணைப்பாளர் திரு. குணம் தலைமையில் இச்சிரமதான நடவடிக்கைகள் இடம் பெற்றன. மக்கள் முன்னணியினர் மகளிர் முன்னணியினர் உட்பட 100க்கும் அதிகமானோர் இச் சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபை, கரவெட்டி பிரதேசசபை ஊழியர்களும் இச்சிரமதான முயற்சிகளில் பங்குபற்றினர்.

இச் சிரமதான நடவடிக்கைகளின்போது வைத்தியசாலை விடுதிகள், நோயாளிகளின் பாவனைப் பொருட்கள் என்பன சுத்தம் செய்யப்பட்டன. வைத்தியசாலைச் சுற்றாடல்களும் பற்றைகள், புற்கள் வெட்டப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளன. நீண்டகாலமாக சுத்தம் செய்யப்படாமல் இருந்த வைத்தியசாலையின் சுற்றாடல் பகுதிகள் இச்சிரமதானத்தின்போது துப்புரவு செய்யப்பட்டுள்ளன,

இவ்வைத்திய சாலையில் சுகாதாரச்சீர் கேடுகள் உச்சக்கட்டத்தையடைந்துள்ளதாக இவ்வைத்தியசாலையில் சிகிச்சைபெறும்நோயாளிகள்யாழ். மாவட்ட சுகாதார சேவை

கொண்டிருந்தனர்.

இவ்வை ததியசாலையில் நிலவும் சீர்கேடுகள், குறைபாடுகள் பற்றி ஆராய்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் திரு, அன்ரன் பாலசிங்கத்தின் பாரியார் திருமதி பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மக்கள் முன்னணி வடமராட்சி இணைப்பாளர் திரு. குணம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மகளிர் பிரிவு வடமராட்சிப் பொறுப்பாளர் ஆகியோரடங்கிய குழுவொன்று பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்குத் திடீர் விஜயம் செய்து பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பிரெஞ்சு வைத்தியக் குழு இணைப்பதிகாரி மருத்துவதாதி செல்வி. ஜக்குலின் ஆகியோருடனும் கலந்துரையாடியதும் குறிப்பிடத்தக்கது (25)

## இளைஞர் தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

பத்து நாட்களுக்கு முன் ஏற்பட்ட காதல் முறிவு காரணமாக உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த தம்பிராசா ஆனந்தராசா என்பவர் களைநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவரது தந்தையார் இம் மரண விசாரணையின்போது பத்து நாட்களாக உடைந்த மனநிலையில் இருந்ததாகவும் நேற்று முன் தினம் சினிமாப் படத்துக்குச் செல்வதற்கு உத்தரவு கேட்ட போது தான் தோட்டத்துக்கு நீரிறைக்கச் செல்லுமாறு பணித்ததாகவும் அங்கு அவர் இந்த மருந்தை அருந்தியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். (லோ)

களில் கடமையாற்றுவார்கள். அவர்களது சம்பளமும், நிர்வாக ஒழுங்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் காரியாலயத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். (32)

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட உள்ளன எனத் திட்டமிடல் அதிகாரி அவர்கள் தெரிவித்தார். (58)

இக்கூட்டத்தில் மருந்து சங்கப் பொதுநிர்வாகிகளாக சிறிகணேசன், விக்னராஜா, குமாரலிங்கம், சல்வரெட்னம் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

# முல்லைத்தீவில் மாபெரும் எழுச்சி விழா

## ஊர்வலம், பொதுக்கூட்டம், பரிசளிப்புவிழா

(முல்லைத்திவு)

அன்னை பூபதியினது இரண்டாவது ஆண்டு நினைவையொட்டியும், இந்தியப் படை வெளியேற்றத்தையொட்டியும் மாபெரும்எழுச்சி விழா கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவில் நடைபெற்றது.

இவ்விழா முல்லைத்தீவு மாவட்டத்திலே மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பெற்றது. இவ்விழாவில் மாபெரும் ஊர்வலமும், பொதுக்கூட்டமும், பரிசளிப்பு வைபவமும், கலை நிகழ்ச்சிகளும் நிகழப்பெற்றன. இங்கு நடைபெற்ற ஊர்வலத்தில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்வூர்வலமானது முல்லைத்தீவு பொதுசன வைத்தியசாலைச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி மீனவர் வீதி ஊடாக வேளாங்கண்ணிமாதா கோயிலையடைந்து அங்கிருந்து முல்லைநகர் வழியாக பஸ் தரிப்பு நிலையத்தைச் சென்றடைந்தது.

மாபெரும் ஊர்வலத்தில் முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவர்களின் பான்ட் வாத்தியக் குழுவினரும், சாரண அணியினரும், மகளிர் படைப்பிரிவு அணியினரும் அணிவகுத்து அழகாகச் சென்றார்கள்.

மாபெரும் பேரணி முல்லைத்தீவு பஸ்தரிப்பு நிலையத்தைச் சென்றடைந்ததும், அங்கு மிகவும் அழகான முறையில் அமைக்கப் பெற்றிருந்த அன்னை பூபதியின் நினைவு மண்டபத்தில் மாலை 5-30 மணிக்குப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்க பிரமுகர்களான முல்லை மாவட்டப் பொறுப்பாளர் திரு திவாகர், முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு,கைலாஸ், முல்லைப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. மனோ மற்றும் திரு. செல்வம், திரு.கோசன் மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த செல்வி ஜெனி, சிற்றூரவைத் தலைவர்களான திரு, தரன், திரு. சின்னடியாஸ் மற்றும் அன்னையர் முன்னணித் தலைவர்கள் பலரும் உரையாற்றினார்கள்.

இறுதி நிகழ்ச்சிகளாகக் கலை நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றன. அன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டமே விழாக்கோலம் பூண்டிருந்தது. இவ்விழாவில் பெருந்திரளான தமிழ் மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

### மந்திரிகளுக்கு

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மேற்கொள்வதைத்தவிர்த்துக் கொள்ளும்படி ஜனாதிபதி செயலகம் பணிப்புரை வழங்கியுள்ளது. பதிலாக க. பொ. த (சாதாரணம்) பரீட்சைப் பெறுபேறுகளில் அதிவிசேட சித்திகளைப்பெற்று முன்னணியில் நிற்கும் மாணவர்களை எட்டு மாகாணங்களில் இருந்தும் கிராம அடிப்படையில் தெரிவு செய்து, அவுஸ்திரேலியாவுக்கான எயர்லங்காவின் கன்னிச் சேவையில் அவர்களுக்கு ஆசனங்களை வழங்கும்படி அப்பணிப்புரை மேலும் கூறுகிறது.

அவுஸ்திரேலியாவில்நிலவும் குளிரைச் சமாளிப்பதற்கென கம்பளி உடைகளை மாணவர்களுக்கு எயர்லங்காவழங்கிஉதவுவதோடு, அவுஸ்ரேலியாவில் அவர்களுக்கான வசதிகளை வழங்கி மேற்பார்வை செய்யும். கல்வித் திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்போடு இப்பிரயாணத்துக்கான மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

அரசாங்க உத்தியோகங்களில் உள்ளவர்கள் அரசாங்கச் செலவில் வெளிநாடு செல்வதானால், அதனால் நாடு பொருளாதார வகையில் பயனடைய வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாஸாவின் அறிவுறுத்தலுக்கமையவே மேற்படி மந்திரிகள், உயர் அதிகாரிகளின் பயணம் தடைசெய்யப்பட்டுள்ளதாம்.

கொழும்பு - மெல்போர்ன் அல்லது சிட்னி போய்த் திரும்ப விமானச் சீட்டொன்றை மே 4 ஆம் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு ரூபா 20,000/- எயர்லங்கா விற்கவுள்ளது. குறைந்த விலையில் விமானச் சீட்டை இரண்டுமாதங்களுக்கு விற்பது கொழும்பு அவுஸ்திரேலியா வாராந்த விமானச் சேவையை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு ஊக்குவிப்பு நடவடிக்கையாகும்.

### 24 வீதம்....

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

மகேந்திரராசா மேலும் கூறியதாவது, கிழக்கு மாகாணம் திட்டமிட்ட வகையில் நிர்வாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். இவ்வாறான நிலையில் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போன்று ஆயுதங்களை ஒப்படைத்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய மகேந்திரராசா, தமிழ் மக்கள் இதுவரை விடுதலைப் புலிகளுக்கும், அதன் தலைவருக்கும் வழங்கிய ஆதரவைத் தொடர்ந்தும் வழங்க வேண்டும் என்றும், அப்போது தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வென்றெடுக்கலாம் எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட சகலரும் ஆயுதம் ஒப்படைக்கப்பட மாட்டாதென மக்களுக்கு உறுதிமொழி வழங்கியபோது மக்கள் ஆரவாரம் செய்து வரவேற்றார்கள்.

### துப்பாக்கி

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வழங்கப்பட்ட துப்பாக்கிகளைத் திருப்பிப் பெற்றுத் தரும்படிபாதுகாப்பு அமைச்சு கட்சிச் செயலாளர்களுக்கு கடிதங்கள் எழுதவுள்ளது. எப்படியாவது இந்த மாத முடிவுக்குள் துப்பாக்கிகளைத் திருப்பிப் பெற்று விடப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

தமக்கு தேவையான பலவசதிகளை செய்து தருவதில்லை என்றும் முறையிட்டுள்ளனர்.

வைத்தியசாலை சிற்றூழியர்களை வழிநடத்துவதும் அவர்களைக் கண்காணிப்பதும் இந்த மேற்பார்வையாளர்களின் கடமை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.(லோ

### முருகண்டி

செல்லும் பஸ் சேவையும் திடீர் என நிறுத்தப்பட்டது பஸ்சேவை நிறுத்தப்பட்டதால் வன்னேரிக்குளம் பகுதி விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை கிளிநொச்சிக்குக் கொண்டுவந்து சந்தைப்படுத்த முடியாது திண்டாடுகின்றனர்.

இது சம்பந்தமாக வன்னேரிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும், ஸ்கந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. கே. சாந்தலிங்கமும் கிளிநொச்சி அரசாங்க அதிபரைச் சந்தித்து அவ்வீதி சம்பந்தமாகவும், பஸ் சேவை நிறுத்தப்பட்டது சம்பந்தமாகவும் புகார் செய்துள்ளனர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் மேற்படி வீதியைத் திருத்த உடனடியாக மூன்று லட்சத்து எழுபதினாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

### சார்க்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் கொழும்பில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். சார்க் மகாநாடு மாலைதீவின் தலைநகரமான மாலியில்தான் நடைபெற வேண்டும் என்பது முன்பு நிலவிய அபிப்பிராயமாகும்.

மாலைதீவு அதன் 25-வது சுதந்திர தினக் கொண்டாட்டத்துடன், மாலியில் சார்க் மகாநாட்டை நடத்துவது எனத் தீர்மானித்திருந்தது. ஆனால், நவம்பர் மாதத்தில் ஐந்தாவது சார்க் மகாநாட்டை ஸ்ரீலங்காவில் கூட்டுவதற்கு தான் தயார் என்பதே ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸாவின்நிலைப்பாடாகும்.

எது எப்படியாயினும், ஒரு வருடத்தில் இரு சார்க் மகாநாடுகள் நடப்பது சாத்தியமில்லையாம்.

### அத்துமீறிய

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வங்களில் இனிமேல் ஈடுபட வேண்டாம் என சக இந்திய மீனவர்களுக்கும் கூறும் படியும் தெரிவிக்கப்பட்டது.

யகமுறையில் நம்பிக்கை யில்லை என்று கூறியிருப்பதோடு, பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுபாராளுமன்றத்துக்குப் போகிறவர்கள் மக்களுக்குச் சேவைசெய்வதற்குப் பதிலாக தமது உற்றார் உறவினருக்கு உதவுகிறார்கள் என்றும், பாராளுமன்றத்துக்குப் போனதும் இரவோடு இரவாக அவர் கோடீஸ்வரர்களாக மாறி விடுகிறார்கள் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்றார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது-

ஊழல்களையெல்லாம் பார்த்தபிறகு நானும் ஓரளவு பயங்கரவாதியாக மாறிவிட்டேன். நாட்டில் நிலவும் லஞ்சத்துக்கும் ஊழலுக்கும் ஒரு முடிவு கட்டி, சாதாரணமக்களுக்குச் சேவையாற்றுவது தான் எனது முக்கியமான கடமை, இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு எனக்கு நாட்டு மக்கள் அதிகாரம் வழங்கியுள்ளார்கள். எனக்குப் பின்னால் ஆட்சிக்கு வருபவர் அவர் எவராயிருந்தாலும் ஓர் நிறைவான ஸ்ரீலங்காவை விட்டுச் செல்ல வேண்டும். நான் ஒருவன்தான் இதைச் செய்ய முடியும் இந்த முயற்சியில் நான் தோல்வி கண்டால், மற்றவர்களால் இதை வெற்றிகரமாகச் செய்ய முடியாது. நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற பிரேமதாஸா என்ற அந்த சக்தி வாய்ந்த 'பிசாசி'னால் கூட கையாலாகவில்லை என்று எதிர்காலச் சந்ததியினர் சொல்லக் கூடும்.

ஜனாதிபதி தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் தனக்கு முன்னால் உள்ள கடமைகளைச் செய்யத்தான் திடசங்கற்பம் எடுத்துள்ளதாகவும், பத்திரிகைகள் தனக்கு மாறாக எழுதினாலும் நாட்டுக்கும் மக்களுக்கும் நான் செய்யும் சேவையைத் தடை செய்ய முடியாதென்றும், மக்களுக்கு திருப்தியான ஒரு வாழ்க்கையை வழங்காவிட்டால் குறுகிய காலத்தில் ஆறுமாதங்களுக்கிடையில்மறுபடியும் பயங்கரவாதம் தலையைக் காட்டக் கூடும். என்றார்.

மேற்படி விடுதலையான போது மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜெயநாயகமும், தலைமை உதவி அரசாங்க அதிபர் திரு. குரூஸ் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

### சமூக....

(1 ஆம் பக்கத்தொடாச்சி)

வும், அது எவ்வாறு அமைய வேண்டும் என்றும் அத்துடன் இன்றைய அரசியல் நிலை பற்றியும் மிக விரிவாக விளக்கினார். இவருடன் தமிழீழ ஆய்வு நிறுவன (ROOT) பொறுப்பாளர் ரவி அவர்களும் கலந்து கொண்டு, சமூக, பொருளாதார அபிவிருத்தியில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டம் பற்றியும் நீண்ட காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் பற்றியும் விளக்கினார்.

மேற்படி கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன் ஆகியோருடன் பொருளியல்துறை, புவியியல் துறை, இந்துநாகரிகத்துறை, வரலாற்றுத்துறையை உள்ளடக்கிய பல பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் கலந்து கொண்டு தமது ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவித்தனர். மேற்படி கலந்துரையாடலை மறுமலர்ச்சிக் கழகம் ஒழுங்கு செய்திருந்தது.

### வன்னிக்....

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

முத்தையன் கட்டு, வற்றாப்பளை, சிலாவத்தை ஆகிய பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளார்கள். (58)

### கோட்பாடு....

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

தெரிந்ததே.

தோட்டத்தில் பயிர்களுக்கு காவலாகப் படுத்திருந்த இருவரே கடத்தப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் இஸ்லாம் மதத்தின் மரபைக் கடைப்பிடித்து வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய சிந்தனையாளர்கள் தான்இக்கடத்தல்சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)


## நிதர்சனம் பாடல்கள்

"நிதர்சனம் பாடல்கள்" கசற் இதுவரை காலமும் வெளிவந்த பாடல்களில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுப்பு 23. 4. 90 தேனிசைச் செல்லப்பாவின் பாடல் நடைபெறும் இடத்தில் இக் கசற்றுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்

விலை ரூ: 50/- 11 பாடல்கள் இடம் பெறும்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்தில்லுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் -22 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது·

# ஈழநாதம்

## ஞாயிறு மலர்

மனிதனாகப் பிறந்தவன் ஒவ்வொருவனுக்கும் அவனவனின் தாய்மண்ணில் உண்டு, உடுத்து, உறங்கி வாழும் வாழ்க்கைக்கான உரிமையோடு கூடிய உத்தரவாதய் உண்டு.


— வியர்வை சிந்தும் உழைப்பில் செழிக்கும் தன் மண்ணில் தான் வாழும் உரிமைக்காக ஒருவன் தன் உதிரத்தைச் சிந்துகிறான் என்றால் அவன் தன் சொந்த மண்ணிலேயே அடிமையாக வாழ நிர்ப்பந்திக்கப் படுகிறான் என்றுதான் அர்த்தம் கொள்ளவேண்டும். - யாசிர் அரபாத்



## எழுச்சியின் வடிவம்

*விலங்கிடப்பட்ட வாழ்வை உடைத்து*
*விடுதலைக் காற்றை சுவாசிக்க...*
*மாவீரன் சங்கிலி தான் போரிட்டே*
*வரலாற்றில் முதல் முழக்கம் செய்திட்டான்...*
*அடிமைத் தளைதன்னை அறுத்தெறிந்து*
*ஆதிக்க வெறிதன்னை அழித்தொழித்து...*
*சாதித்த அவன் வீர வாழ்வுதன்னை*
*சான்றோர்கள் காவியமாய்ப் பாடிவைத்தார்*
*வீறுகொண்டு அவனெழுந்து விதைத்தவித்து*
*வீரமிக்க சமுதாய விருட்ச வித்தாய்*
*அந்நியரை புறங் கொள்ளச் செய்துஇங்கோர்*
*ஆக்ரோஷ வடிவாக எழுந்து நிற்கும்...*
*மறவனவன் மண் காக்க எழுந்த காட்சி*
*மறத்தமிழன் வரலாற்றில் மண்ணின்மாட்சி.*

- சார்ல்ஸ்



உன்னில் இருந்து
என் தசை பிரிந்ததும்
இரத்தம் கசிந்தது என்னுள்
நினைவுகளை நசிக்கிவிட
நாட்களாலும்முடியவில்லை
பிரிவில் துலங்கியது
பரஸ்பர அன்பு....ஆனாலும்
பிரிக்கபபட்ட தசை
களில் இருந்தும்
இரத்தமாய்க் கசிகிறது
அன்பு.

அனைத்து மக்களது அன்புக்குப் பாத்திரமான அந்த வெள்ளை உள்ளம் மறைந்த செய்தி குடாநாடெங்கும் பரவியபோது எல்லோர் முகத்திலும் ஒரே சோகம். வலிகாமம் மேற்கில் வட்டுக் கோட்டை தொடக்கம் -வலி -கிழக்கு - அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதி ...திருந்த அடிமட்டத்து மக்கள் பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் தமது தலைவனை இழந்த சோகத்தில் மூழ்கிப்போய் இருந்த காட்சி என் நெஞ்சைப் பிழிவதாக இருந்தது.

**இளமைக் காலம்**

இளமைக்காலம் வசந்த காலம் என்பர். நீர்வேலியைச் சேர்ந்த சிவகுமாரன்–கனகமணி தம்பதிகள் தாம் பெற்ற இரட்டைக் குழந்தைகளுக்கு சிறீகாந்தன் என்றும் சிறிரஞ்சன் என்றும் பெயரிட்டனர். சிறிரஞ்சன் சிறுவயதிலேயே இறந்துவிட்டான். சிறீகாந்தன் விடுதலை ஸ்தாபனத்தில் ஜெகன் என்ற பெயரில் இணைந்துகொண்டு அக்காச்சி என்ற பெயரில் ...

...ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசத்தெரியாத வெள்ளை உள்ளம் அக்காச்சியின் உள்ளம்'' என்று குறிப்பிட்டார். கப்டன் அக்காச்சி (சிவகுமாரன் சிறீகாந்தன்) எப்படி போராளியானான்?

**இயக்கத்தில் அக்காச்சி**

1983ஆம் ஆண்டு கலவரத்தின் எதிரொலிகள் எல்லோரையும்போல அக்காச்சியையும் பாதித்தன. இதனால் விடுதலை ஸ்தாபனத்தின் போர் அணியில்ஒரு உறுப்பினனாக இணைந்து கொண்டான். நீர்வேலியைச் சேர்ந்த கப்டன் கண்ணாடி ராஜனும் (இராஜதுரை ஜெயக்குமார்) இவனும் ஒரே நாளில் இயக்கத்தில் இணைந்துகொண்டனர். 'அக்காய் ரீ சேர்ட் ...

...தாக்குதல்களில் அக்காச்சி பங்கேற்றான்.

நீர்வேலிப்பகுதியில் பொம்பர் குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல்கள் மேற்கொண்டபோது அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அக்காச்சி பலவழிகளிலும் உதவிசெய்தான். இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு நீர்வேலி கூட்டுறவு சங்கக் கட்டிடம் ஒன்றை ஒதுக்கிக்கொடுத்து அவர்கள் நலன்களைத் திறம்படக் கவனித்துக்கொண்டான். பல அகதி முகாம்களை அமைத்து மக்களைப் பாதுகாத்தான். மழையில் நனைந்து கொண்டுசென்று அகதிகளுக்கு உதவிகள் செய்திருக்கிறான். விடுதலை ஸ்தாபனத்துடன் தொடர்புகொண்டு உழைத்த...

...கும். சக விடுதலைப் போராளிகள் அக்காச்சியை ''ஏழைகள் தொண்டன்'', ''மக்கள் தலைவன்'' என்று சுவையாசக் குறிப்பிடுவதுண்டு. படித்தவர்கள் பலர் புத்தகப் பூச்சிகளாகவே வாழ்நாளை வீண் நாளாக்கி மறையும் வாழ்க்கையில் கிராமத்தையே கலாசாலையாக்கி ஏழைமக்களையே தனது ஆசான்களாக்கி அக்காச்சி அனு...



**கல்விப்பணிகள்**

'அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'

இப்படி வரகவி பாரதியார் பாடினார். கப்டன் அக்காச்சியின் கல்விப்பணிகளும் பாரதிபாடலின் தாற்பரியத்தை வெளிப் படுத்துவனவாகவே அமைகின்றன.

நீர்வேலி பல பொருளாதார கட்டு மாணங்களைக் கொண்ட மக்கள் வாழும் பிரதேசமாகும். பொருளாதார வசதி படைத்த செல்வந்தர்களும் சீவனோபாய மட்டத்திற்குக் கீழே வாழும் மக்களும் இங்கே வாழ்கிறார்கள். முற்றிலும் கிராமப்புறம் சார்ந்த ஒரு பிரதேசப் பொறுப்பாளனாக பொறுப் பேற்றுக் கொண்ட அக்காச்சி இப்பகுதியில் வாழும் வசதி குறைந்த குழந்தைகளுக்கு கல்வி ஊட்ட விரும்பி பல பகுதிகளிலும் பாலர் பாடசாலைகளை ஸ்தாபித்தான். புத்தூர்-வாதரவத்தையில்இரண்டு பாலர் பாடசாலைகளை திறந்துவைத்தான். நீர்வேலி கந்தசுவாமி கோயில் அருகில் ஒரு பாலர் பாடசாலையை ஸ்தாபித்தான். கோப்பாய் கல்வி வளர்ச்சிக்கழகம் அக்காச்சியின் கல்விப் பணிகளின் ஒரு பரிமாணமாகும். இதைவிட இடைநிலைக்கல்வி கற்கும் மாணவர்களது வசதி கருதி அக்காச்சி இலவச வகுப்புகளை தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு ஸ்தாபித்து நடத்தினான் அக்காச்சி அச்செழுவில் ஒரு நூல் நிலையம் ஒன்றை அமைத்திருந்தான். வெளிநாட்டு விடுதலைப் போராட்டங்கள் பற்றிய அபூர்வமான நூல்கள் அங்கே வைக்கப்பட்டிருந்தன.

## நேதாஜி

தனது போராளிகளை அரசியல் பிரக்ஞையுள்ளவர்களாக வளர்த்து எடுப்பதில் அவன் அதிக நாட்டமுடையவனாகவே இருந்தான். இந்த நூல் நிலையத்தில் இருந்த நூல்களையெல்லாம் 1987 ஒக்டோபர்-நவம்பர் மாத காலத்தில் அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவம் அள்ளிக்கொண்டு சென்று நீர்வேலி - மாசுவன் சந்தியில் போட்டு தீயிட்டது. யாழ்ப்பாண நூல் நிலையம் எரிக்கப்பட்டபோது அதனைக் கண்டித்த இந்தியா தனது ஆக்கிரமிப்பு இராணுவத்தின் மூலம் ஈழத்தின் பல பாகங்களிலும் பல நூல்நிலையங்களைத்தீக்கிரையாக்கி வரலாற்று பெருமையை பெற்றுக் கொண்டது.

மதிய வேளையிலும் இலவசமாக இருநேர மதிய போசனம் வழங்க ஏற்பாடு செய்தான். பொருளாதார வசதியுடையவர்களை அணுகி அவர்கள் மூலமாக தளபாட வசதிகளை இப்பாடசாலைகளுக்குச் செய்து கொடுத்தான்.

நீர்வேலி வீரபத்திரர் கோயில் அருகில் தியாகி திலீபன் ஞாபகார்த்தமாக ஒரு வாசிகசாலையை அமைத்த அக்காச்சி அக்கட்டிடத்திற்குத் தேவையான சீமெந்து கட்டிகளை தனது சொந்த வீட்டிலிருந்தே எடுத்து வந்து பயன்படுத்தினான். ஏழை மக்கள் விஷக்குடிக்கு இலக்காகி குடும்பங்கள் சீரழியாமல் தடுக்க விரும்பிய அக்காச்சி கசிப்பு ஒழிப்பு நாடகமூலம் பிரசாரம் செய்தான். கசிப்பு ஒழிப்பு நேரடி நடவடிக்கையிலும் ஈடுபட்டான்.

**சிரமதானம்.**

அக்காச்சி தான் பிரதேசப் பொறுப்பாளராகவிருந்த நீர்வேலி பகுதியில் காலத்திற்குக் காலம் பல சிரமதானப் பணிகளைச் செய்து வந்தான். இப்பணிகளில் போராளிகளும் பொதுமக்களும் இணைந்து பங்கேற்றார்கள். நீர்ப்பாசன வசதி குறைந்த இடங்களில் குளங்களைத் திருத்தும் வேலைகளை அக்காச்சி செய்து வந்தான். அந்த வகையில் நீர்வேலிப் பகுதியிலுள்ள நடுவத்தாள், கிராஞ்சி, போன்ற குளங்களின் திருத்த வேலைப் பணிகள் கப்டன் அக்காச்சியால் மேற்கொள்ளப்பட்டவையாகும். அக்காச்சி ஜீவகாருண்ய மிக்க போராளி என்ற முறையில் வரட்சிக்காலத்தில் மேய்ச்சலுக்காக செல்லும் கால்நடைகளும் இக்குளங்களில் நீர் பருக வேண்டும் என்பதும் அவனது ஆசையாக இருந்தது. வாதரவத்தைப்பகுதியின் கல்வி வளர்ச்சிக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் அயராது உழைத்த அக்காச்சி இப்பகுதியில் குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்குமுகமாக வாதரவத்தையில் பெரிய பொக்கணைக்கும் - வீரவாணிக்கும் இடையில் வாழ்ந்த மக்கள் நலன் கருதி தணணீர் வசதிகளைச் செய்து கொடுத்தான.

சிவில் நிர்வாகம் இல்லாத வேளைகளில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட சச்சரவுகளையெல்லாம் மனட்சாட்சியின் படி இயற்கை நீதிக் கோட்பாட்டை பின்பற்றி தீர்த்துவைத்தான். காணிப் பிரச்சினைகளை அவன் அணுகிய விதமும் தீர்த்துவைத்த முறைமையும் பலரது பாராட்டுதல்களையும் பெற்றது.

**ஒப்பிரேசன் லிபரேசன்**




உன்னில் இருந்து
என் தசை பிரிந்ததும்
இரத்தம் கசிந்தது என்னுள்
நினைவுகளை நசிக்கிவிட
நாட்களாலும்முடியவில்லை
பிரிவில் துலங்கியது
பரஸ்பர அன்பு....ஆனாலும்
பிரிக்கபபட்ட தசை
களில் இருந்தும்
இரத்தமாய்க் கசிகிறது
அன்பு.

அனைத்து மக்களது அன்புக்குப் பாத்திரமான அந்த வெள்ளை உள்ளம் மறைந்த செய்தி குடாநாடெங்கும் பரவியபோது எல்லோர் முகத்திலும் ஒரே சோகம். வலிகாமம் மேற்கில் வட்டுக்கோட்டை தொடக்கம் -வலி -கிழக்கு - அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதியிலிருந்தும் தென்மராட்சியின் மேற்குப் பகுதியான மட்டுவிலிலிருந்தும் மக்கள் சாரை சாரையாக துவிச்சக்கரவண்டிகள், உழவு இயந்திரங்கள், லான்ட்மாஸ்டர்கள் மூலமும் கப்டன் அக்காச்சியின் மரணச் சடங்கு இடம்பெற்ற அந்த இடத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். தியாகி திலீபன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகள் ஆரம்பித்த 15-9-1989 அன்று நினைவு அஞ்சலி சோடனைகளிலும் பதாகைகளைக் கட்டுவதிலும் ஈடுபட்டிருந்த மக்களின் செவிகளில் அக்காச்சியின் மரணச்செய்தி விழுந்தபோது அக்காச்சியின் உடலையாவது கடைசியாகப்பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலில் எல்லோரும் மரணச் சடங்கு இடம்பெற்ற அந்த ஒதுக்குப்புறமான ஏகாந்தமான பிரதேசத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தோம். தரிசு நிலப்பகுதி – அந்தத் தரவை நிலத்தை ஊடறுத்துச் செல்லும் கழிமண்பாதையில் நெடுந்தூரம் சென்று- பின்னர் இடைக்கிடை கரடு முரடான பாதையிலும் சேற்று நிலத்திலும் மாறிமாறி சில மைல்கள் தூரம் சென்று அக்காச்சியின் மரணச்சடங்கு இடம்பெற்ற அந்த இடத்தை அச்செழு அங்கிளும் எனது மருமகனும் நானும் அடைந்தோம். இன்னுமொரு பாதை வழியாக அவ்விடத்தை நோக்கி வந்துகொண்டிருந்த யாழ். மாவட்ட மக்கள் முன்னணி அமைப்பாளர் ராஜன் அவர்களை வழிமறித்து அக்காச்சி பற்றிய செய்தியை வினவிய நீர்வேலி உதய தாரகை வாசிகசாலை மக்கள் சோகம் ததும்பிய குரலில் ''ஐயோ எங்கள் தலைவனை இழந்துவிட்டோம்'' என்று அழுது கூறினார்கள். இப்படித்தான் அக்காச்சியின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த பேழையைச் சுற்றி அமர்ந்திருந்த அடிமட்டத்து மக்கள் பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் தமது தலைவனை இழந்த சோகத்தில் மூழ்கிப்போய் இருந்த காட்சி என் நெஞ்சைப் பிழிவதாக இருந்தது.

**இளமைக் காலம்**

இளமைக்காலம் வசந்த காலம் என்பர். நீர்வேலியைச் சேர்ந்த சிவகுமாரன்–கனகமணி தம்பதிகள் தாம் பெற்ற இரட்டைக் குழந்தைகளுக்கு சிறீகாந்தன் என்றும் சிறிரஞ்சன் என்றும் பெயரிட்டனர். சிறிரஞ்சன் சிறு வயதிலேயே இறந்துவிட்டான். சிறீகாந்தன் விடுதலை ஸ்தாபனத்தில் ஜெகன் என்ற பெயரில் இணைந்துகொண்டு அக்காச்சி என்ற பெயரில் மக்கள் தலைவனாக மிளிர்ந்தான். அக்காச்சி பாடசாலையில் படிக்கும் காலத்தில் விளையாட்டுப் போட்டிகளிலும், கராட்டிபயிற்சிகளிலும், குதிரையேற்றப் பயிற்சிகளிலும் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்தான். கிரிக்கட், உதைபந்தாட்டம் முதலானவற்றில் மட்டுமன்றி தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான தாச்சிப் போட்டியிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவனாக அக்காச்சி விளங்கினான். குதிரையேற்றப் பயிற்சிக்காக சிறுவயதில் ஒரு குதிரையை வளர்த்து வந்தான். சிறிவயதில் இருந்தே கீழ்ப்படிவு, நேர்மை, கண்ணியம், ஜீவகாருண்யம், இரக்கம்' சகிப்புத்தன்மை, கொடுத்த வேலைகளைத் திறம்பட செய்யும் மனப்பான்மை இவனிடம் குடிகொண்டு இருந்தது. ஒருமுறை தியாகி திலீபனின் தந்தையார் இராசையா மாஸ்டர், ''உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசத்தெரியாத வெள்ளை உள்ளம் அக்காச்சியின் உள்ளம்'' என்று குறிப்பிட்டார். கப்டன் அக்காச்சி (சிவகுமாரன் சிறீகாந்தன்) எப்படி போராளியானான்?

**இயக்கத்தில் அக்காச்சி**

1983ஆம் ஆண்டு கலவரத்தின் எதிரொலிகள் எல்லோரையும்போல அக்காச்சியையும் பாதித்தன. இதனால் விடுதலை ஸ்தாபனத்தின் போர் அணியில்ஒரு உறுப்பினனாக இணைந்து கொண்டான். நீர்வேலியைச் சேர்ந்த கப்டன் கண்ணாடி ராஜனும் (இராஜதுரை ஜெயக்குமார்) இவனும் ஒரே நாளில் இயக்கத்தில் இணைந்துகொண்டனர். 'அக்காய் ரீ சேர்ட் அணிந்து கொண்டு நின்ற ஜெகனைக் கண்ட மறைந்த பண்டிதர் கப்டன் ரவீந்திரன் ''அக்காச்சி'' என்ற பெயரை வைத்தார். அன்றிலிருந்து அப்பெயரே நிலைத்து நின்றதோடு பிரபல்யமும் பெற்றுவிட்டது.

விடுதலை ஸ்தாபனத்தின் இரண்டாம் படைப் பிரிவில் இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டு 1985ஆம்ஆண்டு முற்பகுதியில் தாயகம் திரும்பிய அக்காச்சி அக்காலகட்டத்தில் விடுதலை ஸ்தாபனத்தால் நடாத்தப்பட்ட பல இராணுவ நடவடிக்கைகளிலும் பங்கேற்றான். 1985 பெப்ரவரியில் நடைபெற்ற கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதல், 1985 ஏப்ரல் மாதம் நடைபெற்ற யாழ்ப்பாண பொலிஸ்நிலையத் தாக்குதல், 1985 மே மாதம் இடம்பெற்ற மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதல் என்பனவற்றில் அக்காச்சி பங்கேற்றான். யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது அக்காச்சி குருநகர், பாசையூர் பகுதிகளில் தாக்குதலுக்குத் தயார்நிலையில் நின்ற விடுதலைப் புலிகளுடன் இணைந்து குருநகர் இராணுவ முகாமைச் சேர்ந்தோர் வெளியேறி முன்னேறாதபடி தடுத்துக்கொண்டிருந்தான்.

1985 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் குடாநாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. இதன்பின் நீர்வேலி பிரதேச பொறுப்பாளனாக நியமிக்கப்பட்ட அக்காச்சி சிறீலங்கா படைகள் முகாமை விட்டு வெளியேறாதபடி மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் பலவற்றில் பங்குபற்றினான். குறிப்பாக பலாலியில் இருந்த இராணுவ விமானப்படை கூட்டு முகாமிலிருந்து இராணுவம் வெளியேற முயன்றபோது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பல எதிர்த் தாக்குதல்களில் அக்காச்சி பங்கேற்றான்.

நீர்வேலிப்பகுதியில் பொம்பர் குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல்கள் மேற்கொண்டபோது அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அக்காச்சி பலவழிகளிலும் உதவிசெய்தான். இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு நீர்வேலி கூட்டுறவு சங்கக் கட்டிடம் ஒன்றை ஒதுக்கிக்கொடுத்து அவர்கள் நலன்களைத் திறம்படக் கவனித்துக்கொண்டான். பல அகதி முகாம்களை அமைத்து மக்களைப் பாதுகாத்தான். மழையில் நனைந்துகொண்டுசென்று அகதிகளுக்கு உதவிகள் செய்திருக்கிறான். விடுதலை ஸ்தாபனத்துடன் தொடர்புகொண்டு உழைத்த பொதுமக்களுக்கு தோள் கொடுத்துஉதவியிருக்கிறான். கஷ்டப்பட்ட மக்களுக்கு தொழில்வாய்ப்புகளைஅளிக்க பண்ணைகளை நிறுவினான். கிராமிய உழைப்பாளர்களை பூர்சுவா வர்க்கம் சுரண்டிய போது அம்மக்களின் நியாய பூர்வமான ஊதியத்திற்காகவும் நேரப்படியான உழைப்பிற்காகவும் போர்க்கொடி தூக்கி போராடியவன் அக்காச்சி. ஏழைகளுக்கு கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் கிடைக்கவேண்டும் என்பதற்காக தளபதி கிட்டுவின் அறிவுரைகளின் படி பல நியாய விலைக் கடைகளைத் திறந்தான்.

**பொதுப்பணிகள்**

தமிழ் இளைஞர்கள் ஒவ்வொருவரும் பொதுப்பணி செய்ய முன்வர வேண்டும் என அறிஞர் அண்ணாத்துரை ஒரு முறை குறிப்பிட்டார். விடுதலைப் போராளியாகவும் சமூக சீர்திருத்த வாதியாகவும் பொதுப்பணியாளனாகவும் விளங்கிய கப்டன் அக்காச்சியை மக்கள் தலைவனாக்கிய சிறப்புப் பரிமாணங்கள் அவனது யதார்த்த பூர்வமான செயல்பாடுகளேயாகும். சக விடுதலைப் போராளிகள் அக்காச்சியை ''ஏழைகள் தொண்டன்'', ''மக்கள் தலைவன்'' என்று சுவையாகக் குறிப்பிடுவதுண்டு. படித்தவர்கள் பலர் புத்தகப் பூச்சிகளாகவே வாழ்நாளை வீண்நாளாக்கி மறையும் வாழ்க்கையில் கிராமத்தையே கலாசாலையாக்கி ஏழைமக்களையே தனது ஆசான்களாக்கி அக்காச்சி அனுபவக்கல்வியூடாக மக்கள் பணி செய்ய கற்றுக் கொண்டவை ஏராளம். அவையே அவனது முன்னேற்றப்பாதையின் படிக்கற்களாகும்.

அபிவிருத்தி என்பது சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து கட்டி எழுப்பப்பட வேண்டும் என ''உர்சுலா கிக்ஸ்''என்ற அறிஞர் ''DEVELOPMENT FROM BELOW'' என்ற தமது நூலில் குறிப்பிட்டார். அபிவிருத்தியின் பல்வேறு பரிமாணங்களை சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து கட்டிஎழுப்ப விரும்பிய கப்டன் அக்காச்சி கீழ்மட்டத்தில் வாழும் மக்களுக்கு அடிப்படைக் கல்வியறிவை போதிக்க விரும்பி அதற்கான திட்டங்களை முதலில் வகுத்துக் கொண்டான்.



கப்டன் அக்காச்சி

தனது போராளிகளை அரசியல் பிரக்ஞையுள்ளவர்களாக வளர்த்து எடுப்பதில் அவன் அதிக நாட்டமுடையவனாகவே இருந்தான். இந்த நூல் நிலையத்தில் இருந்த நூல்களையெல்லாம் 1987 ஒக்டோபர்-நவம்பர் மாத காலத்தில் அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவம் அள்ளிக்கொண்டு சென்று நீர்வேலி - மாசுவன் சந்தியில் போட்டு தீயிட்டது. யாழ்ப்பாண நூல் நிலையம் எரிக்கப்பட்ட போது அதனைக் கண்டித்த இந்தியா தனது ஆக்கிரமிப்பு இராணுவத்தின் மூலம் ஈழத்தின் பல பாகங்களிலும் பல நூல்நிலையங்களைத்தீக்கிரையாக்கி வரலாற்று பெருமையை பெற்றுக் கொண்டது.

**மதியபோசனம்**

தமிழ் நாட்டில் கல்லூரி மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்படும் திட்டமும் இலங்கை அரசின் மாணவர் மதிய போசனத் திட்டமும் அறிமுகப்படுத்தப்படு முன்னரேயே கப்டன் அக்காச்சி பாலர்களுக்கு மதிய போசனம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினான். இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் அரசியல் நோக்குடன் இத்திட்டம் அடுத்த தேர்தலை நோக்காகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அடுத்த சந்ததியின் ஆரோக்கியமான வாழ்வுக்காக அக்காச்சி இத்திட்டத்தை அறிமுகம் செய்தான். நீர்வேலி கந்தசுவாமி கோயில் அருகில் அமைக்கப்பட்ட பாடசாலை அபிவிருத்திக்காக காலஞ்சென்ற மக்கள் கலைஞர் வி. எம். குகராசா அவர்கள் தயாரித்தளித்த ''மனிதனும் மிருகமும்'' என்ற நாடகத்தை அரங்கேற்றி அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு பாலர் பாடசாலக்கான சுற்றுமதில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தான். பாலர் பாடசாலையில் காலையிலும் தைப்பகுதியின் கல்வி வளர்ச்சிக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் அயராது உழைத்த அக்காச்சி இப்பகுதியில் குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்குமுகமாக வாதரவத்தையில் பெரிய பொக்கணைக்கும் - வீரவாணிக்கும் இடையில் வாழ்ந்த மக்கள் நலன் கருதி தணணீர் வசதிகளைச் செய்து கொடுத்தான.

சிவில் நிர்வாகம் இல்லாத வேளைகளில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட சச்சரவுகளையெல்லாம் மனட்சாட்சியின் படி இயற்கை நீதிக் கோட்பாட்டை பின்பற்றி தீர்த்து வைத்தான். காணிப் பிரச்சினைகளை அவன் அணுகிய விதமும் தீர்த்துவைத்த முறைமையும் பலரது பாராட்டுதல்களையும் பெற்றது.

**ஒப்றேசன் லிபறேசன்**

1987 இல் இலங்கை அரசு வடமராட்சி மீது தொடுத்த ஒப்றேசன் லிபறேசன் இராணுவ நடவடிக்கைக்கு எதிரான யுத்தத்தில் அக்காச்சி பங்கு பற்றினான். இலங்கை இராணுவம் எனது பகுதிக்குள் நுழைய முயன்றால் எல்லையில் வைத்து மோதுவேன். என் பிணத்தைத் தாண்டி வந்தே அவர்கள் எனது பகுதிக்குள் நுழையலாம் என சபதம் எடுத்துக் கொண்டு செயல்பட்டவன் அக்காச்சி. வடமராட்சிக்கு சென்று பல தாக்குதல்களிலும் பங்குபற்றிவிட்டு பொதுமக்களுக்கு உதவியும் செய்துவிட்டே அக்காச்சி மீண்டும் வந்தான்.

**இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல்**

இந்திய இராணுவம் 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விடுதலைப் புலிகளுடன் போர் தொடுத்தது. யாழ்ப்பாணம் டச்சுக்கோட்டையில் இருந்து ஒரு பிரிவினர் வெளியேற முயன்று கொண்டிருந்த அதே வேளையில் வேறு படைப்பிரிவினர் பலாலி வீதி, கே. கே. எஸ். வீதி, கண்டி வீதி வழியாக யாழ்ப்பாண நகரை நோக்கி முன்னேற முயன்று கொண்டிருந்தனர். கைதடி, கோப்பாய் வீதி வழியாக கோப்பாய்ச் சந்திக்கு வர முயன்ற இந்திய இராணுவத்தை அந்த இடத்தைநோக்கி நகரவிடாமல் பதினொரு நாட்கள் அக்காச்சி குறுப் தடுத்து நிறுத்தி வைத்துக் கொண்டது. உக்கிரமான போர் இடம் பெற்றது பலத்த ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன. யுத்த களத்தில் நின்ற இந்திய ஜவான்களுக்கு உணவு கொண்டு வந்த இந்திய ஹெலிகள் மீது விடுதலைப்புலிகள் தொடுத்த தாக்குதலால் அவை உணவுப் பொட்டலங்களை நாவற்குழி தரவைக் காட்டுப்பகுதியில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு புன்னாலைக் கட்டுவனில் இந்தியப் படையின் முகாம் பொறுப்பதிகாரியான மேஜர் கே.பி.தாஸ் அச்செழு அங்கிளிடம் ஒரு கேள்வியைக் கேட்டார். அதாவது அக்காச்சி எப்படிப்பட்டவன் என்பதே அக் கேள்வி. அதற்கு அங்கிள் ''A very good fighter better social worker'' என்று ஆங்கிலத்தில் பதில் கொடுத்தார். அதாவது நல்ல போராளி அதைவிட மிகச் சிறந்த சமூக சேவையாளன். இதன் பின் அக்காச்சியின் பொதுப் பணிகளைப் பற்றி ஆராய்ந்த மேஜர் கே.பி.தாஸ் தான் அக்காச்சியை பார்க்க வேண்டும் என்றும் அக்காச்சிஅருகில் அமர்ந்து தேநீர் குடிக்க வேண்டும் என்றும் ஆசைப்பட்டார்.அடுத்த போர் நிறுத்தம் வரும்போது தனது கண்ணைக் கட்டிக்கொண்டு போயாவது அக்காச்சி முன் நிறுத்துங்கள் என்றார். தெற்கு புன்னாலைக்கட்டுவன் முகாம் பொறுப்பதிகாரியான மேஜர் ஒப்றோய் பத்து நாட்களுக்குள் அக்காச்சியை உயிருடன் பிடிப்பேன் என்று சபதம்செய்து தோற்றுப்போனார். ஆனால் பின்னர் அக்காச்சி சமூகத்திற்கு நிறைய சேவைகள் செய்துள்ளான் (Rendered much services to his society) என்று பிரஜைகள் குழுவிடம் சொன்னார். இதேபோல் நீர்வேலி சந்தியில் முகாமிட்டு இருந்த இராணுவ அதிகாரியான மேஜர் பாபுஜி ஏபிரகாம் அக்காச்சியின் சமூக சேவைகளைப் பற்றி தாம் கேள்விப்பட்டதாக பொதுமக்களிடம் சொன்னார்.

## கலாரதம்

# தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரப்பும் கலைஞர் தேனிசை செல்லப்பா

பொன். பூலோகசிங்கம்

நம்புங்கள் தமிழீழம்-
நாளை பிறக்கும்
நாட்டின் அடிமை விலங்கு
தெறிக்கும்
போரில் வெற்றி முரசம்-
முழங்கும்
புலிகள் கழுத்தில் மாலை-
துலங்கும்

இப்படியாக உத்தேச தமிழீழத்தின் உதயத்தைப் பற்றிய பூரண நம்பிக்கையைத் தரும் கவிஞர் காசி ஆனந்தனின் பாடலைத் தனது மதுரக்குரலால் மக்களுக்கு எடுத்துக் கூறி வருபவர் தேனிசை செல்லப்பா அவர்களாகும். 1960 களில் தமிழ்நாட்டில் கல்வி கற்றுக்கொண்டிருந்த நமது கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் காலஞ்சென்ற சி. பா. ஆதித்தனார் அவர்களது தலைமையில் இயங்கிய ''நாம் தமிழர்'' இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு இயங்கிய காலத்தில் அவரால் இயற்றப்பட்ட கவிதைகளுக்கு தேனிசை செல்லப்பா அவர்கள் இசைவடிவம் கொடுத்து மேடைகள் தோறும் பாடி தமிழக மக்கள் மத்தியில் தமிழ் உணர்வையும் விழிப்புணர்ச்சியையும் வளர்த்து வந்ததோடு ஈழத்தமிழர்களது அபிலாஷைகளையும் இசைவடிவில் எடுத்துச் சொல்லலானார். தமிழகத்தின் கிராமங்கள், நகரங்கள் தோறும் தேனிசை செல்லப்பா அவர்களது நாவசைவில் காசி ஆனந்தன் பாடல்கள் நாதவடிவாகப் பிரவாகிக்கலாயிற்று.


மறவர் படைதான் தமிழ்ப்-
படை - குல
மானம் ஒன்றுதான் அடிப்-
படை
வெறிகொள் தமிழர் புலிப்-
படை – அவர்
வெல்வார் என்பது-
வெளிப்படை

இந்தப் பாடல் அறுபதுகளில் தமிழகத்தில் பிரபல்யமாகக் காரணமாக இருந்தவர் தேனிசை செல்லப்பா அவர்களாகும். அறுபதுகளில் தமிழகத்தில் பிரபலமான இப்பாடல் எழுபதுகளில் தமிழ் ஈழத்திலும் பிரபலமடையலாயிற்று. 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு விசுவாசம் தெரிவிக்க மறுத்து கவிஞர் காசி ஆனந்தன் தனது அரச பதவியைத் துறந்ததைத் தொடர்ந்து ஈழத்து அரசியல் மேடைகளிலும் மேடைப் பேச்சுகளுக்கான முன்னோடி ஒலிபெருக்கி அறிவித்தல்களிலும் இப்பாடல் இடம்பிடித்துக்கொண்டது.

எழுபதுகளின் நடுப்பகுதியில் தமிழ்ப் போராளிகள் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற பெயரில் விடுதலை ஸ்தாபனத்தை உருவாக்கிய போது அந்த ஸ்தாபனத்தை அக்காலகட்டத்தில் ''புலிப் படை'' என்று சுருக்கமாக அழைக்கும் வழக்கம் இருந்தது. கவிஞர் காசி ஆனந்தனின் பாடலில் வரும் 'வெறிகொள் தமிழர் புலிப்படை' என்ற வரிகளைப் படித்த இலங்கையின் இரகசிய பொலிசார் சி. ஐ. டி. பஸ்தியாம்பிள்ளை போன்றவர்கள் கவிஞரை விசாரணைக்குட்படுத்திய போது கவிஞரிடம் நீ புலிப்படைக்காகத்தானே இப்பாடலைப் பாடினாய் என்று மிரட்டிய போது கவிஞர் காசி ஆனந்தன் கவிஞர் கண்ணதாசனின் திரைப்படப் பாடலான

''கொடி அசைந்ததும்-
காற்று வந்ததா
காற்று வந்ததும் கொடி-
அசைந்ததா!''

என்ற பாடலைச் சுட்டிக் காட்டி நான் பாடியமையால் புலிப்படை என்ற தீவிரவாத அமைப்பு உருவானதா? அல்லது தீவிர அமைப்பு உருவானபின்னால் நான்பாடினேனா? என்று பதில் கேள்வி எழுப்பினார். கவிஞர் காசி ஆனந்தன் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் இப்பாடலுக்காக கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். ஆனால் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களது இப்பாடலையும் இது போன்ற வேறு தமிழ் உணர்ச்சிப் பாடல்களையும் பாடியமைக்காக தேனிசை செல்லப்பா அவர்களோ தமிழகப் பொலிசாரால் முப்பது ஆண்டுகளுக்கு முன்னரேயே கைதாகி விசாரிக்கப்பட்டார். ஈழத்தமிழர் உரிமைக்குக்குரல் கொடுத்தமைக்காக தமிழக அரசியல் வாதிகள் கைதுசெய்யப்படுவதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரேயே ஈழத் தமிழருக்காகக் குரல் கொடுத்தமைக்காகத் தேனிசை செல்லப்பா அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்பது இங்கு குறிப்பி—ப்படவேண்டிய ஒரு விடயமாகும்.



நாம் தமிழர் இயக்கஸ்தாபகரும் முன்னாள் தமிழக சட்டசபை சபாநாயகருமான சி.பா. ஆதித்தனார் அவர்கள்தான் செல்லப்பாவுக்கு தேனிசை செல்லப்பா என்ற பட்டத்தினை வழங்கிக்கௌரவித்தார்.

தமிழ் நாட்டின் திருநெல்லி மாவட்டத்தைச் சேர்ந்த தேனிசை செல்லப்பா அவர்கள் தமிழ் நாட்டிலுள்ள வானொலி நிலையங்களிலும் தூரதர்ஷன் தொலைக்காட்சியிலும் பிலிப்பைன்சிலிருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலியிலும் வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

பல்துறை ஆற்றல் பெற்ற செல்லப்பா அவர்கள் பால வயதில் பிரபல திரைப்பட நடிகரும் நாடகக் கலைஞருமான நடிகவேள் எம். ஆர். ராதா அவர்களது நாடகங்களிலும் நடித்திருக்கின்றார்.

### விடுதலைப் புலிகளுடன் தொடர்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் தளபதி மாத்தயா மற்றும் பேபி ஆகியோரைத் திரு. செல்லப்பா 1981 ஆம் ஆண்டு சென்னையில் சந்தித்து அவர்களுக்கு அறிமுகமானதோடு நெருங்கிய நண்பருமானார். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கிடைத்த தொடர்பானது தேனிசை செல்லப்பா அவர்களது பாடல்களை ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தியது. 1981 ஆம் ஆண்டில் சென்னையில் தங்கியிருந்த விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி தலைவர் அஜித் மாத்தயா அவர்களின் அயராத முயற்சியால் திரு. செல்லப்பா அவர்களது தமிழீழ விடுதலை பற்றிய பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு நாடாவில் வெளியிடப்படலாயிற்று. அக்கால கட்டத்தில் இவ்வாறாக பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொள்வதற்கு ஆயிரம் ரூபா மட்டுமே செலவாகியது. பின்னர் தேனிசை செல்லப்பா அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் '' தமிழீழக் கீதங்கள் '', '' புயல் கால ராகங்கள் '', '' அந்நியர் வந்து புகல் என்ன நீதி '' ஆகிய ஒலிப்பதிவு நாடாக்களுக்கு குரல் கொடுத்தார். இந்த ஒலிப்பதிவு நாடாக்களில் கவிஞர் காசிஆனந்தன், புதுவை இரத்தினதுரை. கவிஞர் இன்குலாப் ஆகியோரின் பாடல்களை அவர் இசைத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் ஆதரித்தமையால் இந்திய வானொலியும் இந்திய தொலைக் காட்சியும் இவரை முற்றாக புறக்கணிக்கலாயின. ஆனால் அவர் மனம் தளர்ந்துவிடவில்லை. தொடர்ந்து தமிழ் ஈழ விடுதலைக்காகக் குரல் கொடுத்து வருகின்றார்.

தூரதர்சன் காட்சி வானொலி ஒளிபரப்பாகாத குக் கிராமங்களில் அவரை நேரில் பார்க்க முடிகிறது. இந்திய வானொலியை செவிமடுக்காத தமிழக கிராமத்து மக்களது செவிகளில் எல்லாம் அவரது குரல் கேட்கிறது. இன்று அவர் பாடாத நகரங்களோ கிராமங்களோ தமிழ் நாட்டில் இல்லை என்று சொல்லும்படியாக அவர் பாடல்கள் எங்கும் கேட்கின்றன. விடுதலைப் புலிகளின் கருத்துக்களை தமிழக மக்களுக்கு இசைவடிவில் எடுத்துச் சொல்லும் ஊடகமாக இன்று அவர் விளங்குகின்றார்.

உலகத்தில் தமிழர்கள் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் இன்று தேனிசை செல்லப்பாவின் குரல் கணீரென்று ஒலிக்கின்றது. அன்று வண. பிதா தனிநாயகம் அடிகளார் தமிழ் இலக்கியத் தூதுவராக தமிழர் வாழும் நாடுகளுக்கெல்லாம் சென்று வந்ததைப் போல் இன்று தமிழ் இசைத் தூதுவராக உலகை வலம் வந்து இவரது குரல் தமிழ் உணர்வைத் தட்டி எழுப்பிக் கொண்டிருக்கிறது.

இவரது குடும்பமே ஒரு இலட்சியக் குடும்பம். இன்று மேடைக் கச்சேரி என்றால் திரைப்படப் பாடல்களையும் துள்ளிசைப் பாடல்களையும் தான் காணமுடிகிறது. அப்படிப்பட்ட கால சட்டத்தில் இவரும் இவரது இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு மகனும் கிராமம் கிராமாகச் சென்று துவிச்சக்கர வண்டியில் தமிழ் உணர்ச்சிப்பாடல்களை மட்டுமே பாடிவருகிறார்கள். இவர்கள் செய்கின்ற பணி புனிதமான விடுதலைப் பணியாகும்.

> தலைவர் பிரபாகரன் மீது அளவு மீறிய பேரன்பும் பெரும்பற்றும்கொண்டவர் தேனிசை செல்லப்பா அவர்கள். இவர் 1983இல் பாடிய பாடல்களில் தலைவர் பிரபாகரனுக்கு பிடித்த பாடல் ''நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்'' என்ற பாடலாகும்.

ஈழம் வருகின்ற இவர்கள் இலங்கையில் தமிழ் மண்ணில் எட்டு மாவட்டங்களிலும் தலா இரண்டு சங்கீதக் கச்சேரிகள் வீதம் பதினாறு கச்சேரிகள் செய்யவுள்ளார்கள். தேனிசை செல்லப்பா குழுவினரோடு தற்போது தமிழகத்தில் பிரபல்யமாகிவரும் சுவர்ணலதாவும் வருகின்றார். இந்த இசைக் குழுவினருக்கு முழுத் தமிழினமும் கடமைப்பட்டுள்ளது. இவர்களது முதல் இசைக் கச்சேரி எதிர்வரும் திங்கட்கிழமை 23 ஆம் திகதி யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. முழுத் தமிழினமும் திரண்டு வந்து இவர்களுக்கு ஆதரவு கொடுப்பதே இவர்கள் செய்து வரும் தமிழீழ விடுதலைப் பணிக்கு சிறந்த கைமாறாகும். பன்னிரண்டு ஆண்டுகளின் பின் யாழ். முற்றவெளி மைதானம் தேனிசை செல்லப்பா குழுவினரின் தேனிசை மழைக்காக தயாராகிக் கொண்டிருக்கிறது. பன்னிரண்டாண்டில் மலரும் குறிஞ்சிமலரைப் போல் பன்னிரண்டு ஆண்டுகளின் பின் முற்றவெளியில் ஓர் இசைமலர் மணம் வீசுகின்றது. □

---

ஆய்வு

அமைந்திருந்தன. இதனால் இச் சாசனங்கள் தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் என அழைக்கப்பட்டன. இலங்கையைப்

கத்தில் இருந்துள்ளது எனவும் கூறினர். பிராகிருத மொழியில் அமைந்த இத்தகைய வரிவடிவம் சாசனங்களில் பல

யிலும் அதை அண்டிய பூநகரிப் பிராந்தியத்திலும் கிடைத்துள்ளன. மண்ணித்தலையில் ஆசிரியர் கு. மேகநாதன்

தமிழ் நாட்டில் பயன்படுத்தப்பட்ட பெரும்பாலான வரிவடிவங்களும் இங்கு கிடைத்துள்ளன. இதன் மூலம் இற்

தலையில் கிடைத்த இரண்டு மட்பாண்ட சாசனங்களில் ஒன்று ஈல எனவும் மற்றை

மானம் ஒன்றுதான் அடிப்-
படை

வெறிகொள் தமிழர் புலிப்-
படை – அவர்

வெல்வார் என்பது-
வெளிப்படை

இந்தப் பாடல் அறுபதுகளில் தமிழகத்தில் பிரபல்யமாகக் காரணமாக இருந்தவர் தேனிசை செல்லப்பா அவர்களாகும். அறுபதுகளில் தீவிரவாத அமைப்பு உருவானதா? அல்லது தீவிர அமைப்பு உருவானபின்னால் நான்பாடினேனா? என்று பதில் கேள்வி எழுப்பினார். கவிஞர் காசி ஆனந்தன் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் இப்பாடலுக்காக கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். ஆனால் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களது இப்பாடலையும் இது போன்ற வேறு தமிழ் உணர்ச்

## பொன். பூலோகசிங்கம்

கொடுத்தமைக்காகத் தேனிசை செல்லப்பா அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்பது இங்கு குறிப்பி—ப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

நாம் தமிழர் இயக்கஸ்தாபகரும் முன்னாள் தமிழக சட்ட சபை சபாநாயகருமான

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கிடைத்த தொடர்பானது தேனிசை செல்லப்பா அவர்களது பாடல்களை ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தியது. 1981 ஆம் ஆண்டில் சென்னையில் தங்கியிருந்த விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி தலைவர்

யர் வந்து புகல் என்ன நீதி'' ஆகிய ஒலிப்பதிவு நாடாக்களுக்கு குரல் கொடுத்தார். இந்த ஒலிப்பதிவு நாடாக்களில் கவிஞர் காசிஆனந்தன், புதுவை இரத்தினதுரை. கவிஞர் இன்குலாப் ஆகியோரின் பாடல்களை அவர் இசைத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழீழ விடுதலைப்


சொல்லும் ஊடகமாக இன்று அவர் விளங்குகின்றார்.

உலகத்தில் தமிழர்கள் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் இன்று தேனிசை செல்லப்பாவின் குரல் கணீரென்று ஒலிக்கின்றது. அன்று வண. பிதா தனிநாயகம் அடிகளார் தமிழ் இலக்கியத் தூதுவராக தமிழர் வாழும் நாடுகளுக்கெல்லாம் சென்று வந்ததைப் போல் இன்று தமிழ் இசைத் தூதுவராக உலகை வலம் வந்து இவரது குரல் தமிழ்

இவர்கள் செய்து வரும் தமிழீழ விடுதலைப் பணிக்கு சிறந்த கைமாறாகும். பன்னிரண்டு ஆண்டுகளின் பின் யாழ். முற்றவெளி மைதானம் தேனிசை செல்லப்பா குழுவினரின் தேனிசை மழைக்காக தயாராகிக் கொண்டிருக்கிறது. பன்னிரண்டாண்டில் மலரும் குறிஞ்சிமலரைப் போல் பன்னிரண்டு ஆண்டுகளின் பின் முற்றவெளியில் ஓர் இசைமலர் மணம் வீசுகின்றது. □

---

## தொல்லியல்




# குடாநாட்டில் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் தமிழ்மொழி இருந்ததற்கான தொல்லியல் சான்றுகள்....

- ப. புஸ்பரட்ணம் (விரிவுரையாளர், வரலாற்றுத்துறை)


தமிழரின் பாரம்பரிய பிரதேசமாகக் கொள்ளப்படும் பிரதேசங்கள் அதற்கான ஆக்க நிலையை எப்போது அடைந்ததென்பதையிட்டு வரலாற்று ஆசிரியர்கள் இடையே முரண்பட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன. இற்றைக்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் முதலியார் இராஜநாயகம் அவர்கள் தமிழ்ப் பிராந்தியங்களில் ஒன்றான யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் ஆதியில் தமிழ் மொழி பேசிய மக்கள் வாழ்ந்தனர் என்ற கருத்தை முன வைத்தார். உறுதியான தொல்லியல் ஆதாரங்கள் அற்ற நிலையில் இலக்கியச் சான்றுகளை மட்டும வைத்து இக்கருத்து கூறப்பட்டதனால் பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் பலரும் இக்கருத்துடன் உடன்பட்டு நிற்கவில்லை. ஆயினும் அண்மைக் காலங்களில் கந்தரோடை, வல்லிபுரம், ஆனைக்கோட்டை, களபூமி போன்ற இடங்களில் கண்டு பிடிக்கப் பட்ட திராவிடருக்குரிய பெருங்கற்காலப் பண்பாடு கிறிஸ்துவுக்குமுற்பட்ட காலத்தில் தமிழ் நாட்டை ஒத்த நாகரிகம் இங்கும் நிலவியதென்பதை உறுதிப்படுத்த உதவின. இருந்தும் இந் நாகரீக மக்கள் தமிழ் மொழியைத்தான் பேசினார்களா என்பதற்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை. கந்தரோடையிலும் வல்லிபுரத்திலும் இரு பிராமிச் சாசனங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தாலும் அவை பௌத்த மதம் சார்ந்த செய்திகளைக் கூறுபவையாக உள்ளன. இப் பிராந்தியங்களில் தமிழ் நாட்டை ஒத்த பௌத்த பண்பாடு இருந்ததற்கான ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டும் கூட இலங்கையில் பௌத்த பண்பாடு ஒரு மதத்தின் பண்பாடாக நோக்கப்படாது குறிப்பிட்ட ஒரு இனத்தின் பண்பாடாக கருதப்பட்டது. இதனால் இப் பிராந்தியங்களில் ஆதி காலத்தில் தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை தென்னிலங்கை வரலாற்று ஆசிரியர்கள் பலரும் ஏற்க முன்வரவில்லை. ஆனால் குடாநாட்டுடன் தொடர்புடைய பூநகரி பிராந்தியத்தைப் பொறுத்தவரை திராவிடருக்குரிய பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் பரவலாக கிடைத்திருப்பதோடு முதன் முறையாக கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திற்குரிய தமிழ்மொழிக்குரிய ஆதி வரிவடிவங்கள் பலவும் கிடைத்துள்ளன. இதன் மூலம் பூநகரியிலும் அதையண்டிய தமிழ்ப்பிராந்தியங்களிலும் ஆதியில் தமிழர் நாகரீகம் நிலவியதென்பதைத் தொல்லியல் அடிப்படையில் நிச்சயப்படுத்த முடிகிறது.

தென்னாசியாவில் பயன்படுத்தப்பட்ட காலத்தால் முந்திய வரி வடிவங்கள் பிராமி என அழைக்கப்பட்டது. இவை அசோகன் ஆட்சியில் (கி மு. 3ஆம் நூற்றாண்டு) தமிழ்நாடு தவிர்ந்த இந்தியாவின் பெரும் பகுதியில் பிராகிருத மொழியை எழுதுவதற்கு பயன்படுத்தப் பட்டது. இதனால் இவை அசோக பிராமி எனவும் வட பிராமி எனவும் அழைக்கப் பட்டது. சம காலத்தில் இதையொத்த வரி வடிவங்கள் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டாலும் அங்கு தமிழ் மொழிக்கேயுரிய தனித்துவமான வரிவடிவங்கள் பயன்படுத்தப்பட்டதோடு சாசனங்கள் தமிழ் மொழியில் அமைந்திருந்தன. இதனால் இச் சாசனங்கள் தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் என அழைக்கப்பட்டன. இலங்கையைப் பொறுத்தவரை இந்தியப் பண்பாட்டின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தால் பௌத்த மதத்தின் பரவலோடு இவ் வரிவடிவங்கள் இங்கும் அறிமுகமாயின. இலங்கையில் இவ் வரி வடிவங்கள் பெரும்பாலும் பிராகிருத மொழியில் பௌத்தமதம் சார்ந்த செய்திகளைக் கூறுவதினால் இவை வட இந்தியாவில் இருந்து பரவியவரி வடிவங்கள் எனவும் சிங்கள மக்களின் மூதாதையினர் அங்கிருந்து புலம் பெயர்ந்து வந்ததற்கு இது ஒரு சான்று எனவும் வரலாற்றாசிரியர்கள் பலரும் கூறினர். ஆயினும் சமீப காலத்தில் ஈழத்து அறிஞர்களான சத்தமங்கல கருணாரத்தினா, பெர்னாண்டோ போன்றவர் வரிவடிவங்களில் தமிழ்ப் பிராமிக்குரிய எழுத்துக்கள் இருப்பதைச் சுட்டிக் காட்டியதோடு வட இந்திய வரி வடிவம் இங்கு பரவமுன்னரே தமிழ்ப் பிராமி புழக்கத்தில் இருந்துள்ளது எனவும் கூறினர். பிராகிருத மொழியில் அமைந்த இத்தகைய வரிவடிவம் சாசனங்களில் பல தமிழ்ப் பெயர்கள் இருப்பதை தமிழ் நாட்டுச் சாசனவியலாளரான பேராசிரியர் ரி. வி. மகாலிங்கம், ஈழத்தில் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை கலாநிதி சி. க. சிற்றம்பலம் போன்றவர்களும் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

இலங்கையில் இதுவரை மூவாயிரம் அளவிலான பிராமிச் சாசனங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தாலும் குடாநாட்டில் மூன்று சாசனங்களே இதுவரை கிடைத்துள்ளன. இவற்றுள் கந்தரோடை மட்பாண்ட சாசனமும், வல்லிபுர பொற்சாசனமும் பௌத்த மதம் சார்ந்த செய்திகளைக் கூறுகின்றன. இவற்றுள் வல்லிபுர சாசன வரிவடிவங்கள் ஆந்திர நாட்டு வரிவடிவங்களை ஒத்ததென்பது பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் கருத்தாகும். ஆயினும் இத்தகைய சாசனங்களைக் காட்டிலும் தமிழர் வரலாற்றாய்வில் முக்கியத்துவம் பெறக்கூடிய பல வரிவடிவ ஆதாரங்கள் மண்ணித்தலையிலும் அதை அண்டிய பூநகரிப் பிராந்தியத்திலும் கிடைத்துள்ளன. மண்ணித்தலையில் ஆசிரியர் கு. மேகநாதன் அவர்களுடனும், வரலாற்றுத் துறை மாணவர்களுடனும் சில நாட்கள் மேற்கொண்ட சாதாரண தொல்லியல் மேலாய்வில் ஓர் இரு வரிவடிவங்கள் கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட மட்பாண்ட சாசனங்கள் கிடைத்துள்ளன. இத்தகைய சாசனங்கள் தமிழ் நாட்டில் அரிக்கன் மேட்டை தவிரஇந்தியாவிலோ இலங்கையிலோ வேறு இடங்களில்இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. சாதாரண மக்களின் பாவனைப் பொருட்களில் இத்தகைய வரி வடிவங்கள் காணப்பட்டமை இங்கு ஆதியில் எழுத்து வாசனை உடைய மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதையே எடுத்துக் காட்டுகிறது. இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் சிலவற்றில் இது வரை தமிழ்ப் பிராமிக்குரிய ளகரம், மகரம் ஈகரம் போன்ற வரி வடிவங்கள் இருப்பதை அடையாளம் காணப்பட்டிருந்தாலும் தமிழ் மொழிக்குரிய எல்லா வரி வடிவங்களும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் மண்ணித்தலையில் மேற்குறிப்பிட்ட வரிவடிவங்களோடு தமிழ் மொழிக்கே உரிய ழகரம், றகரம், னகரம் போன்ற வரிவடிவங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தமிழ் நாட்டில் பயன்படுத்தப்பட்ட பெரும்பாலான வரி வடிவங்களும் இங்கு கிடைத்துள்ளன. இதன் மூலம் இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் பூநகரியிலும் அதை அண்டிய ஏனைய தமிழ்ப் பிராந்தியங்களிலும் தமிழ் மொழி வழக்கில் இருந்ததென நிச்சயப்படுத்திக் கூறலாம். இப் பிரதேசத்தில் தமிழ் நாட்டைப் போல் வரிவடிவங்கள் அறிமுகமாவதற்கு முன்னர் நிலவிய இடைக்கற்காலப் பண்பாடும், பெருங் கற்காலப் பண்பாடும் பிற்காலத்தில் ரோம, அரேபிய, சீனத் தொடர்புகள் இருந்ததற்கான ஆதாரங்கள் பல கிடைத்துள்ளன. இவற்றின் மூலம் ஆதியில் இங்கு சங்க காலத்தை ஒத்த பழந்தமிழர் நாகரிகம் நிலவியதெனக் கருத இடமளிக்கிறது. இது இலங்கைத் தமிழரின் தொன்மையான வரலாற்றை தமிழ்ப் பிராந்தியத்தில் இருந்து ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பதை கோடிட்டுக்காட்டுகிறது

இலங்கை ஆதியில் ஈழம் என அழைக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் பல உண்டு. ஆனால் இது முழு இலங்கையைக் குறித்ததா அல்லது இலங்கையின் ஒரு பகுதியைக் குறித்ததா என்பதற்கு இலங்கையின் வரலாற்று மூலங்களில் ஆதாரங்கள் காணப்படவில்லை. ஆனால் மண்ணித்தலையில் கிடைத்த இரண்டு மட்பாண்ட சாசனங்களில் ஒன்று ஈல எனவும் மற்றையதை ஈழ எனவும் வாசிக்க ஓரளவுக்கு இடமளிக்கிறது. இது ஈழத்தைக் குறித்திருக்கலாம். பூநகரியில் ஓர் பிரதேசம் ஈழஊர் எனப் பாரம்பரியமாக அழைக்கப்பட்டதற்கு முதன் முறையாக உறுதியான ஆதாரம் கிடைத்துள்ளது. ஈழம் என்பதற்கு பொன் என்ற பொருள் உண்டு. இந்த ஈழ ஊரின் தொடர்ச்சியாக பொன்னாவெளி என்ற பிரதேசம் உள்ளது. இதுவும் ஆதியில் ஈழஊரின் ஒரு பிரிவாக இருந்திருக்க வேண்டும். சங்க இலக்கியங்களில் ஒன்றான பட்டினப் பாலையில் ஈழத்தில் இருந்து தமிழ் நாட்டிற்கு அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது பற்றிக் கூறுகிறது. அங்குள்ள திருப்பரங்குன்றம் பிராமிக் கல்வெட்டுப் ஈழத்துக் குடும்பிகன் என்ற வணிகன் சமணத்துறவிக்குத் தானம் செய்தது பற்றிக் கூறுகிறது. இதனால் தமிழ் நாட்டு வரலாற்று மூலங்களில் வரும் ஈழம் என்ற இடப்பெயர் ஆதியில் பூநகரிப் பிராந்தியத்தைக் குறித்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. எப்படி ஓர் இடத்திற்கு இடப்பட்ட பெயர் பிற்காலத்தில் ஓர் நாட்டைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)



2000 வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்மொழிக்கே உரிய ஈ, ன, ம, ழ, ற போன்ற எழுத்துக்கள்.

# பிறமொழிக்கதை

பனங்காணிக்குள்ளால் கால்களை எட்டிவைத்து விரைவாக நடந்து வந்த அந்த நீண்ட மீசைக்காரனின் முகம் கடுகடுப்பாய் இருந்தது. நெற்றியிலிருந்து வழிந்த வியர்வை அவருக்கு இன்னும் எரிச்சலை ஊட்டியது.

அவரது வேகத்திலும் பார்க்க அவருக்கென்று தனி மகத்துவம் இருக்கின்றது. அவர் எதிலும் விரைவுபடுத்துவதை விரும்பாதவர். அவர் தானே அந்தக் கிராமத்துப் பெரியமனிதர். அதிஉயர்ந்த சாதியைச் சேர்ந்தவரல்லவா அவர். அவருக்காக மற்றவர்கள் காத்திருக்க வேண்டும். ஆனால், இன்று அவரது விரைவு பயனற்றதாய் போய் விட்டது. அவரது பின்னேர வாடிக்கைப் பனங்கள்ளைக் குடித்து விட்டு மனைவி திட்டுவதற்கு முன் வீடு போய் சேரும் அவர், இன்று அதனைக் குடிப்பதற்கு வழக்கமாக வரும் நேரத்திலும் ஒரு மணித்தியாலம் பிந்தியே வந்தார்.

அவருக்கு மிகவும் கோபம் கோபமாக வந்தது. அவர் நன்றாகத் திட்டித்தீர்த்தார். இந்தப் பனங்கள்ளுக்காக இவ்வளவு தூரம் அந்தக் கள்ளுச் சீவுகின்ற பயலின் கொட்டிலுக்குப் போவது பெரிய அநியாயம். ஆனால் என்ன செய்வது? அதற்கு மாற்று வழி இல்லையே.

சமூக வழமைப்படி - பரம்பரை வழக்கப்படி ''இஞ்சை பார் மரமேறி'' என்று அவமதிப்புத்தனமாக பெரிய சாதிக் காரரால் அழைக்கப் படும் கீழ்சாதிக் காரரால் தான் அந்தச் சுவையான பனங்கள்ளை பனையிலிருந்து இறக்கிக் கொண்டு வர முடியும். இவர்களைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவதே தங்களுக்கு மரியாதைக் குறைவு என எண்ணுபவர்கள் அவர்களைத் தொடுவதே எவ்வளவு பெரிய இழிவுத்தனம் என நினைப்பார்கள். ஒரு தடவை இராஜதுரையின் கிணற்றிற்குள் மரமேறுபவனின் கயிறு தவறுதலாகவிழுந்ததற்கு அவர் கிணற்றைக் கலக்கி இறைப்பித்தார்.

இந்தத் தேவாமிர்தமான பானத்தை இந்தக் குப்பைச் சாதிக்காரன் இறக்குவதென்

உயர்ந்து கம்பீரமாக வளர்ந்து நிற்கும் பனை மரங்களை அண்ணாந்து ஓரக்கண்ணால் பார்த்தார்.

ஆ... அந்த ராஜபானத்தை அடக்கி வைத்திருக்கும் மகன் முட்டிகளை அணைத்து வைத்திருக்கும் பனை வட்டுக்களையும் பார்த்தார்.

அவருக்கு முன்பை விட தண்ணீர்த்தாகம் அதிகமாகியது. எட்டி நடந்தார். பனங்காணியைக் கடந்து வந்தபின் மண்ணால் கட்டி, காய்ந்த ஓலையால் வேய்ந்த பதிந்த கொட்டிலுக்குள் பிரவேசித்ததையிட்டு மகிழ்ச்சி அடைந்தார். அவர் கடப்புக்குக் கிட்ட வந்ததும் சற்றுத்தாமதித்தார். கடப்புக்கு அப்பால் ஒரு மேட்டில் சரிந்த மாட்டுக்கொட்டில் இருந்தது. அவருக்குக் கடப்பைக் கடந்து வரமனமில்லாமல் கடப்படியில் நின்று கொண்டு மாட்டுக் கொட்டிலுக்குள் ஆரோ நிற்பதை உணர்ந்தார்.

''இஞ்சைபார் மரமேறி.... நான் வந்ததை நீ காணேல்லையே இஞ்சைவாகிட்ட.... கெதியா வா....''

நாரியில் மாத்திரம் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு நின்ற மெல்லிய கூரிய உருவமொன்று ஆரென்று பார்ப்பதற்கு ஆவலோடு கடப்புக்குக் கிட்ட ஓடிவந்தது.

'ஐயா நீங்களே... என்னய்யா வேணும்...?'

'என்ரை பின்னேர வாடிக்கைப் பனங்கள்ளைத்தான் கேக்கிறன்... பின்னை உன்ரை சுகம் விசாரிக்க வந்தனான் எண்டு நினைச்சியே மடையா...' -ராஜரை கர்ச்சுசித்தார்.

கள்ளு விற்பவன் கைகள் இரண்டையும் ஒன்று சேர்த்துப் பிசைந்தான். பிசைந்து கொண்டு,

'கள்ளு இல்லை ஐயா... நான் கள்ளை வித்துப்போட்டன்... உங்களைப் பார் பாரெண்டு பார்த்துக்கொண்டிருந்திட்டு வழக்கமாக வாற நேரத்துக்கு ஒரு மணித்தியாலத்துக்கு மேலையாச்சுது... பின்னை நல்ல கள்ளை ஏன் வீணாக்குவான் எண்டு வித்துப்போட்டன்.... ஏன்...

கெடாதை ..' இராஜதுரை தனது காய்ந்திருந்த தொண்டையினால் ஏலுமட்டும் கத்தினார்.

அவன் தளைநாரைக்காலில் மாட்டி மரத்தின் அடியிலிருந்து தொத்தித் தொத்தி குரங்குபோல் ஏறிப்போவதை அமைதியில்லாமல் பார்த்துக் கொண்டு நின்றார். அவன் மரத்தில்ஏறும்போது அவனது கைகளும் கால்களும் ஒரே சீரில் அசைந்து கொண்டிருந்தன.

அவன் ஏறுவதைப் பார்க்கப் பயமாக இருந்தது. இருந்தும் இராஜதுரை அவனையே அண்ணாந்து பார்த்துக் கொண்டு நின்றார். அவன் பனைவட்டுக்குள் ஏறி, முட்டியைக் கழற்றித் தனது கத்திக்கூட்டில் சொருகிக்கொண்டான். ஒரு நொடியில் மரத்திலிருந்து இறங்கி, தனது கொட்டிலுக்குள் புகுந்து, இராஜதுரைக்கென்று மட்டும் தனியாக வைத்திருந்த புளாவைக் கொண்டு ஓடிவந்து நீட்டினான். நுரைகக்க கள்ளைப் புளாவிற்குள் விட்டு இரண்டு கைகளாலும் வெகு மரியாதையாகக் கொடுத்தான். இராஜதுரை மூன்று இழுவையில் அந்தக் கள்ளைக் குடித்து முடித்தார். முடித்துவிட்டு, தலையை நிமிர்த்தி ஆறுதல் பெருமூச்சு விட்டார். பின்பு மீசையிலிருந்த நுரையைப் பின்கையால் துடைத்தார்.

'மடையா, இது என்ரை நாக்கு நனையவும் காணாது .. இன்னும் கொண்டுவா... ஆனால் இன்றுமட்டும் ஞாப



படுக்கைக்கு வந்த காகங்கள் கூட பறந்து ஓடின. சிறிது நேரத்தில் கடப்பில் பிடித்தபடி தனக்கு முன்னால் கைகட்டிக் குனிந்து நிற்பவனைப் பார்த்தார். பார்வை மங்கலாகத் தெரிந்தது.

'கேளடா எளிய மரமேறிப் பயலே, இனிமேல் நீயெண்டாலும்சரி... உன்ரை ஆட்களெண்டாலும் சரி... என்னோடை சேட்டை விடுகிற நியாயத்தை வைச்சுக்கொள்ளக்கூடாது.... என்ரை வாடிக்கைக் கள்ளை வேறொருவனுக்கு விக்கிறதுக்கு... அதுகும் என்ரை கள்ளை.... உனக்கு நல்ல வெழுவை தர வேணும். ஆனால் உன்னைத் தொட்டாலே....கீழ்சாதியை... எனக்குத்தான் மரியாதையில்லை...' — தனக்கு முன்னால் பாவியர்போல் கைகட்டி வாய்பொத்தி குனிந்து நிற்பவனைப் பார்த்துவிட்டு அவனின் முகத்தில் பிளாவைச் சுழற்றி வீசி எறிந்தார்.

'இனிமேல் என்ரை வாடிக்கைக் கள்ளை ஆருக்கும் வித்தியெண்டால் உன்ரை சீவிய காலத்துக்கும் நினைச்சு வருந்துகிறமாதிரித்தான் தருவன்.... ஓ போடா பயலே அங்காலை.... எனக்கு முன்னுக்கு நிக்காதை....'

அந்தப் பயந்த மனிதன் மெல்ல நகர்ந்து அப்பால் சென்றான். தனது கடப்புப் பிடியை மெல்லத் தளர்த்திக் கொண்டு பனங்காணிக்குள் நகர்ந்தார்.

தனது சோர்வுற்ற கண்களைப் பாடும்படி உந்த . ஓ... இது சாதுவான வெறிதான்.

தனக்கு வெறி என்று ஒத்துக்கொண்டதே அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் தொடர்ந்தும் நடக்கத் தொடங்கிய பொழுது அவருக்கு மீண்டும் பாட்டு வந்தது. அவர் நடந்தார். அப்படியேபோய் ஒரு மரத்தோடு முட்டி விழுந்தார். பின்பு எழுந்து இருட்டில் பனங்காணிக்குள் அங்கும் இங்கும் அலைந்தார். ஒரு கறுத்த பனைமரக்குத்தி மீது இடறுப்பட்டார். அவர் தொடர்ந்து பிதற்றியதால் அவருக்குக் கொஞ்சம் தெளிவு வந்தது போல் இருந்தது. பயத்தைக் காட்டாமல் இருப்பதற்காக புதுப்பாட்டொன்றைப் பாட ஆரம்பித்தார். அப்படியே தொடர்ந்து பாடினார்.

பின்பு, பாட்டுகள் வராததால் சத்தம்போடாது அமைதியாக அலைந்து திரிந்தார். அவருக்குப் பழகிய ஓர் வெளியில் நிற்பதுபோல் உணர்ந்தார். அந்த வெளியில் நல்ல மெல்லிய காற்று வீசியது. பின்பு தன்னைக் கூர்ந்து பார்த்துவிட்டு, தான் கள்ளு விற்றவனின் கடப்பைத்தான் சுற்றிச்சுற்றி வந்ததாக உணர்ந்தார.

மெல்லிய காற்று அவரைச் சிறிது சுய உணர்வு நிலைக்கு கொண்டு வந்தது. அவருக்கு மனத்தில் ஏதோ ஓர் பயம் நெருடிக் கொண்டு வந்தது.

சிவ சிவா அவருடைய மனைவி என்ன சொல்லுவாள்? அவருக்கு வெறியெண்டு அவள் கண்டு பிடித்தால் அவள் சன்னதம் கொள்ளுவாள். அந்த நினைவே அவரை இன்னும் சிறிது தெளிந்த நிலைக்குக் கொண்டு வந்தது.

இராஜதுரை கிறுகிறுக்கும் தலையால் தன்னால் இயன்ற மட்டும் யோசித்தார். அவருக்கு யோசிக்க வேண்டியிருந்தது. ஆம். அதுதான். அவர் திரும்பியும் கள்ளுவிற்பவனின் கடப்புக்குப் போனது ஒரு தெய்வாதீனச் செயல்தான்.

கள்ளு விற்பவனைக் கூப்

சவர்க்கார நுரை போடப் படுவதுபோல அவருக்கு இருந்தது. அவர் தனது உள்ளங்கையை ஓங்கி அடித்தார்.

அவரது முகம் ஏதோ ஒரு கரடு முரடான ஒன்றை உரஞ்சுவது போல் உணர்ந்தார். அவர் திடுக்கிட்டு விழிந்துப் பார்த்தார். அப்போது அவரை நக்கிக் கொண்டிருக்கும் மாட்டின் கண்களைக் கண்டார். திடீரென எழுந்து பார்த்த பொழுது தான ஒரு அசிங்கமான– அசுத்தமான மாட்டுக் கொட்டிலுக்குள் அதுவும் நிலத்தில் மாட்டுக்குப் பக்கத்தில் படுத்திருந்ததை உணர்ந்தார். அவர் எழுந்து நின்று தூசியையும் ஊத்தையையும் தட்டினார். தனது வேட்டியில் மண்ணும் சாணகமும் பிரண்டு கிடந்ததைக் கண்டார்.

வெளியில் பார்த்தபொழுது தான் இரவை அந்த மாட்டுக் கொட்டிலில்தான் கழித்தார் என்பதை உணர்ந்தார். அவருக்குக் கண்கடை தெரியாத கோபம் வந்ததால் நடுநடுங்கிப் போய் பின்பு தன் மீது இனந்தெரியாத பரிதாபம் ஏற்பட்டது.

அவருக்கு ஏன் இந்தக் கதி வந்தது? அவர் வைக்கோலின் மீது விழுந்து கிடந்து தலையை மண் சுவரில் சாய்த்தார். எரியும் கண்களை மூடிக் கொண்டு பக்கத்தில் உள்ள அழுக்குகளைப் பற்றி யோசித்தார். யோசிப்பதற்கு கூட அவருக்கு முயற்சி தேவைப்பட்டது.

கள்ளுச் சீவுகின்றவனின் காணிக்குள் காலடி வைப்பதையிட்டே பெரிய புரட்சி செய்தவர் இவர் இப் பொழுது அவனது மாட்டுக் கொட்டிலுக்குள் படுத்துக் கிடந்தார் அவனைத் தொட்டு அடிப்பதுவே தனக்கு மானக்கேடு என நினைத்து அவனைத் தொடாது இருந்தவர் இப்பொழுது கள் இறக்குபவனின் பசுமாடு தனது முகத்தை நக்கிவிட்டது அவருக்கு பெரிய தொரு விழுக்காடு. அவமானம். அவரது மகத்துவம் வெடித்துப் பல துண்டுகளாகச் சிதறிப் பரவிக்கிடந்தன. சமூகத்தைப் பற்றிய அவரது அபிப்பிராயங்கள் 'வெறுமை'யாகி தன்னைப் பார்த்துச் சிரிப்பதாக உணர்ந்தார்.

தான் ஒரு அசல் மடையன் என நினைத்தார். அவர் சிறுபிள்ளை விளையாட்டு விளையாடித் தோற்றுப் போனார்

இராஜதுரை கண்களைத் திறந்தார். பனைமரங்களுக்கிடையே சூரியனின் கதிர்கள் வந்து இவரது முகத்தில் விழுந்தன.

நன்றாக விடிந்துவிட்டது.

அவருக்கு நன்றாகத் தெளிவு ஏற்பட்டது, மாட்டுக் கொட்டிலால் வெளியில் வந்து கள் இறக்குபவன் வீட்டிற்குப் போகும் பள்ளமான முற்றத்தில் வலு கஷ்டப்பட்டு இறங்கினார்.

இராஜதுரையைக் கண்டு பயந்த கள் இறக்குபவன் மிகவும் கலவரமடைந்தவனாகக் காணப்பட்டான்.

'' ஆ.... வேலு... என்னுடைய அன்புக்குரிய மனிதன் நீ தான் ...... நான் உள்ளுக்கு வரலாமா?... நான் இரவு முழுவதும் உன்னுடைய மாட்டுக் கொட்டிலுக்குள்தான் படுத்திருந்தேன் ....'' என்று கூறிக் கொண்டு இராஜதுரை வேலுவின் வீட்டு விறாந்தைக்குள் கால் வைத்தார்.

(யாவும் கற்பனை)

நன்றி: சண்டே ஒப்சேவர்

ஆங்கிலமூலம் : வெஸ்லி காசிநாதர்

தமிழில் : துரை சுப்பிரமணியம்



கவிதை

## எத்தரைக் கலைத்தோம் எழுந்திடு சித்திரையே!

சித்திரை நங்கை

பார் மரமேறி'' என்று அவ மதிப்புத்தனமாக பெரிய சாதிக் காரரால் அழைக்கப் படும் கீழ்சாதிக் காரரால் தான் அந்தச் சுவையான பனங்கள்ளை பனையிலிருந்து இறக்கிக் கொண்டு வர முடி யும். இவர்களைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவதே தங் களுக்கு மரியாதைக் குறைவு என எண்ணுபவர்கள் அவர் களைத் தொடுவதே எவ்வ ளவு பெரிய இழிவுத்தனம் என நினைப்பார்கள். ஒரு தடவை இராஜதுரையின் கிணற்றிற்குள் மரமேறுபவ னின் கயிறு தவறுதலாகவிழுந் ததற்கு அவர் கிணற்றைக் கலக்கி இறைப்பித்தார்.

இந்தத் தேவாமிர்தமான பானத்தை இந்தக் குப்பைச் சாதிக்காரன் இறக்குவதென் பது இந்தப் பானத்திற்கே அவமதிப்பாகும். உலகத்தில் இப்படி எத்தனையோ அநியா யங்கள் நடைபெறுகின்றன. இவைகள் எல்லாவற்றையும் இங்கு பெரிய சாதிக்காரர் பொறுத்துக் கொண்டு சீவிக்க வேண்டும்.

இவருக்குள்ள பிரச்சினை களுக்கெல்லாம் மேலான பிரச்சினை இவரது மனைவி. அதாவது, இவரால் கையா ளப்படமுடியாத ஒரு மனிதப் பிறவி அவள்தான். அவர் பெண் சாதிக்குத் தெரியாமல் தான் குடிப்பார். அதைக்கூட மனைவிக்குத் தெரியவந்து அடித்துக் கேட்டால் ஒத்துக் கொண்டு விடுவார்.

பனை மரங்கள் நெருக்க மாக வளர்ந்திருப்பதால் சிறிது வெப்பமாகவும் மந்தா ரமாகவும் இருந்தது. ஆனா லும் திருவாளர் இராஜதுரை அவைகளைக் கடந்து வரும் போது மிகவும் அன்போடும் ஆதரவோடும் அவைகளை அண்ணாந்து பார்த்தார்.

இங்குதான் அவருக்கு மிக வும் ஆனந்தமாக இருந்தது. சிறிது நடையின் வேகத்தைக் குறைத்தார். எந்தப்புயற் காற்றெண்டாலும் இந்த நாற் பதடி உயரிய மரங்கள் ஆடா மல் அசையாமல் கம்பீரத் தோடு நிற்கும் கண்ணுக்கு விருந்தான அழகைப்பார்த்து ஒரு போதும் அவர் களைத் துப் போனதேயில்லை.

ஒரு குழந்தைப்பிள்ளை கூடக் கட்டிப்பிடிக்கக் கூடிய அதன் மெல்லிய ஒழுங்கான சுற்றளவைக் கண்டு வழக்க மாக வியப்பதுண்டு. அது எவ்வளவு தான் மெல்லீசாக இருந்தாலும் அதன் வட்டுக் குள் உள்ள அத்தனை ஓலை களையும் தாங்கி நிற்க வல் லது.

இராஜதுரை தனக்கு மேல்

'என்ரை பின்னேர வாடிக் கைப் பனங்கள்ளைத்தான் கேக்கிறன்... பின்னை உன்ரை சுகம் விசாரிக்க வந்தனான் எண்டு நினைச்சியே மடையா...' -ராஜரை கர்ச்சு சித்தார்.

கள்ளு விற்பவன் கைகள் இரண்டையும் ஒன்று சேர்த் துப் பிசைந்தான். பிசைந்து கொண்டு,

'கள்ளு இல்லை ஐயா... நான் கள்ளை வித்துப்போட் டன்... உங்களைப் பார் பாரெண்டு பார்த்துக்கொண் டிருந்திட்டு வழக்கமாக வாற நேரத்துக்கு ஒரு மணித்தியா லத்துக்கு மேலையாச்சுது... பின்னை நல்ல கள்ளை ஏன் வீணாக்குவான் எண்டு வித் துப்போட்டன்.... என்னை மன்னிக்க வேணுமய்யா.... நீங்கள் இவ்வளவு நேரம் செல்ல வருவீங்களெண்டு நான் நினைக்கேல்லை...'

'எட மடப்பயலே.... நான் எப்பவெண்டாலும் என்ரை வாடிக்கைக் கள்ளைத் தவற விட்டிருக்கிறேனா....? என்ரை வாடிக்கைக் கள்ளை இன் னொருதனுக்கு விற்றிருக்கி றாய்.... இந்த வம்புவேலைக்கு என்ரை பெடியங்களிட்டைச் சொல்லிவிட்டால் என்ன நடக்குமெண்டு தெரியுமே....? உன்ரை கொட்டில் கிட்டிலெல் லாம் எரிச்சுச் சாம்பலாக்கி விட்டிடுவாங்கள் தெரி யுமே....?'

'இப்ப எனக்கு எங்கை யெண்டாலும் ஓடிப்போய் குடிக்கக் கள்ளு வாங்கிக் கொண்டுவா.... இல்லையெண் டால் என்ன நடக்குமெண்டு தெரியுமே.'

'ஐயா என்னை மன்னி யுங்கோ... வேறை கள்ளு என் னட்டை இல்லை.,,, நாளைக் குக் காலமைக்குக் குடுக்கிற துக்குத்தான் உந்தப் பனை யிலை முட்டி கட்டியிருக்கி றன் ' அவன் வேறு வழியில் லாமல் ஒரு பெருமூச்சைவிட்டு மீண்டும் தொடர்ந்தான்.

'அதுகூட அரைமுட்டி கள் ளும் இப்ப வந்திருக்காது... இப்ப எனக்குப் பனைகளும் குறைவு...

'இப்ப கனபேர் இஞ்சை கள்ளுச்சீவுகிறவை... ஏதோ நான் சீவியத்துக்காக இந்தப் பனைகளை அறுத்துச் சீவிக் கொண்டிருக்கிறன்... இந்த அரைமுட்டி கள்ளோடை இண்டைக்கு மட்டும் பார்த் துச் சரிக்கட்டிக் கொள் ளுங்கோ...'

'சரி... ஓடிப்போய் இறக் கிக்கொண்டுஓடிவா... உதிலை நிண்டு சிணுங்கி மினைக்




கத்தில் வைத்துக்கொள்... கள்ளுக் கொண்டு வருமட்டும் வேறை கதை ஒன்றும் இருக் கக்கூடாது...'

'கடவுளே, வீட்டிலை இருக் கிற நான் காலையிலை கொண்டுவந்து பெண்பனைக் கள்ளு... அந்தக் கள்ளு எப் பிடி இருக்குமெண்டு கடவு ளுக்குத்தான் தெரியும் .. உங் களாலை அந்தக் கள்ளை குடிக்க ஏலாது... அது நல்ல குடிகாரருக்குத்தான் சரி .. அது காலையிலிருந்து புளிச் சுக்கொண்டிருக்குது...'

'சத்தம் போடாதையடா மடையா.... நீ நினைக்கிறாய் உன்ரை கள்ளு என்ரை தலை, வயிற்றிலும் பார்க்க வலிமை கூடினதெண்டு... நான் பிறக் கேக்கையே சகலகலாவல்லவ னாகத்தான் பிறந்தனான். உன்ரை கள்ளு என்னை ஒண் டும் செய்யாது... கொண்டுவா அந்தக் கள்ளையும்....'

அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் அந்தக் கள்ளையும் கொண்டுவந்து கொடுத்தான்.

குடித்துச் சிறிது நேரத்தில் இராஜதுரை கரகரப்பான குரலில் பாடத் தொடங்கி னார். இரவில் வெலியில்

ளால் நிலத்தைப் பார்த்தார். தனது பாதத்தினடியில் இருக் கும் நிலம் அசைவது போல அவருக்கு ஓர் உணர்வு. கெட் டியாக நிற்கும் பனைமரங் கள்கூட அங்கும் இங்கும் அசைவதுபோல இருந்தது அவருக்கு. அவருக்கே சாது வான பயம் வந்தது. கள்ளு விற்பவனின் துணையோடு வீடுபோய் சேருவமோ என்ற எண்ணமும் வந்தது. இந்த 'ஊத்தை'களைக் கூட்டிக் கொண்டு போவதை மற்றவை கண்டால் தனக்குத்தான் தாங்கமுடியாத அவமானம் என்று நினைத்து அந்த எண் ணத்தை அறவே கைவிட் டார். இப்படியான நினைவு வந்ததே வெறியாலைதான். வெறி' இராஜதுரை ஆட்டம் போட்டு நின்றார். தெளிவாக யோசிப்பதற்கு தன்னாலான மட்டும் முயன்றார். இது உண்மையில் அதுவாகத்தான் இருக்குமோ. வாழ்க்கையில் இதுதான் முதற்தடவை சிவ.... சிவா.... மன்னிச்சுக்கொள் ளும்.... உண்மையில் யோசிக் கும் பொழுது வாழ்க்கையில் ஒருநாளும் இப்படி இருந்த தில்லை. தலையிலும் நெஞ்சி லும் காற்றுப்போல.... கால் கள் பலமற்று நிற்கமுடியா மல்.... ஏதோவொன்று தனது இளந்தாரிக்கால பாட்டுக

நெருடிக் கொண்டு வந்தது.

சிவ சிவா அவருடைய மனைவி என்ன சொல்லு வாள்? அவருக்கு வெறி யெண்டு அவள் கண்டு பிடித் தால் அவள் சன்னதம் கொள் ளுவாள். அந்த நினைவே அவரை இன்னும் சிறிது தெளிந்த நிலைக்குக் கொண்டு வந்தது.

இராஜதுரை கிறுகிறுக்கும் தலையால் தன்னால் இயன்ற மட்டும் யோசித்தார். அவ ருக்கு யோசிக்க வேண்டியி ருந்தது. ஆம். அதுதான். அவர் திரும்பியும் கள்ளுவிற் பவனின் கடப்புக்குப் போ னது ஒரு தெய்வாதீனச் செயல்தான்.

கள்ளு விற்பவனைக் கூப் பிட்டு அவன் மூலமாகத்தான் இரவு முழுவதும் சாகக்கிடக் கும் தனது சிநேகிதனின் கட்டிலுக்குப் பக்கத்தில் இருப் பதாகவும், அனேகமாக விடி யும் மட்டும் அப்படி இருக்க வேண்டி வருமென்று தனது மனைவிக்கு அறிவித்து விட்டு தான் போய் தனது சிநேகித னின் வீட்டில் படுத்து இந்த வெறியைப் போக்கி விடுவ மென்றும் யோசித்தார்.

அவருக்கு முன்புபோல நெஞ்சுக்குள் காற்றுப் போல இருந்தது. தனக்கு வெறி யென்று உணர்ந்தார். தள் ளாடித்தள்ளாடிப் போய் கள் ளு விற்பவனின் கடப்பில் பிடித்துக் கொண்டு மனை விக்குச் செய்தி அனுப்புவதற் காக அவனைக் கூப்பிடமுயன் றார். அவரால் முடிந்தது கரகரத்தகுரலில் ஒரு அழுகை மாத்திரமே.

தனக்கு முன்னால் இருந்த கடப்பைப்பிடித்துக் கொண்டு அங்கும் இங்கும் ஆடுவது அவருக்குச் சாதுவாக ஞாபக மிருந்தது. பின்பு விழுந்து, எழுந்து, கள்ளுச் சீவுகின் றவனின் கொட்டிலுக்குத் தள்ளாடிக் கொண்டு விழு கின்ற நிலையில் அந்த மண் சுவரைப் பிடித்தார். பின்பு தனக்குக் கீழ் ஒரு கடின மான நிலம் இருப்பதையும் அந்தப் பதிந்த கொட்டில் தனக்கு இடித்தது போலவும் இருந்தது. பல மணி நேரத் துக்குப் பின்பு இராஜதுரை நல்ல உறக்கத்தில் கிடப்பது அந்த நல்லநிலவில் தெரிந்தது.

அவரது சவரத்தொழிலாளி அவருக்குச் சவரம் எடுக்க முகத்தில் மிகவும் மெதுவா கச் சவர்க்கார நுரையைப் போடுவது போல கனவு கண் டார்.

''எட மடையா, கெதியாய் அலுவலை முடியடா ....'' அவர் நித்திரையில் கத்தி னார். ஆனால் தொடர்ந்தும் கூட அவருக்கு முயற்சி தேவைப்பட்டது.

கள்ளுச் சீவுகின்றவனின் காணிக்குள் காலடி வைப்ப தையிட்டே பெரிய புரட்சி செய்தவர் இவர் இப் பொழுது அவனது மாட்டுக் கொட்டி கொண்டு இராஜதுரை வேலு வின் வீட்டு விறாந்தைக்குள் கால் வைத்தார்.

(யாவும் கற்பனை)

நன்றி: சண்டே ஒப்சேவர்

□




## எத்தரைக் கலைத்தோம் எழுந்திடு சித்திரையே!

சித்திரை நங்கை
நித்திரை ஆனாள்
தட்டி எழுப்புங்கள்!

முத்திரை பதித்த
எத்தனை காலம்
நித்திரை நீத்திருந்தாள்?

அக்டோபர் திங்கள்
முக்காடு போட்ட
வேக்காடில் துயின்றாளோ?

ஜூலையில் ஜூபிலி
வேளையில் இணைந்த
காலையில் துயின்றாளோ?

நித்திரை போதும்
சித்திரை வந்தது
சிரித்து மகிழ்ந்திடவே!

இத்தரை வந்த
எத்தரைக் கலைத்தோம்
எழுந்திடு சித்திரையே!

- தேவி பரமலிங்கம்

## வைரவரிகள்

□ மனிதன் சுதந்திரத்தோடு தான் பிறக்கிறான்; ஆனால் எங்கு நோக்கினும் அவன் அடிமைத்தளைகளில் பிணைக்கப்பட்டே காட்சியளிக்கிறான்.

□ ஒரு மனிதன் தனது சுதந்திரத்தை இழந்துவிட்டான் என்று சொன்னால் அவன் தனது மனிதத்தன்மை யையே இழந்துவிட்டான் என்று தான் அர்த்தமாகும். மனித சமுதாயத்தின் அங்கத்தினன் என்ற முறையில் அவனுக்குள்ள உரிமைகளையும் கடமைகளையும் கூட அவன் இழந்தவனாகிறான்.

□ சுதந்திரம் என்ற பழம் எல்லாவிதமான சீதோஷ்ண நிலைகளிலும் வளருவதில்லை; இதனால் எல்லா மக்களினங்களாலும் சுதந்திரத்தை அடைந்து விட முடியாது.

-: ரூஸோ :-

# இலக்கியத்தடம்

### பெண் எழுத்தாளர்கள்-

''உலக வரலாற்றிலேயே முதலாவது பெண் பிரதமரை அளித்த பெருமை ஈழ நாட்டுக்கே உண்டு. இதன் காரணமாக ஈழத்துப் பெண்கள் எழுத்துத்துறை உட்பட எல்லாத்துறைகளிலும் முன்னணியில் நிற்கின்றார்களென்று வெளிநாட்டினர் நினைப்பதற்கு இடமுண்டு. ஆனால் வேறு துறைகளில் எப்படியோ எழுத்துத்துறையிலே பெண்களுடைய முயற்சிகள் திருப்திதரத்தக்கனவாக இல்லை''

மேற்குறித்த கருத்து இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்கள் 1964 ஆம் ஆண்டு எழுதிய ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்னும் நூலில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்ற நூல் வெளியாகி இன்றைக்கு இருபத்தியாறு வருடங்கள் ஆகின்ற நிலையில் கூட இலக்கியத் துறையில் பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு திருப்திகரமானதாக உள்ளதா?

பல வருடங்களுக்கு முன்னர் ஆற்றலுடன் எழுத ஆரம்பித்து பெயர் பெற்ற ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், சௌமினி, குந்தவை, யோகேஸ்வரி கணேசலிங்கம், கவிதா போன்றவர்கள் எல்லாம் எமது இலக்கியப் படைப்பாளிகளுக்கே உரிய (!?) இயல்பான தன்மையினால் என்னவோ இப்போது எழுத்து உலகில் இருந்து காணாமல் போய் விட்டார்கள்.

விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர்தான் (கோகிலா மகேந்திரன், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், தாமரைச் செல்வி, .... என்று) தொடர்ந்து எழுதி வருகின்றார்கள். இவர்களே தரமாகவும் எழுதி வருகின்றனர்.

சிறுகதை, கவிதை, நாவல் என்று பார்த்தால் என்ன பெண்கள் தொடர்பான பிரச்சினை வெளிக் கொண்டு வரும் கட்டுரைகளாக இருந்தால் என்ன பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு வெகு குறைவாகவே உள்ளது.

இதற்கு என்ன காரணம்? தற்போதைய நிலைமையில் கல்வியில் (உயர்கல்வி உட்பட) பெண்களே முன்நிலை வகிக்கின்றார்கள். இருந்தாலும் கூட அவர்களால் இவற்றில் ஏன் அதிக அக்கறை காட்ட முடியவில்லை?

### அக்கறையின்மை:-

பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றுக்கு எழுதும் பல பெண்கள் சமையல் குறிப்புக்கள், கோலக்கலை, உடை அலங்காரம் என்று குறிப்பிட்ட ஒரே வட்டத்தினுள் சுற்றுபவர்களாக உள்ளனர். இதற்காகவே தென்னிந்திய மங்கை, மங்கையர் மலர் போன்ற சஞ்சிகைகளை வாங்குபவர்கள் அனேகம்பேர்.

இன்னும் ஒரு சிலர் வானொலி நிகழ்ச்சிகளில் அதிக அக்கறை காட்டுவதுடன் தமிழ் சினிமாக்களுக்கு நிகரான காதல்கதைகளைக் கொண்ட கதைகளை, இசையும் கதைகளை, கவிதைகளை எழுதி வானொலியையும் மகிழ்வித்து தாங்களும் மகிழ்கின்றனர்.

உண்மையில் எமது பெண்களின் மனோபாவம், மிகுந்த கவலைக்குரிய நிலையிலே தான் உள்ளது சுதந்திரமான, கட்டுப்பாடு இல்லாத போக்குவரத்தும், நினைத்தபடி நாகரீகமாகவும் இருப்பதும் தான் உயர்ந்த பட்சநிலை என்று பலர் நினைப்பதும் பூரணமாக அவர்கள் விழிப்புணர்ச்சி பெறாமைக்குக் காரணமாகும்.

அது காரணமாகவே பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை முதன்மைப்படுத்தும் எத்தகைய படைப்புக்களிலும் அவர்களுக்கு நாட்டம் ஏற்படாமை என்று எண்ணத் தோன்றுகின்றது.

### பெண்களின் ஆக்கங்கள்

புதிதாக எழுத முனையும் பல பெண்கள் கூட எமது மண், எமது மக்கள் என்ற பிரக்ஞை இன்றி எந்தத் தளத்தில் நாங்கள் வாழ்கின்றோம் என்று தத்தமது தனித்துவத்தினை உணரமுடியாது, கனவுலகக் கதைகளை ஏனைய படைப்புக்களை படைக்க முனைகின்றனர்.

''அத்தை மகனும்'', ''வரதட்சணை'', ''காலேஜ்'' என்ற மாதிரியான சொற்பிரயோகங்களுடன் தமிழ்நாட்டு மணம் அதீதமாக மணக்க தமது ஆக்கங்களை உருவாக்குகின்றனர்.

இந்தநிலை பெண்களில் மாத்திரம் தான் என்று இல்லை. ஆனால் பெரும்பாலும் புதிதாக எழுதும் பெண்களே இவ்விதம் எழுதுகின்றனர்.

இதற்காக அவர்களைக் குறைகூறவில்லை. அவர்களின் மீது பிழையையும் சுமத்த முடியாது. அவர்களது வாசிப்பு மூலங்கள் இந்திய சஞ்சிகைகளே, அது சாதாரண சஞ்சிகைகளாக இருந்தால் என்ன வேறு எதுவாக இருந்தால் என்ன?

எனவே எமது எழுத்தாளர்களின் நூல்களை, எமது மண்ணில் வெளியாகும் தரமுள்ள படைப்புக்களை வாசிக்கும் பழக்கத்தினை உருவாக்கி சிறந்ததேடலை வளர்ப்பதன் மூலம் தான் அவர்கள் தங்கள் சுயத்தினைப் பேணமுடியும். வளர்க்க முடியும்.

### பெண் விடுதலை:-

சாந்தி சச்சிதானந்தம் எழுதிய ''பெண்களின் சுவடுகளில்'' என்னும் நூலில் ஒரு விவாதத்தை நோக்கிய முன்னுரை என்னும்பகுதியில் சில ஆரம்ப பகுதிகள்.

''பெண்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளைக் கண்டித்தும் ஆண் பெண் வேறுபாடுகளின் அடிப்படையில் பெண்கள் புறக்கணிக்கப்படுவதையும் பாரபட்சம் காட்டப்படுவதையும் எதிர்த்தும் ஆணாதிக்கத்தின் கோர சொரூபங்களைத் தோலுரித்துக் காட்டியும், ஆண்களோடு சமத்துவம்கோரியும் பெண்கள் ஆங்காங்கே ஒன்றுதிரண்டு குரல் எழுப்பத் தொடங்கி விட்டனர். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்தும் தீ இன்று ருத்ரம் கொண்டிருக்கிறது.

சிறு பத்திரிகைச் சூழலிலும், உயர்கல்விக் குழுவினரிடம் மட்டுமே சருக்கட்டியிருந்த பெண்விடுதலைச் சிந்தனைகள் இன்று அடிமட்டப் பெண்கள் மத்தியிலும் வியாபகம் பெற்று வருகிறது. சமூகச் சுரண்டலுக்கும் ஆணாதிக்க ஒடுக்கு முறைக்கும் நிரந்தரமாய் இரையாகிப் போய் விட்ட உழைக்கும் மாதர் மத்தியில் இந்தச் சிந்தனைகள் வேர் கொண்டால் மாத்திரமே பெண்ணினம் தலை தூக்குவது சாத்தியமாகும்.

பெண்களின் சமகாலப் பிரச்சினைகளை, முரண்பாடுகளை, போராட்டங்களை, அதன் தெளிவான வரலாற்றுப் பின்னணியில் வைத்துப் பரிசீலனை செய்தால் தான் பெண் விடுதலையின் இலக்குகளை நாம் இனங்காண முடியும்.

### சிறுவர் நாடகங்கள்:-

''தப்பி வந்த தாடி ஆடு'' எனும் கலாநிதி சி. மௌனகுரு அவர்களது சிறுவர் நாடக நூலின் முன்னுரையின் சிலபகுதிகள்.

''எமது சிறுவர் மத்தியில் இடம்பெறும் நாடகங்களை எடுத்துப் பாருங்கள். கர்ணன் குந்தி கதை இவற்றுள் ஒன்று. கர்ணனின் அனுபவமும், குந்தியின் அனுபவமும் சிறுவர்களின் அனுபவத்திற்குட்படாததொன்று. அன்றியும் தாம் பிள்ளைகள் பெற்ற முறையையும் சன்னிப் பருவத்தில் தான் கர்ணனைப் பெற்றெடுத்த கதையையும் குந்தியாகவரும் சிறுவனோ, சிறுமியோ மேடையில் ஒப்புவிப்பர். இவ்வார்த்தைகள் அவர்களின் அனுபவத்திற்கு மீறியவை என்பதுடன், சிறார்களின் மனப்பாங்கையும் இக் கருத்துக்கள் பாதிப்பன. பரத நடன காரரும் இவ்வண்ணமே ஆறுவயதுப் பிஞ்சுக்கு ராதை வேடமிட்டுக் கண்ணனைக் காணாமல் விரகதாபமுறுவதாக அபிநயிக்க, அப்பிஞ்சுக்குக் கற்றுத்தருவர். இங்கெல்லாம் பிள்ளை, ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதைப் போலச் செய்கிறதே Imitate) தவிர, சுயமாகச் சிந்தித்துத் தானே இயல்பாகச் செய்யும் பண்பை இழந்து விடுகிறது. இச்குணாபசம் தன்னம்பிக்கையை இழக்கச் செய்து மற்றவரிற் தங்கியிருக்கும் பண்பையே சிறாரிடம் வளர்க்கிறது.''

''சிறுவர் நாடகத்தில் மிகப் பிரதானமான அம்சம் நடிக்கும் சிறுவர்களும், பார்க்கும் சிறுவர்களும் அந்த நாடகத்தில் குதூகலமாக, எந்தவித உளத்தடைகளுமன்றி ஈடுபடுதலாகும். சிறுவர் நாடகத்தைப் பொறுத்தவரை நாடகத்தின் செம்மை அத்துணை முக்கியமன்று. அதன் மூலம் உருவாக்கப்படும் சிறுவரின் செம்மையே முக்கியமானதாகும். நாடகத்தில் இடம் பெறும் கதை, சிறுவர்கட்கு உகந்ததாக அமைய வேண்டும். மாணாக்கர் ஆடல் பாடல் கேளிக்கைகளில் விருப்புடையோராதலால் நாடகத்தில் ஆடலும் பாடலும் நகைச்சுவையும் இணைந்து சிறுவரை எப்போதும் மகிழ்ச்சியிலீடுபடுத்த வேண்டும். சிறுவர் பருவம் விளையாட்டுப் பருவமாதலால் விளையாட்டில் ஈடுபடும் மனப்பாங்குடன் நாடகத்தில் ஈடுபடும் வகையில் நாடகம் ஒரு விளையாட்டுப் போல அவர்கட்கு அமைதல் வேண்டும். சிறுவர் எதையும் பெரிதாகக் கற்பனை செய்பவர்கள். எனவே மேடையில் அபிநயங்களும் ஒப்பனைகளும் பெரிது படுத்தப்பட வேண்டும். மாணாக்கரின் மனப்பாங்கு பிரகாசத்தை விரும்புவதானமையினால் நடிகர்கள் மிகப் பிரகாசமான நிற ஆடைகளைப் பயன்படுத்த வேண்டும். சிறுவர்கள் கற்பனைவளம் நிறைந்தவர்கள், அதிசயமானவர்கள். புதுமையானவர்கள். புதுமையான, வளம் நிரம்பிய கற்பனை உள்ளத்தை விளங்கிக் கொண்டு நாடகம் எழுதப்பட வேண்டும். அவர்களின் கற்பனையை விரிவுபடுத்துவதாக நாடகம் அமைய வேண்டும். இத்தகைய அளிக்கை முறைகளினால் மாணாக்கர் தாமாகவே நாடகத்தில் ஈடுபாடு கொண்டு நடிப்பர், நடிப்பர் என்பதைவிட விளையாட்டில் ஈடுபடுவர்.''

### சமர்:

தரமான இலக்கிய சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருந்த டானியல் அன்ரனி அவர்களை ஆசிரியராகக் கொண்ட சமர் நீண்ட கால இடைவெளியின் பின்னர் மீண்டும் இப்போது வெளிவந்துள்ளது.

தொடர்ந்து ஒழுங்காக வெளிவந்து கனதியான இலக்கியப் பணி புரியும் என்று எதிர்பார்க்கலாம்.

தற்போதைய இதனை மொழிபெயர்ப்புக் கவிதைகள் (மார்கரேட் வாக்கர், கார்ல் லேண்டல், றைன்ஸ், சாற்தோர் பெற்றோல்ஃபி மாசேதுங்) கே. எஸ். சிவகுமாரன் (பாப்பரா கவிதைகள்) சோ. கிருஷ்ணராஜா (மாஸிச அணுகு முறை சில குறிப்புகள்) சசி கிருஷ்ணமூர்த்தி (மரச்செதுக்குச் சிற்பங்கள்) ஆகியோர் எழுதிய கட்டுரைகள் ''துணைக்கு வராத துப்பாக்கிகள்'' (மொழி பெயர்ப்பு) தரிசனம் (சாந்தன்) என்ற சிறுகதைகள் என்பனவும் இடம் பெற்றுள்ளன.

தேவி பரமலிங்கம், எஸ். ஜி. கணேசவேல் போல்றோரின் உள்ளூர் கவிதைகளுடன் பார்வை என்னும் பகுதியும் (போராட்டச்சூழலும்படைப்புச் சுதந்திரமும்) அதிர்வுகள் என்னும் குறிப்பு பகுதியும் உள்ளன.

கைலாசநாதன் அவர்களின் அட்டைப் படமும் அருமையாக உள்ளது. □

# மனவலயம்

## நானும் அழுதிருக்கிறேன்!

அந்தக் கேள்வி, கடிதங்கள் மூலம் என் கண்களை நோக்கிக் கேட்சப்பட்டு வருகிறது. அது என் இதயத்

அந்நியப் பட்டுள்ளோம் என்று வேஷம் போடலாமே தவிர, அந்நியப்படுவதென்பது சாத்தியமற்றது.

காதல் உணர்வு என்பது அடி மனசிலிருந்து நுரைப்பது.

இது அழகானது; அற்புதமானது; ஆனால்—பைத்தியக்காரத்தனமானது.

நாமென்ன செய்வது? எந்தப் பைத்தியக்கார உணர்வுகளும் எம்மை விசாரித்து விட்டு வெளிவருவதில்லையே!

காதலைப் பிழையாகப் பொருள்படுத்தி வைத்திருப்பவர்களுக்குச் சொல்கிறேன்:

'இச் சமுதாயத்தில் காதலும் ஒரு பிரச்சினைக்குரிய விஷயம் தான்'

ஒவ்வொரு படைப்பாளியும் தனது படைப்புகளில் கொஞ்சமாயினும் தன் சுய சோகங்களைச் சொல்லி வைக்கிறான்.

'மோனத் திருக்கு தடீ! இந்த வையகம்
மூழ்கித் துயிலினிலே
நானொருவன் மட்டிலும் – பிரிவென்பதோர்
நரகத் துழலுவதோ?'

— என்று பாரதி கண்ணன் பாட்டின் மூலம் தன் காதலிக்காக ஏங்கித் தவிப்பது என் இதயத்தை அறுக்கிறது; அழவைக்கிறது.

நானும் அழுதிருக்கிறேன்.

இளமை என்னுள் பூப்படைவதற்கு முன்பே நான் வாசம் பரப்பித் திரிந்திருக்கிறேன். ஓர் இளைஞனுக்குரிய கம்பீரத்துடன் இருந்தும், நிறைய அழுது

## சிந்தனைப் பொறிகள்

○ என்னை அச்சுறுத்துவது மரணம் அல்ல..
மரணித்துக் கொண்டிருப்பது தான்.

○ வளையம் முதுத பாரத்தைச் சுமக்கும்; வளையும் மனம் எதிரியையும் சுமந்து போகும்
ஃ மொண்டெயின்

○ துன்பத்தின் பிறப்பிடம் கர்வம்தான் தீயவர்களின்

தொடர்ந்து எழுதி வருகின்றார்கள். இவர்களே தரமாகவும் எழுதி வருகின்றனர்.

காரணமாகும்.

அது காரணமாகவே பெண்

களின் நூல்களை, எமது மண்ணில் வெளியாகும் தரமுள்ள படைப்புக்களை

மத்தியில் இந்தச் சிந்தனைகள் வேர் கொண்டால் மாத்திரமே பெண்ணினம் தலை

மற்றவரிற் தங்கியிருக்கும் பண்பையே சிறாரிடம் வளர்க்கிறது.''

நாடகம் அமைய வேண்டும். இத்தகைய அளிக்கை முறைகளினால் மாணாக்கர் தமா

கைலாசநாதன் அவர்களின் அட்டைப் படமும் அருமையாக உள்ளது. □

---

# மனவலயம்

## நானும் அழுதிருக்கிறேன்!

அந்தக் கேள்வி, கடிதங்கள் மூலம் என் கண்களை நோக்கிக் கேட்கப்பட்டு வருகிறது. அது என் இதயத்தின் உள்ளே சென்று புதுப்புது இராகங்களை மீட்டிக் கொண்டிருக்கிறது.

இக் கேள்விக்கான பதிலை. நான் இதுவரை எவருக்கும் தெளிவாகத் தெரிவித்தது கிடையாது.

'எனது இராகங்கள்' என்னும் எனது கவிதைத் தொகுப்பு நூல் வெளியிட்டதன் பின்பு நான் அடிக்கடி இக் கேள்விக் கணையால் துளைக்கப்பட்டிருக்கிறேன்.

என் வயதையொத்த இளைஞர்களாலும், யுவதிகளாலும் இது சம்பந்தமாக நான் பேசப்பட்டிருக்கிறேன். பல எழுத்தாளர்களாலும், பல்கலைக் கழக மாணவர்களாலும் நான் விமர்சிக்கப்பட்டுள்ளேன்.

இதுவரை, இக் கேள்விக்காக நான் வருத்தப்பட்டது கிடையாது. சந்தோஷப்பட்டிருக்கிறேன்; பெருமைப்பட்டிருக்கிறேன்.

என் மீது பிரியமுள்ள வாசகர்கள், ரசிகர்கள் அடிக்கடி அடம்பிடித்துக் கேட்டபோதெல்லாம் அவர்களுக்குச் சமாதானம் சொல்லும் தோரணையில் நான் மௌனித்து இருப்பதுண்டு.

'காதல் மீது அதிக நெருக்கம் இருப்பதாகப் படுகிறது. மெய்யா?'

— இது தான் அந்தக் கேள்வி!

'எனது இராகங்கள்' பரபரப்பாக விற்பனையானதை அடுத்து,

'இவன் தனிமனித உணர்வுகளை விற்பனை செய்துவிட்டான்' எனப் பல எழுத்தாளர்கள் என் மீது ரகசியக் கோபம் கொண்டு கத்தித் திரிவதை நான் அறிந்திருக்கிறேன்.

'காதல் பிற்போக்குத் தனமானது கவிதைகளில் அதைக் கட்டியணைக்கக் கூடாது' என்று பலர்.

'அட்வைஸ்' என்ற பெயரில் என்னை நோக்கி தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் பதில் சொல்ல வேண்டியது எனது பொறுப்பு!

நான் ஒன்றும் மகாத்மா அல்லன். வானத்தில் இருந்து குதித்தவனுமில்லை.

நான் ஒரு நிகழ்கால இளைஞன். சராசரி இளைஞனுக்குரிய அத்தனை உணர்வுகளும், குறும்புத்தனங்களும் எனக்கும் உண்டு.

இந்தச் சமுதாயம் சகதியானது என்று சொன்னால், அச் சகதியில் நானும் வசிக்கிறேன் என்பது தான் அர்த்தம். இச் சமுதாயம் நந்தவனம் என்று குறிப்பிட்டால், அதில் நானும் ஒரு மலர் என்று தான் அர்த்தம்.

எந்த உணர்ச்சிகளிலிருந்தும் நாம் அந்நியப்பட முடியாது. அந்நியப்படுத்தவும் முடியாது.

அந்நியப் பட்டுள்ளோம் என்று வேஷம் போடலாமே தவிர, அந்நியப்படுவதென்பது சாத்தியமற்றது.

காதல் உணர்வு என்பது அடி மனசிலிருந்து நுரைப்பது.

இது அழகானது; அற்புதமானது; ஆனால்— பைத்தியக்காரத்தனமானது.

நாமென்ன செய்வது? எந்தப் பைத்தியக்கார உணர்வுகளும் எம்மை விசாரித்து விட்டு வெளிவருவதில்லையே!

காதலைப் பிழையாகப் பொருள்படுத்தி வைத்திருப்பவர்களுக்குச் சொல்கிறேன்:

'இச் சமுதாயத்தில் காதலும் ஒரு பிரச்சினைக்குரிய விஷயம் தான்'

தாடியால் முகத்தை மூடிவைத்துக் கொண்டும், காற்றைவிட புகையினை அதிகம் சுவாசித்துக் கொண்டும், சாராயப் போத்தல் மூடிதிறபடும் சப்தத்தை சங்கீதம் என்று நினைத்துக்கொண்டும் தமது இளமை வாழ்க்கையை பாலைவனத்தில் நடப்படும் பச்சை நாற்றைப் போல் வீணாக்கிக் கொண்டிருக்கும் காதல் தாசர்களை நான் கண்டிருக்கிறேன்.

எத்தனையோ பிரச்சினைகள் எம் மத்தியில் முளைவிட்டு வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. இவற்றில் காதலும் ஒரு பிரச்சினைதான்.

உலகத்தில் காதல் உணர்விற்கு வசப்படாதவர்கள் சொற்பமே. சிலர் அதை வெளிப்படுத்துகிறார்கள்; பலர் அதை மூடிவைத்துவிடுகிறார்கள். மூடிவைக்கப்பட்ட காதல், மூடியை உடைத்துக்கொண்டு வெளிவரும்; வரவேண்டும்.

### வவுனியா - திலீபன்

'பெண்தான் காதலியாகிறாள் ஆனால் - அந்தப் பெண்ணைவிடக் காதலி அழகானவள்; உயர்ந்தவள். ஏனெனில் காதலி, காதலனின் மனவர்ணங்களால் வரையப்பட்ட பரிபூரணம்' என்று அயல் நாட்டு அறிஞர் ஒருவர் தெரிவித்திருப்பது அழகாய் இருக்கிறது.

ஓர் ஆணுக்குள் – அவனுக்குப் பிடித்தமான பெண்ணும் ஒரு பெண்ணிற்குள் – அவளுக்குப் பிடித்தமான ஆணும் வாழ்ந்து கொண்டேயிருக்கிறார்கள்.

ஆனால் —

சிலர் மட்டுமே வாழ்க்கையில் தாம் நேசிக்கும் ஜீவன்களை அடைகிறார்கள்.

வயிறு பசிப்பது மாதிரி, பருவ வயதில் இதயத்திலும் பசி எழுகிறது இது - தவிர்க்க முடியாத ஒன்று.

'வார்த்தைகளால் அவள் வனப்பை வர்ணிக்க முடியாது. வேண்டுமென்றால் அதை வயலினில் வாசித்துக் காட்டலாம்' என்று தனது நாவலுக்குரிய நாயகியைப் பற்றி மக்ஸிம் கோர்க்கி குறிப்பிட்டுள்ளார்.

நிஜம்!

நாம் பிரியம் வைத்துள்ள ஜீவனை வார்த்தைகளுக்குள் சிறை வைக்கமுடியாது. எத்தனை வார்த்தைகளை நாம் பிரசவித்தாலும், அந்த ஜீவனுடைய முழுப்பிம்பமும் வார்த்தைகளுக்குள் சிக்குப்படாது.

ஒவ்வொரு படைப்பாளியும் தனது படைப்புகளில் கொஞ்சமாயினும் தன் சுய சோகங்களைச் சொல்லி வைக்கிறான்.

'மோனத் திருக்கு தடீ! இந்த வையகம்
மூழ்கித் துயிலினிலே
நானொருவன் மட்டிலும் – பிரிவென்பதோர்
நரகத் துழலுவதோ?'

— என்று பாரதி கண்ணன் பாட்டின் மூலம் தன் காதலிக்காக ஏங்கித் தவிப்பது என் இதயத்தை அறுக்கிறது; அழவைக்கிறது.

நானும் அழுதிருக்கிறேன்.

இளமை என்னுள் பூப்படைவதற்கு முன்பே நான் வாசம் பரப்பித் திரிந்திருக்கிறேன். ஓர் இளைஞனுக்குரிய கம்பீரத்துடன் இருந்தும், நிறைய அழுது கொட்டியிருக்கிறேன்.

திடீரென்று ஒரு பூ. என் கண்களில் படும்போதும், ஒரு குழந்தையின் சிணுங்கலை ரசிக்கும் போதும், எதிர்பாராத விதமாக ஒரு மழைத்துளி என் மேனியில் விழும் போதும் எனக்குள் அந்த ஞாபகம் முளை விடும்.

அவள் பாடசாலையில் எந்த நாற்காலியில் அமருவாள் என்று ஆர்வப்படுவதிலும், பஸ் நிலையப்பகுதியில் தலை கலைந்த நிலையில் தவித்துக்கொண்டிருப்பதிலும், பஸ்ஸில் சென்று பாதி வழிவரை அவளை அனுப்பி விட்டு, மௌனங்களைச் சுமந்து, கால் நடையாக வருவதிலும் சுகம் உண்டு.

ஒரு முறை வீசிய பார்வையை ஒரு மாதத்திற்கு நினைவு கொள்வதிலும், அவள் உதடுகளிலிருந்து ஒரு வார்த்தை சாதகமாக விழவேண்டும் என்று ஏக்கம் கொள்வதிலும் இனிமையுண்டு.

நானும் அழுதிருக்கிறேன். நண்பர்கள் கேட்டதற்கு கண்ணில் தூசு விழுந்து விட்டது என காரணம் சொல்லியிருக்கிறேன்.

சீ .... இது பைத்தியக்காரத்தனம். ஆம்; அழகான - அற்புதமான - தெய்வீகமான பைத்தியக்காரத்தனம்!

தனிமனித உணர்வு என்று இங்கு எதுவுமே இல்லை. தனித்து இங்கு எந்த மனிதனும் வாழவில்லை. உள்ளெழும் உணர்வுகளும், சிந்தனைகளும் பொதுத் தன்மையின்பாற்பட்டுத்தான் தோன்றுகின்றன.

'எனது இராகங்கள்' நூலை, ஆய்வு செய்த கவிஞர் முருகையன், 'இது - இளைஞர்களின் இராகங்கள்' என்று குறிப்பிட்டதை நான் ஞாபகம் வைத்துள்ளேன்.

பிரச்சினைக்குரிய எந்த விஷயங்களும் பிற்போக்குத்தனமானவையல்ல என்று நான் எண்ணுகிறேன்.

செழிப்பான பயிர்களைத்தான் நோய் தாக்கும். மனிதனும் செழிப்பான பருவத்தில் 'அந்த' நோயினால் தாக்கப்படுகிறான்.

வலிமையுள்ள இதயங்கள் அந்தக் தாக்கத்தை தமது பலமாக்கிக் கொள்கின்றன.

வலிமையற்ற இதயங்கள் காலம் முழுவதும் கண்ணீருக்குள் நீந்துகின்றன.

இதற்குத் தீர்வு காண வேண்டிய மனவலிமையை ஒவ்வொரு மனிதனும் பெறவேண்டும். இதைவிட, பல பிரச்சினைகளுக்கு நாம் வாழ்க்கையில் முகம் கொடுக்கத் தயாராகி விடவேண்டும்.

இன்னும்....

---

## சிந்தனைப் போறிகள்

- என்னை அச்சுறுத்துவது மரணம் அல்ல .. மரணித்துக் கொண்டிருப்பது தான்.

- வளையம் முதுகு பாரத்தைச் சுமக்கும்; வளையும் மனம் எதிரியையும் சுமந்து போகும்.

  ஃ மொண்டெயின்

- துன்பத்தின் பிறப்பிடம் கர்வம்தான் தீயவர்களின் இயல்பே அதுதான்.

- பாலைவனத்தில் கிணறு வெட்ட உன்னால் உதவி செய்ய முடியாவிட்டாலும் அங்கே தண்ணீரெடுத்துக் கொடுத்தாவது உதவிசெய்.

  ஃ சா. அதி

- மாபெரும் மனிதர்களை உருவாக்குவது மகத்தான பலமல்ல, மாபெரும் உணர்ச்சி நோக்கங்களின் இடைக்காலமேயாகும்.

- புதை குழிகள் எங்கு இருக்கின்றனவோ அங்குதான் புனர் ஜென்மங்களும் இருக்கின்றன.

  ஃ நியட்ஸே

- அடைய விரும்பும் குறிக்கோளை விட மீறுவதும் குறைவதும் தவறு.

  ஃ கன்பூசியஸ்

- எவ்வளவு தான் புத்திசாலியாக இருந்தாலும் தீமையான மனிதனைப் புத்திசாலியென்று சொல்வது சரியல்ல.

  ஃ பெஞ்சமின் பிராங்கிளின்

- சிந்தனைச் சுதந்திரம்தான் ஆத்மாவின் ஜீவனம் அநீதியே இறுதியில் சுதந்திரத்தை உருவாக்கி விடு

- அதிர்ஷ்டம் என்பது அர்த்தமற்ற சொல். காரணம் ஏதுமின்றி எதுவும் இருக்கமுடியாது

  ஃ வால்டேர்

- புறாக்களின் காலடிகளோடு வரும் சிந்தனைகள் உலகிற்கே வழிகாட்டுகின்றன.

- என்றாவது ஒரு நாள் வானத்தில் பறக்க விரும்புகிறவன் முதலில் நிற்கவும், நடக்கவும் ஓடவும், ஏறவும், நடனமாடவும் கற்றுக் கொள்ள வேண்டும்.

  ஃ நியட்ஸே

# சிறுவர் பகுதி




◎ குட்டிக்கதை

## கிழவனின் நேர்மை

சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் கொங்கு நாட்டில் ஒரு சண்டை நடந்தது. ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் தம் குதிரைகளுடன் பல இடங்களில் கூட்டம் கூட்டமாகத் தங்கியிருந்தார்கள்

ஒரு நாள் ஒரு சேனைத் தலைவன் தன்னுடைய போர் வீரருக்கும் குதிரைகளுக்கும் போதிய உணவில்லையெனக் கண்டு படைத் தளபதிக்கு அறிவித்தான்.

சமீபத்தில் இருக்கும் வயல்களுக்குச் சென்று தேவையான அளவு தானியம் வெட்டி எடுத்து வரும்படி கட்டளையிட்டான் படைத்தளபதி.

சேனைத் தலைவன் சில போர் வீரர்களையும் அழைத்துக் கொண்டு வயல்வெளியை நோக்கி நடந்தான். வழியில் தென்பட்ட வீட்டின் கதவைத் தட்டினான் அவ் வீட்டிலிருந்து ஒரு கிழவன் வெளியே வந்தான். கிழவனுக்கு ஒரு கால் முடம் கையில் ஊன்றுகோல் வைத்திருந்தான்.

யார் நீங்கள்? என்ன காரியமாக வந்தீர்கள்? என்று கேட்டான் கிழவன்.

நான் ஒரு சேனைத் தலைவன். எனது போர் வீரருக்கு உணவு இல்லை அவர்களுக்கு வேண்டிய உணவுத் தானியங்களை வெட்டக் கூடிய, விளைந்த வயலை நீ காட்ட வேண்டும் என்றான் அவன்.

'வாருங்கள்' என்று அவர்களை அழைத்துக் கொண்டு நொண்டி நொண்டி நெடுந் தூரம் போன கிழவனைத் தடுத்து, ஒரு வயலைக் காட்டி, இதோ இங்கே நன்றாக விளைந்திருக்கிறதே. இதை வெட்டுவோமே என்று கேட்டான் சேனைத் தலைவன்

வேண்டாம் இன்னும் சிறிது தூரம் வாருங்கள் என்று சொல்லி, மேலும் மூன்று மைல் தூரம் அவர்களை அழைத்துப் போன கிழவன் அங்கே நன்றாக விளைந்திருந்த ஒரு வயலைக் காட்டி இதை வெட்டுங்கள் என்றான்.

## வேரற்கேணியன்


போர் வீரர்கள் அதனை வெட்டி கட்டுக்களாக்கிக் கொண்டு திரும்பினார்கள்.

வழியில் சேனைத்தலைவன் கிழவனைப் பார்த்து, "இதற்கு முன் சில வயல்கள் செழிப்பாக விளைந்திருந்தனவே, ஏன் வெட்ட வேண்டாம் என்றீர்", எனக்கேட்டான்

"ஆனால் அந்த வயல் என்னுடையதல்லவே" என்றான் கிழவன்.

இப்பதிலைக் கேட்ட சேனைத் தலைவன் ஆச்சரியமடைந்து கிழவனைப் பாராட்டி, தன் குதிரைமீது அவனை ஏற்றிக் கொண்டுபோய் அவன் வீட்டில் விட்டான்.

## கண்டுபிடியுங்கள் 1.



இங்கே காண்பது பல செய்மதிகளை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு அமைப்புடையவை. ஆனால் இரண்டு ஒரே மாதிரியானவை. அவை எவை?

## வாரம் ஒரு அறிவுரை

- வெற்றி என்பது விடமுயற்சியின் பெறுபேறாகும். முயற்சியுடையவன் இகழ்ச்சி அடைவதே கிடையாது.
- முயற்சிக்கு அடிப்படை தன்னம்பிக்கை,
- முன்னேற வேண்டுமென்ற அவா, துணிவு,
- அவா, துணிவுடன் இணையும் போது தன்னம்பிக்கை உண்டாகின்றது.
- பிறகென்ன.... வெற்றியின் படிக்கட்டுகளில் அவன் நடைபோடத் தொடங்குகிறான்.

## அன்பான சிறுவர் சிறுமியரே....

- இவ்வாண்டுப் புத்தாண்டுத் தினம் மகிழ்ச்சிகரமானதாக இருந்திருக்கும் அல்லவா,

- கோடை விடுமுறையில் மகிழ்ந்திருக்கும் உங்களுக்கு 'துருவன்' சுவையான பொழுதுபோக்கு அம்சங்களுடன், அறிவு வளர்ச்சிக்கேற்ற விடயங்களையும் தொடர்ந்து தரவுள்ளார்.

- அடுத்த வாரம் சில புதிய பகுதிகள் ஆரம்பமாக உள்ளன. அவை உங்களுக்கு ஆக்க ஆற்றலை வளர்க்க உதவும்.

- உங்கள் படைப்புக்களையும் ஆலோசனைகளையும் அனுப்பி வையுங்கள்.

அடுத்த வாரம் சந்திப்போம்.

அன்புடன்

- தமிழண்ணா

## நாவடக்கம்

ஒரு காலத்தில் போதிஸ்தா என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் பெரிய வாயாடி. அவன் மந்திரி சுபோதா. அவன் மாபெரும் அறிவாளி. ஒரு நாள் அவர்கள் இருவரும் நந்தனத்வதில் உலாவிக் கொண்டிருந்த போது மரத்திலிருந்து ஒரு குயில் குஞ்சு கீழே விழுந்தது. அதன் மேலெல்லாம் காயங்கள். இதைக்கண்டு அரசன் மனவேதனை அடைந்தான். "அந்தக் குஞ்சை அதன் பெற்றோர்கள் ஏன் துன்புறுத்துகின்றனர்?" என்று அவன் கேட்டான். மன்னனுக்கு நாவடக்கத்தைப் போதிக்க இதுவே தருணம் என்று மந்திரி நினைத்தான். அவன் சொன்னான். "அரசே இந்தக் குஞ்சை இரு காகங்கள் வளர்த்தன. அது குயிலின் குஞ்சு என்பது அவற்றிற்குத் தெரியாது. காக்கைக் கூட்டில் கள்ளத்தனமாக முட்டையிடுவது குயில்களின் வழக்கம். இந்தக் குயில் அடிக்கடி சதா சளசள வென்று பேசிக்கொண்டிருக்கும். 'அது தம் இனத்தின் குரல் அதுவல்ல; அந்தக்குஞ்சு அழையா விருந்தாளி' என்பது காகங்களுக்குத் தெரிந்துவிட்டது. இதனால் இக் குயிற்குஞ்சைச் கூண்டிலிருந்து தள்ளி விட்டன. அடக்கமின்றிப் பேசியதால் இது இவ்வாறு தண்டனைக்கு உள்ளாயிற்று. வாயை மூடிக்கொண்டிருந்தால் இதெல்லாம் நடந்திருக்காது. இறகு முளைக்கும் வரை காகங்களுடன் ஆனந்தமாகக் காலம் கழித்திருக்கலாம் என்று அமைச்சர் கூறினார்.

அமைச்சர் குறிப்பாகச் சுட்டிய நீதியை அரசன் புரிந்து கொண்டான். அன்று முதல் அரசன் வீண் பேச்சை நிறுத்தி இன்பமாக வாழ்ந்தான்.

- குமாரசூரியர் விமலன்,
யா / நெல்லியடி ம. ம. வி.,
ஆண்டு - 9 A


## கண்டுபிடிப்புகள்

பொது அறிவுப் போட்டி ஒன்று வந்துவிட்டது. உடனே அங்கு இங்கு என பொது அறிவுப் பத்தகங்களை தேடி அலைவீர்கள். அப்படி அலையாது தடுக்க நாம் முவந்துள்ளோம். இங்கு தொடராக பொது அறிவுக் குறிப்புகளை தர விருககின்றோம். அதன் முதற் கட்டம் இந்த கண்டுபிடிப்புகள். தொடராக இது வெளிவரும். ஏதாவது தவறுக விருப்பின் எழுதுங்கள். இனி படியுங்கள்.

| | கண்டுபிடித்தவர் | நாடு | ஆண்டு |
| --- | --- | --- | --- |
| நைலோன் | கரோதர்ஸ் | அமெரிக்கா | 1930 |
| ரேயோன் | ஸ்வான் | இங்கிலாந்து | 1883 |
| கிளாஸ்க்காமல் (மெல்லியதுணி) | ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் | | |
| பேக்லைற் | பெக்லண்ட்பெல்க் | அமெரிக்கா | 1907 |
| சிப் (Zip) | சண்டபக் | சுவீடன் | 1913 |
| மைஒற்றுத்தாள் | பிரென்டன் பேகர் | சுவீஸ்லாந்து | 1911 |
| சுவர்ஒட்டுத்தாள் (WallPaper) | 1509 இல் தயாரானது. | | |
| மைப் பேனா (ஊற்று) | வாட்டர்மான் | அமெரிக்கா | 1894 |
| இரிடியம் பேனா (BallPoint) | எஸ் டென்னெட் | அமெரிக்கா | 1803 |
| கடிகாரம் | 1880 இல் தயாரிக்கப்பட்டது. | | |
| கடிகார ஊசல் (பெண்டுலம்) | ஹியூஜென்ஸ் | ஒல்லாந்து | 1680 |
| கடிகாரத்தில் பயன்படும் சுருள் (Spring) | ரொபேட்குக் | இங்லாந்து | 1658 |
| கடிகாரசிற்கள் உள்ள அச்சு | நிக்கலஸ் பக்கியோ | சுவீஸ்லாந்து | 1704 |
| அணுக்கடிகாரம் | வில்லாட் எப்.விப்பி | அமெரிக்கா | 1947 |

ஆதாரம்: Crown encyclopedia

## அறிவு சுரங்கம்



மேலே உள்ள படத்தைப் பாருங்கள். பூமி கையில் நூலொன்றை வைத்துச் சிரிக்கின்றது. சூரியன் கதிர் வீசுகின்றான். அக் கதிர்களில் அறிவிற்கடையாளமாக நூலொன்று விரித்து வைக்கபபட்டுள்ளது. இவை தவிர இப்படத்தில் என்னென்ன உள்ளன. உதவிக்கு சில குறிப்புகள்.

இரு விஞ்ஞானிகள், ஒரு காட்டூன் படத் தயாரிப்பாளர், ஒரு கணிதமேதை அவர்கள் யார்?

ஒரு பறவை, விலங்கு அவை எவை? கீழுள்ள சிரக வரிசையில் உள்ள கிரகங்கள் எவை? மனித உறுப்பு உள்ளது அது எது? ஒரு வாகனமும் உள்ளது அது எது?

சரியாக எழுதுங்கள் பரிசுகள் கிடைக்கும்.

போர் வீரர்களையும் அழைத்துக் கொண்டு வயல்வெளியை நோக்கி நடந்தான். வழியில் தென்பட்ட வீட்டின் கதவைத் தட்டினான் அவ் வீட்டிலிருந்து ஒரு கிழவன் வெளியே வந்தான். கிழவனுக்கு ஒரு கால் முடம் கையில் ஊன்றுகோல் வைத்திருந்தான்.

யார் நீங்கள்? என்ன காரியமாக வந்தீர்கள்? என்று கேட்டான் கிழவன்.

நான் ஒரு சேனைத் தலைவன். எனது போர் வீரருக்கு உணவு இல்லை அவர்களுக்கு வேண்டிய உணவுத் தானியங்களை வெட்டக்கூடிய, விளைந்த வயலை நீ காட்ட வேண்டும் என்றான் அவன்.

'வாருங்கள்' என்று அவர்

போர் வீரர்கள் அதனை வெட்டி கட்டுக்களாக்கிக் கொண்டு திரும்பினார்கள்.

வழியில் சேனைத்தலைவன் கிழவனைப் பார்த்து, ''இதற்கு முன் சில வயல்கள் செழிப்பாக விளைந்திருந்தனவே, ஏன் வெட்ட வேண்டாம் என்றீர்'', எனக்கேட்டான்

''ஆனால் அந்த வயல் என்னுடையதல்லவே'' என்றான் கிழவன்.

இப்பதிலைக் கேட்ட சேனைத் தலைவன் ஆச்சரியமடைந்து கிழவனைப் பாராட்டி, தன் குதிரைமீது அவனை ஏற்றிக் கொண்டுபோய் அவன் வீட்டில் விட்டான்.

தொடர்ந்து தரவுள்ளார்.

- அடுத்த வாரம் சில புதிய பகுதிகள் ஆரம்பமாக உள்ளன. அவை உங்களுக்கு ஆக்க ஆற்றலை வளர்க்க உதவும்.

- உங்கள் படைப்புக்களையும் ஆலோசனைகளையும் அனுப்பி வையுங்கள்.

அடுத்த வாரம் சந்திப்போம்.

அன்புடன்

- தமிழண்ணா

எத்தனமாக முட்டையிடுவது குயில்களின் வழக்கம். இந்தக் குயில் அடிக்கடி சதா சளசள வென்று பேசிக்கொண்டிருக்கும். 'அது தம் இனத்தின் குரல் அல்லவே; அந்தக்குஞ்சு அழையா விருந்தாளி' என்பது காகங்களுக்குத் தெரிந்து விட்டது. இதனால் இக் குயிற்குஞ்சைக் கூண்டிலிருந்து தள்ளி விட்டன. அடக்கமின்றிப் பேசியதால் இது இவ்வாறு தன்னைக்கு உள்ளாயிற்று. வாயை மூடிக்கொண்டிருந்தால் இதெல்லாம் நடந்திருக்காது. இறகு முளைக்கும் வரை காகங்களுடன் ஆனந்தமாகக் காலம் கழித்திருக்கலாம் என்று அமைச்சர் கூறினார்.

அமைச்சர் குறிப்பாகச் சுட்டிய நீதியை அரசன் புரிந்து கொண்டான். அன்று முதல் அரசன் வீண் பேச்சை நிறுத்தி இன்பமாக வாழ்ந்தான்.

– குமாரசூரியர் விமலன்,
யா / நெல்லியடி ம. ம. வி.,
ஆண்டு - 9 A



மேலே உள்ள படத்தைப் பாருங்கள். பூமி கையில் நூலொன்றை வைத்துச் சிக்கின்றது. சூரியன் கதிர் வீசுகின்றான். அக் கதிர்களில் அறிவிற்கூடையாளமாக நூலொன்று விரித்து வைக்கப்பட்டுள்ளது. இவை தவிர இப்படத்தில் என்னென்ன உள்ளன. உதவிக்கு சில குறிப்புகள்.

இரு விஞ்ஞானிகள், ஒரு காட்டூன் படத் தயாரிப்பாளர், ஒரு கணிதமேதை அவர்கள் யார்?

ஒரு பறவை, விலங்கு அவை எவை? கிழுள்ள கிரக வரிசையில் உள்ள கிரகங்கள் எவை? மனித உறுப்பு உள்ளது அது எது? ஒரு வாகனமும் உள்ளது அது எது? சரியாக எழுதுங்கள் பரிசுகள் கிடைக்கும்.

---

## இரவில்...

ஒரு இந்தியன், ஒரு அமெரிக்கன், ஒரு ரஷ்யன். மூவரும் ஓரிடத்தில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் பேச்சு விஞ்ஞானத்தின் பக்கம் திரும்பியது.

நாங்கள்தான் முதலில் செவ்வாய்க்கிரகத்தில் குடியேறுவோம் என்றான் ரஷ்யன்

நாங்கள் சந்திரனில் பத்துத் தடவைகளுக்கு மேல் இறங்கி விட்டோம். நாமே முதலில் செவ்வயில் குடியேறுவோம் என்றான் அமெரிக்கன்.

இந்தியன் சொன்னான் -

நீங்கள் இருவரும் போட்டியிடுவதில் அர்த்தமேயில்லை, நாங்கள் முதலில் சூரியனில் இறங்கப் போகிறோம!

இருவரும் கைதட்டிச்சிரித்து விட்டுச் சொன்னார்கள் -

''சூரியனில் உன்னால் இறங்க முடியாது, அது அனலாய் எரியும்''.

'அது பகலில்.. நாங்கள் இரவில் போய் இறங்குவோம்'' என்றான் இந்தியன்.

□

## பீர்பால்...

ஒரு சமயம் அக்பர் தன் தர்பாரில் அமர்ந்திருக்கும் போது, சபையோரைப் பார்த்து, நமது தலைநகரில் மொத்தம் எத்தனை காக்கைகள் உள்ளன என்று சொல்ல முடியுமா? என்று கேட்டார்.

இதென்ன கேள்வி அங்கும் இங்கும் பறந்து திரியும் காக்கையை எப்படிக் கணக்கெடுப்பது?

சபையில் மௌனம் நிலவியது.

அமைச்சர் பீர்பால் அப்போது தான் சபையில் வந்து சேர்ந்தார்.

அக்பர் பீர்பாலைப்பார்த்து அக்கேள்வியைக் கேட்டார்.

உடனே பீர்பால், சரியாகப் பதினையாயிரம் காக்கைகள் உள்ளன என்றார்.

உமது கணக்குச் சரியானது என்பதற்கு என்ன ஆதாரம்? என்று மன்னர் கேட்டார்

நான் சொல்வது சரி. நம்பிக்கையில்லையென்றால் எண்ணிப் பாருங்கள் என்றார் பீர்பால்

சரி கணக்கெடுக்க உத்தர விடுகிறேன் என வைத்துக் கொள்ளும். நீர் சொன்னதை விடக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருந்தால் அதற்குரிய தண்டனையை ஏற்றுக் கொள்வீரா? என்று கேட்டார் அக்பர்.

அப்படி தாங்கள் கணக்கெடுக்கும்போது அதிகமாக இருந்தால் அவை புதிதாகப் பிறந்தன என்று அர்த்தம். குறைவாக இருந்தால் அத்தனையும் இறந்துள்ளன என அர்த்தம் என்றார் பீர்பால்.

பீர்பால் உம்மை மடக்கவே முடியாது என்று கூறிச் சிரித்தார் அக்பர்.

□

## ஒரே உதையில் இறந்த யானை

கொண்ட கணவனையே கொல்லத் துணிந்தாள் ஒருத்தி. கணவன் ஒரு பயணம் போகப் புறப்பட்ட வேளை, சிற்றுண்டி தயாரித்து, அதில் நஞ்சு கலந்து, கட்டிக் கொடுத்து அனுப்பினாள் மனைவி.


நீண்ட தூரம் நடந்து களைத்தவன வழியில் ஒரு குளம் இருக்கக் கண்டு, அதன் கரையில் சிற்றுண்டிப் பொட்டலத்தை வைத்துவிட்டு நீரில் இறங்கிக் குளித்தான்,

அதேவேளை அங்கே வந்த யானை ஒன்று சிற்றுண்டியை விழுங்கி விடடது. குளித்து விட்டு வந்தவன் யானை சிற்றுண்டியைத் தின்று விட்டதை உணர்ந்து, கோபமடைந்து அதன் காலில் ஒரு உதை கொடுத்தான். யானை விழுந்து இறந்து விட்டது. அப்போது அங்கே வந்த யானைப் பாகன் நடந்ததை அறிந்து வியப்படைந்து, மனிதன் ஒரே உதையில் யானையைக் கொன்ற கதையை ஊரெல்லாம் பரப்பினான்.

□

ஆசிரியர்; ''சுதந்திரமாகப் பாடிப் பறந்து, விளையாடி வாழும் கிளியைப் பிடித்து. கூண்டில் அடைத்து வைப்பது பாவம் ''

மாணவன்: ''சார் எங்களை வகுப்பறையில் அடைத்து வைத்து, அடியும் குத்தும் தருகிறீர்களே...' □



இரண்டு ஈக்கள் ஒரு படமாளிகையை விட்டு வெளியேறின

தொகுப்பு: எஸ் பி.கே.

ஆண் ஈ பெண் ஈ யைப் பார்த்துக் கேட்டது: நடந்து போவோமா அல்லது ஒரு நாய் மேல் ஏறிக்கொள்வோமா ? □

## கடமை வீரன்

பண்டைய எகிப்திய போர் வீரன் ஒருவனுக்கு போருக்கு வரும்படி அழைப்பு வந்தது. தன் பெறுமதியான பொருட்களை வீட்டில் வைத்து பூட்டி தன் நெருங்கிய நண்பனிடம் திறப்பைக் கொடுத்து. ஆறு மாத காலத்தில் தான் திரும்பி வராவிடில், இந்தத் திறப்பை நீ பயன்படுத்தலாம் என்று சொல்லிவிட்டு களம் நோக்கி குதிரை மீதேறிப் பறந்தான்.

பத்து மைல் வரை சென்ற பின் திரும்பிப் பார்த்தான். புழுதியைக் கிளப்பியபடி ஒரு குதிரை வந்து கொண்டிருந்தது. குதிரைமேல் அவனது நண்பன் இருந்தான். அவன் கையைத் தூக்கிக் காட்டியபடி சொன்னான்.

'நீ தவறான திறப்பைத் தந்து விட்டாய்.'

□

## மயக்கமா ?

ஒருவன் தொலைபேசி மூலம் பொலிசுக்கு ஒருமுறைப்பாடு கொடுத்தான்.

''என் காரின் சில பகுதிகளைக் காணவில்லை. ஸ்ரேயறிங் வீல், பிறேக், அக்சிலேட்டர், கிளச்பெடல், டஸ்போட் இதையெல்லலாம் கள்ளன் கொண்டுபோய் விட்டான்.''

நடவடிக்கை எடுக்கிறேன் என்றார் பொலிஸ் அதிகாரி.

சில நிமிடங்கள் கழித்து அதே குரல் பேசிற்று.

''சிரமத்திற்கு மன்னிக்கவும்... நான் பின் சீற்றில் ஏறிவிட்டேன் ''

□

மாணவன்: முற்காலத்தில் பூமி தட்டையாய் இருந்ததா சேர்? இரணியன் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு போய் கடலுக்கடியில் ஒழிந்து கொண்டானாமே?

□

பஸ் சாரதி: ''டீசல் முடிந்து போச்சு பஸ் இனி ஒரு அடியும் முன்னால் போகாது''

ஒரு பயணி: ''பின்னாலை விடு தம்பி வீட்டுக்குப் போக''

## அன்பான வாசகர்களே.

□ ஞாயிறுமலர் பற்றிய உங்களது அபிப்பிராயங்கள ஆலோசனைகள, விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

□ படைப்பாளிகள் சிறுகதை, கவிதை மற்றும் ஆக்கஇலக்கியப் படைப்புகள் அனுப்பி மலரின் தரத்திற்கு உயர்வூட்டுமாறு வேண்டுகிறோம்

□ படைப்புக்களை அனுப்புவர்கள் படைப்பாளர்க்குரிய இதயசுத்தியுடன் தங்கள் புனைபெயர்களுடன் சொந்தப் பெயர் முழுவிலாசம் இணைத்திருத்தல் அவசியம்.

□ கடந்த கால நிகழ்வுகளின் பதிவுகள், அனுபவ வெளிப்பாடுகள் இலக்கிய வடிவங்களாக வரவேண்டிய காலத்தின் தேவையை உணர்ந்து இலக்கிய கர்த்தாக்கள் தங்கள் படைப்புக்களை எழுதுமாறு வேண்டுகிறோம்

□ அபிவியல், வரலாறு, அபிவிருத்தி, மற்றும் சமூகவியல் சம்பந்தமான விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்

□ சொந்த விருப்பு வெறுப்புக்களையும், காழ்ப்புணர்ச்சிகளையும் பிரதிபலிக்கும் சகல படைப்புகளும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

ஆ-ர



கவிதை

## போரும் சுதந்திரமும்

— எம். எல். எம் அன்ஸார் —

இனவெறியில் உயிர்கொண்டு, சமுதா யத்தில்
இரத்தநதி யோட்டத்தை இலக்காய்ச் செய்து
மனவெளியில் துவேஸவிஸம் தெளித்தோ ரேநீர்
மாண்டொழிவ தெப்போது? அவலத் தீயில்
தினமெரியும் தேசத்தின் துயரெண் ணாமல்
திரிகின்றீர், வன்முறையென் னும்பா தையில்
சினவிதையை இதயத்தில் தூவிக் கொண்டே
சிதைகின்றீர், சுதந்திரமென் னுஞ்சோ லையை

தன்னாதிக் கம்மட்டுந் தானிம் மண்ணில்
தழைத்தோங்க வேண்டுமெனுஞ் சுயந லத்தை
எண்ணத்தில் அறைவதனால் தானே, புரட்சி
எரிமலையாய் வெடிக்கிறது உரிமை யதுவோ
மண்ணில் வாழ் கிறமக்கள் சொத்து ஈதை
மறுப்பதடி மைவாழ்வுக் கேகும் ஈற்றில்
புண்பட்ட சமுதாயம் விடிவைத் தேடிப்
புறப்படுமே ஆயுதமேந் திப்போ ருக்கு

அடக்குமுறைப் புயல்நீண்டு அடிக்குமானால்
அடக்குமுறை தனையடக்கப் பூகம் பங்கள்
தொடக்கமுறும் சமுதாயம் எழுச்சியாக;
துப்பாக்கி தானதற்குத் தலைமையேற்கும்
முடக்கிவிடச் சுதந்திரதா கங்கள் ஒன்றும்
முடமல்ல உம்மதிகா ரத்தை நாளை-
நடக்கவிருக் கும்போரால் தகர்த்தெ றிந்து
நம்மக்கள் சுதந்திரத்தை வெற்றி கொள்வர் □

# கடந்த காலத்தின் பதிவுகள்

அடிக்கடி புலிகளைத் தேடுகிறோமென கிராமங்கள் தோறும் அவ்வப் பகுதி கமாண்டர்கள் மக்களை ஆடு மாடுகள் சாய்ப்பது போல் சாரி சாரியாக கூட்டி வந்து கிராமத்து சந்தியில் உச்சி வெய்யிலில் நிறுத்தி வைத்து பின் ''தலையாட்டிகள்'' முன் நிறுத்தி மாலையில் வீடுகளுக்கு செல்ல அனுமதித்தனர். சில சந்தர்ப்பங்களில் இரண்டு மூன்று மைல்களுக்கு மேல் அயல் கிராம எல்லை வரை கூட்டிச் சென்று பின்பு விடுவித்தனர்.

இந்த ''தலையாட்டிகள்'' பெரும் பாலும் இந்தியா சார்பான இயக்கங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தமக்குப் பிடிக்காதவர்களையும், அயலவர்களையும் வேண்டுமென்றே அமைதிப் படையினரிடம் மாட்டிவைத்தனர். தலையாட்டிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டவர்களுக்கு கிடைத்த அடிகள் சித்திரவதைகள் அப்பப்பா எழுதி மாளாது.

நீர்வேலியில் இரண்டு பிராமணப் பையன்களும், ஒரு இளம் குருக்களும் வதைக்கப்பட்ட சம்பவம் மிகக் கொடுமையானது. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இந்த மூவருக்கும் மிக மோசமான நிலைவரம் ஏற்பட்டது. இந்த மூவரும் ஒரு பாவமுமறியாத அப்பாவிகள். ஆனால் ஒருவர் மாத்திரம் ஒரு இயக்க ஆதரவாளராக சிறிது காலம் இருந்து பின்பு ஒன்றுமே வேண்டாமென விட்டு விட்டு கோவிலில் பெரியவர்களுக்கு உதவியாக இருந்து வந்தார்.

இளம் குருக்களை காலில் கயிற்றினால் கட்டி தலை கீழாக கிணற்றில் முக்கி எடுத்தார்கள். பின்பு அடித்து உதைத்தார்கள். மற்ற இரண்டு பிராமணப் பையன்களும் கூட இப்படித்தான். அயலில் அமைதிப் படைக்காக உளவு பார்த்த ஒருவரை புலிகள் சுட்டுவிட்டார்கள். உடனே இராணுவம் கிராமத்தை ''றவுண்டப்'' (Round Up) செய்தது. இந்தக் கொலை கோவில் வீதியில் நிகழ்ந்ததால், பிராமண இளைஞரைப் பிடித்தார்கள். ''கோவில் அருகாமையில் நடந்தபடியால் உனக்குத் தெரியாமல் இருக்க முடியாது. நீ ஏன் அமைதிப்படையினருக்கு அறிவித்தல் கொடுக்கவில்லை.'' என்று கேட்டு கிணற்றினுள் தலை கீழாக கட்டி இறக்கி வெளியே




எடுத்து உதைத்தார்கள். பின்பு மீண்டும் கிணற்றினுள் தொங்க விட்டார்கள். இப்படிப் பலமுறை செய்தபின் நடக்கவே இயலாத நிலையில் அந்த இளைஞரை ஆறுமைல்கள் நடக்க வைத்து நவக்கிரி முகாமில் அடைத்து வைத்தார்கள். நீர்வேலியிலிருந்து உரும்பராய்க்கு நடத்திச் சென்று பின்பு அங்கிருந்து நவக்கிரி முகாமுக்குக் கொண்டு சென்றார்கள். இது நடந்தது 1988 ஆம் ஆண்டு பதினோராந் திகதி வரையிலாகும். இந்த மாதிரிச் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்ததால் ''றவுண்ட் அப்'' (Round Up) என்ற சொல் மக்கள் மத்தியில் அடிக்கடி பேசப்பட்ட கிலியை ஏற்படுத்தும் சொல்லாகவும் தினமும் புழக்கத்தில் நிலவிய சொல்லாகவும் வந்துவிட்டது.

இன்று கோப்பாய் ''ரவுண்டப்'' இன்று புத்தூர் ''ரவுண்டப்'' இன்று கல்வியங்காடு ''ரவுண்டப்'' என்று இந்த ரவுண்டப் நிகழ்ச்சிகள் தான் முக்கிய புதினமாக நிகழ்ந்து பேசப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த ''ரவுண்டப்'' நிகழ்ச்சிகளை வெறுமனே சொல்லிப்போக முடியாது. இவை ஏற்படுத்திய தாக்கங்கள், விளைவுகள், உளரீதியான தாக்கங்களும் அளவற்றன.

இன்னொரு விதமான அழிவு - இது முக்கியமாக விவசாயிகளையே பாதித்தது. செயின் புளொக் என்ற ராட்சத பீரங்கிகளால் ஏற்படுத்தப்பட்டது.

அமைதிப்படையினர் ஒழுங்கைகள் தெருக்களை விடுத்து எப் பொழுதும் வளவுகளின் வேலிகளை வெட்டி வளவுகள் ஊடாகவே சென்றமையால் ஏற்பட்ட அழிவு ஒரு புறம், மற்றப்புறம் இந்த ''செயின் புளொக்கு'' கள் தோட்டங்கள் ஊடாகவும், வயல்கள் ஊடாகவும், குடிசைகள், கட்டிடங்கள் தோப்புக்கள் என்பவற்றை நொறுக்கி அழித்துக் கொண்டு பெரும் இரைச்சலுடன் இடையிடையே சுட்டுக் கொண்டும் குண்டுகளை வெடித்துக் கொண்டும் பவனி வந்தன.

அமைதிப்படையினர் காங்கேசன்துறையில் வந்திறங்கிய பொழுது பத்தாயிரம் விலங்குகள் கூட இறக்கப்பட்டனவாம். இத்தனை விலங்குகள் எதற்காக - யாரைக் கைது செய்ய? மக்கள் இப்படிக் கேட்டுக் கொண்டேயிருந்தனர்.

இன்னொன்று இவர்கள் கொண்டு வந்து இறக்கிய கனரக வாகனங்களும் – ஆயுதங்களும் - இந்தப் பெரிய எண்ணிக்கையில் கொண்டு வர வேண்டிய தேவை என்ன? இராணுவத்திலிருந்து இளைப்பாறிய ஒருவர் என்னிடம் கூறினார். இவ்வளவு பெருந்தொகையான ஆயுதங்கள் எல்லாம் அமெரிக்கா போன்ற பெரிய வல்லரசோடு யுத்தம் செய்வதற்கே தேவைப்படும். அப்படியானால், இலங்கையில் இன்னொரு வல்லரசின் எதிர்ப்பை கற்பனை செய்து பெரிய யுத்த ஆயத்தங்கள் செய்யப்பட்டனவா? இந்த சின்னஞ் சிறு இனத்தினருக்கு எதிராக யுத்தம் செய்வதற்காகவா இவ்வளவு ஆயுதங்கள் தேவைப்பட்டன?

பாரம்பரியமாக, தமிழர்களுக்கு சார்பான நாடு இந்தியா என்ற நம்பிக்கை இருந்து வந்தது. தமிழ் இயக்கங்களுக்கு ஆதரவு நல்கி ஆயுத உதவி, பண உதவியெல்லாம் இந்தியா கொடுத்தது என்பது இதன் மேலும் பரம இரகசியமாகக் கருதமுடியாது.

இது இவ்வாறு இருக்க, தமிழர்களை கனரக ஆயுதங்களைக் கொண்டு அழித்து ஒழிக்கும் ஒரு நாடாக, அதை தமிழருக்கு எதிராக மாற்றியது ஏன்? தமிழ் மக்கள் இந்தியாவுக்கு எதிராக இழைத்த குற்றமென்ன?

போஃபர்ஸ் பீரங்கி ஊழலில் லஞ்சம் வழங்கியது போல தமிழினை அழிப்பதற்காக மிகமிக உயர்மட்டத்திலுள்ள ஒருவருக்கு கோடி கோடியாக கொடுத்து அந்தப் பெரிய மனிதனைக் கொண்டு இந்திய இராணுவத்தை ஏவி தமிழரைப் பூண்டோடுஅழிக்க சதி நடந்ததா?

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆


## நவபாரதி

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

தமிழனை அழிப்பது என்றால் அதாவது உரிமை கேட்டுப் போராடும் தமிழனை இலங்கையின் அரசியலில் இருந்து முற்று முழுதாக ஒழித்துக் கட்டுவதென்றால், அது நடக்கக் கூடிய காரியமா?

இந்திய ஏகாதிபத்திய வல்லரசும் அதனது அமைதிப் படையும், 'றோ'வும் கூலிப் படைகளும் வரலாற்றில் படிக்க முடியாத ஒரு பாடத்தினை எமது மண்ணில் படித்துள்ளன.

வீரம் செறிந்த எமது வீர மைந்தர்களின் நாட்டுப் பற்றின் முன்னால் இந்தியாவும் அதன் ஏவலர்களும் தூசு என்பது உண்மையே. □




**--- பாப்பாணன்**

**(7)**

பூவுலகப் புகழ்பூத்த ஆங்கிலேயர்
புலவர்களாய் தமிழ் மொழியில் கவிபடித்தார்
பாவலர்கள் பல் நாட்டு அறிஞர் எல்லாம்
பசுந்தமிழில் உரை முழக்கம் செய்தபோது
தேவர்கள் தாம் படையெடுத்து வந்து இங்கு
தேன்தமிழில் சொல்லெடுத்துப் பொழிதல் போல
ஆவலொடு பார்த்திருந்த பேர்க்கு எல்லாம்
ஆவிக்கு அவர்தந்த விருந்து ஆச்சு.

பிறநாட்டு அறிஞர்களுக்கெது விதத்தும்
பின்னடைவு இல்லாத எமதறிஞர்
திறனாய்வு சிந்தனையில் சளைத்தாரில்லை
திகைத்தார்கள் வந்தோர்கள் திறமைகண்டு
புறமென்ன, அகமென்ன பூமியின் கீழ்
புதைந்துள் அகழ்வாய்வுத் துறையிலென்ன
மறமென்ன அறமென்ன வரலாறென்ன
மற்றவரோடிணையாக நிமிர்ந்து நின்றார்


பாரெங்கும் பரந்துள்ள பல அறிஞர்
பசுந்தமிழைப் பேசியது பெருமையாச்சு
பாரெங்கும் தமிழ் முழக்கம் செய்யவேண்டி
பாவலர்கள் கண் கனா நனவு ஆச்சு
ஊரெங்கும் இந்தவிழா உணர்வினாலே
உறக்கமே மறந்து மனக்கிறக்க மாச்சு
''பாரிங்கு இவர் பெருமை'' என்று எண்ணி
பகைவருக்கு மனதினிலே கலக்கமாச்சு.

எழிலார்ந்த தமிழ் விழாவின் இறுதிநாளாம்
எழுபத்தி நான்கு தை பத்து அன்று
பொழில் பூத்த கோலமென எங்கும் தோற்றம்
பொங்கு மகிழ் வார்ப்பரிப் புதுமை ஆட்டம்
இழிநெஞ்ச எதிரிகட்கோ !இதனால் வாட்டம்
இவ்விழாவைக் குழப்புதற்க இதயநாட்டம்
பழிசெய்யப் பாதகர்கள் பார்த்திருந்தார்
பாதுகாப்புச் சீருடையில் வந்து சேர்ந்தார்.

குண்டெறிந்து கூட்டமதைக் குழப்பினார்கள்
குறுந்தடியை வீசிச்சபை எழுப்பினார்கள்
வண்டமிழின் சுவை பருகி நின்ற கூட்டம்
வழியின்றி வகையின்றி அலறினார்கள்
குண்டர்களின் குண்டு மின் கம்பிதன்னை
குறிபார்த்து வெட்டியதால் தரையில்வீழ
வண்டுகளாய் குவிந்திருந்த மக்கள்மீது
வந்து விழுந்துயிர் குடிக்கச் சிதறினார்கள்.

ஒப்பரிய விழாவெடுத்துப் பெருமை கொண்டோம்
உலகளந்த தமிழன்னை அருமைகண்டோம்
செப்பரிய புகழ் கேட்டுச் சொக்கிநின்றோம்
செந்தமிழ் எம் அன்னையென மகிழ்வுகொண்டோம்
இப்பெரிய தீங்கிழைத்தே இறுதிநாளில்
இயமதூதர் செய்திட்ட இழிசெயலால்
ஒப்பாரி யோடன்றோ விழா முடித்தோம்

ஆய்வு



## மொழியியல்

பிடுகிறது. (M. V. XXV: 75) மூன்றாவது படைஎடுப்பு பாண்டிநாட்டவரால் மேற்கொள்ளப்பட்டது. வட்டகாமினி மன்னன் காலத்திலே இப்படை எடுப்புக்கள் நடந்தன எனக் கூறும் மகாவம்சம் இதில் ஏழு தமிழர் ஈடுபட்டதாகவும் இருவர் நாடு திரும்ப மிகுதியான ஐவ

லாதேவி (கி. மு. 48-44) தமிழராகிய வடுகனுடனும் தமிழ் பிராமணராகிய நீலவுடனும் கொண்ட காம ஆசை மிகுதியால் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்ட செய்தி பற்றியும் மகாவம்சம் குறிக்கத் தவறவில்லை. (M.V. XXXIV: 16-28) மேலே குறிப்பிட்ட சான்றுகள் இயற்கையாகவே தமிழ

நாட்டின் பெயரால் 'மதுரை ஈழத்துத் பூதந்தேவனார் என அழைப்பதில் கொண்டிருந்த பெருமையினை எடுத்துக் காட்டுவது போல் மதுரையில் வாழ்ந்த இன்னொரு 'ஈழத்தவர் பற்றிய பிராமிக் கல்வெட்டொன்றும் திருப்பரங்குன்றத்தில் உளது. இக் கல்வெட்டு எருக்கோட்டூரில்

கயிற்றினால் கட்டி தலை கீழாக கிணற்றில் முக்கி எடுத்தார்கள். பின்பு அடித்து உதைத்தார்கள். மற்ற இரண்டு பிராமணப் பையன்களும் கூட இப்படித்தான். அயலில் அமைதிப் படைக்காக உளவு பார்த்த ஒருவரை புலிகள் சுட்டுவிட்டார்தார்கள். நீர்வேலியிலிருந்து உரும்பராய்க்கு நடத்திச் சென்று பின்பு அங்கிருந்து நவக்கிரி முகாமுக்குக் கொண்டு சென்றார்கள். இது நடந்தது 1988 ஆம் ஆண்டு பதினோராந் திகதி வரையிலாகும். இந்த மாதிரிச் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்த

இன்னொரு விதமான அழிவு - இது முக்கியமாக விவசாயிகளையே பாதித்தது. செயின் புளொக் என்ற ராட்சத பீரங்கிகளால் ஏற்படுத்தப்பட்டது.

அமைதிப் படையினர் ஒழுங்

பாரம்பரியமாக, தமிழர்களுக்கு சார்பான நாடு இந்தியா என்ற நம்பிக்கை இருந்து வந்தது. தமிழ் இயக்கங்களுக்கு ஆதரவு நல்கி ஆயுத உதவி, பண உதவியெல்லாம் இந்தியா கொடுத்தது என்பது இதன் மேலும் பரம

துள்ளன.

வீரம் செறிந்த எமது வீர மைந்தர்களின் நாட்டுப் பற்றின் முன்னால் இந்தியாவும் அதன் ஏவலர்களும் தூசு என்பது உண்மையே.

□

[illegible]
பொங்கு மகிழ் வார்ப்பரிப் புதுமை ஆட்டம்
இழிநெஞ்ச எதிரிகட்கோ இதனால் வாட்டம்
இவ்விழாவைக் குழப்புதற்த இதயநாட்டம்
பழிசெய்யப் பாதகர்கள் பார்த்திருந்தார்
பாதுகாப்புச் சீருடையில் வந்து சேர்ந்தார்.

குண்டெறிந்து கூட்டமதைக் குழப்பினார்கள்
குறுந்தடியை வீசிச்சபை எழுப்பினார்கள்
வண்டமிழின் சுவை பருகி நின்ற கூட்டம்
வழியின்றி வகையின்றி அலறினார்கள்
குண்டர்களின் குண்டு மின் கம்பிதன்னை
குறிபார்த்து வெட்டியதால் தரையில்வீழ
வண்டுகளாய் குவிந்திருந்த மக்கள்மீது
வந்து விழுந்துயிர் குடிக்கச் சிதறினார்கள்.

ஒப்பரிய விழாவெடுத்துப் பெருமை கொண்டோம்
உலகளந்த தமிழன்னை அருமைகண்டோம்
செப்பரிய புகழ் கேட்டுச் சொக்கினின்றோம்
செந்தமிழ் எம் அன்னையென மகிழ்வுகொண்டோம்
இப்பெரிய தீங்கிழைத்தே இறுதிநாளில்
இயமதூதர் செய்திட்ட இழிசெயலால்
ஒப்பாரி யோடன்றோவிழா முடித்தோம்
ஒன்பது பேர்தமையன்று பாடையிட்டோம்.

பண்டுபுகழ் கொண்ட சிறீலங்காவிற்கு
பறந்துவந்த பலநாட்டு அறிஞர் இங்கு
பண்டாவின் மனையாட்டி ஆட்சிசெய்த
பண்பாட்டுக் கிசையாத கொடுமைதன்னை
கண்டார்கள், சென்றார்கள் கவலையோடு
கண்டனங்கள் செய்தார்கள் தமதுநாட்டில்
கொண்டார்கள் வெறுப்புணர்வு இந்நாட்டில்
குறைவில்லா களங்கத்தை இவர்கள் பூண்டார்.

அறத்துக்கு அடிபணிந்த தமிழர் தங்கள்
அகிம்சைக்கு வைத்தார்கள் முற்றுப்புள்ளி
மறத்துக்கு மறுவாழ்வு கொடுக்க மாற்றார்
மதிகெட்டு விதிகெட்டு வினை செய்தார்கள்
இறத்தற்கு அஞ்சாத இளைஞர் தங்கள்
இயக்கத்துப் போருக்கு வித்திட்டார்கள்
துறத்தற்கு முடியாத பகையுணர்வை
தொடர்தற்கு களமொன்று சமைத்திட்டார்கள்.

— தொடரும்

ஆய்வு

## மொழியியல்

# தமிழர் பற்றிக் கூறும் ஈழத்து பிராமிக் கல்வெட்டுகள் பற்றிய சில கருத்துக்கள்


**சி. க. சிற்றம்பலம்**

(தலைவர், வரலாற்றுத்துறை யாழ். - பல்கலைக்கழகம்)


*ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களில் தமிழர் சூடியிருந்த பெயர்களை நோக்கும் போதும் பௌத்த மதத்திற்குக் கொடுத்த தானங்களை நோக்கும் போதும் இவர்கள் பிராகிருத மொழிச் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தமையும் புலனாகின்றது. அநுராதபுரத்தில் உள்ள பிராமிக் கல்வெட்டு 'இலுப்பரட்ட தமேழ சுமண' எனக் குறிப்பதும், திருப்பரங்குன்றக் கல்வெட்டு 'எருங்கலத்தூர் ஈழத்துக் குடும்பிகள்' எனக் குறிப்பதும் 'தமேழ' 'ஈழ' என்ற பெயர் இரு நாடுகளை / நாட்டோரையே குறித்து நின்றது புலனாகின்றது.*

அடுத்து வரும் பிராமிக் கல்வெட்டுகளில் வவுனியா மாவட்டத்திலுள்ள பெரிய புளியங்குளத்திலுள்ள இரு பிராமிக் கல்வெட்டுக்கள் முக்கியம் பெறுகின்றன. (Paranavitana. S. 1970: 28) இதில் முதலாவது கல்வெட்டு தமிழ் வணிகனாகிய 'ககபதி' விசாகனது குகை பற்றிக் கூற மற்றையது தமிழ் வணிகனாகிய ,ககபதி விசாகன் குகைக்கமைத்த படிக்கட்டுகள் பற்றிக் கூறுகின்றது. நான்காவது கல்வெட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள குடிவிலிலுள்ளது. இதில் தீகவாபியில் வசிக்கும் தமிழ் வணிகச் சகோதரர்களும் அவர்களது மனைவியாகிய 'திஸ' என்ற தமிழ்ப் பெண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளனர். (Paranavitana. S. 1970; 37) அநுராதபுரம், வவுனியா, குடிவில் (தீகவாபி) ஆகிய இடங்கள் பண்டைய ஈழத்தின் கேந்திர மையங்கள் ஆகும். இத்தகைய மையங்களில் வணிகத்தில் ஈடுபட்ட தமிழ் நாட்டவரையே 'தமேழ' என்ற சொற்பிரயோகத்தால் இக்கல்வெட்டுக்கள் அழைக்கின்றன எனலாம். நாட்டின் பெயர் தான் பின்னர் 'தமிழ்' என மொழிக்குக் கூட வந்திருக்கலாம்.

'தமேழ, என்ற இப்பதம் 'தமிழ் நாட்டவரையே' குறித்து நின்றது என்பதை வேறு பல சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. ஈழத்துப் பாளி நூல்களில் காணப்படும் வடிவம் 'தமிழ' (Damila) என்பதாகும். பாளியில் 'ழ' கரம் இல்லாததால் ழகரம் ளகரயாக இவ்வாறு வழங்கலாயிற்று. இங்கும் தமிழ எனவரும் பிரயோகம் தமிழ் நாட்டவரையே குறித்து நிற்கின்றது. கிரேக்க அறிஞர்களும் இக்காலத்தில் தமிழ் நாட்டை (Damirike) 'தமிரிகே' என அழைத்திருப்பதனை நோக்கும் போது தமேழ- தமிழ - தமிரிகே ஆகியவை தமிழ் நாட்டை- நாட்டவரைக் குறித்து நின்றதும் தெளிவாகின்றது.

இச் சந்தர்ப்பத்தில் ஈழத்தின் மீது தமிழகத்திலிருந்து கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னர் ஏற்பட்ட படை எடுப்புகள் பற்றிப் பாளி நூல்களில் வரும் குறிப்புக்கள் ஆராயப்பாலவையாகும். முதலாவது படை எடுப்பை நிகழ்த்தியவர்கள் தமிழர்களாகிய சேனன், குத்திகன் ஆகிய இரு குதிரை வணிகரது புத்திரர்களே. இவர்கள் அநுராதபுரத்தில் 22 வருடம் (கி. மு. (177-155) ஆட்சி செய்தவர். (M. V. XXI. 10-112) இரண்டாவது படை எடுப்பை நடாத்திய தமிழராகிய எல்லாளன் சோழ நாட்டவன் ஆவன். அநுராதபுரத்தில் 44 வருடங்கள் (கி. மு. 145- 101) நீதிதவறாது ஆட்சி செய்தவன். (M. V. XXI; 13-14) துட்டகைமுனுவுடன் இவனும் இவனது சகாக்களும் நடாத்திய யுத்தம் பற்றி மகாவம்சம் விரிவாகக் கூறுகிறது. எல்லாளனைத் தோற்கடித்த துட்டகைமுனு கூட முழு இலங்கையையும் ஒரே குடைக்கீழ் கொண்டு வந்து ஆட்சி செய்வதற்கு முப்பத்திரண்டு தமிழ் மன்னர்களைத் தோற்கடிக்க வேண்டியிருந்ததையும் மகாவம்சம் குறிப்பிடுகிறது. (M. V. XXV: 75) மூன்றாவது படைஎடுப்பு பாண்டிநாட்டவரால் மேற்கொள்ளப்பட்டது. வட்டகாமினி மன்னன் காலத்திலே இப்படை எடுப்புக்கள் நடந்தன எனக் கூறும் மகாவம்சம் இதில் ஏழு தமிழர் ஈடுபட்டதாகவும் இருவர் நாடு திரும்ப மிகுதியான ஐவரும் மாறி மாறி 14 வருடமும் 7 மாதமும் ஆட்சி செய்ததாகவும் கூறி இவர்களின் பெயர்களாக புலஉறத்த பகிய, பனபமாறக, பிலிய, மாறக, தாதிக என்போரைக் (கி. மு. (43-29) குறிப்பிடுகிறது. பாளி நூல்கள் இவர்களைப் பஞ்சதிராவிடர்- ஐந்து திராவிடர்கள் எனவும் அழைக்கின்றன. (M. V. XXXIII: 54-61) இதே மகாவம்சம் ஈழத்து மன்னர் தமது அரசியல் அதிகாரத்தை நிலை நாட்ட தமிழரிடமிருந்து பெற்ற உதவிகள் பற்றியும், அரசியலில் தமிழர் பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றியும் குறிப்பிடத்தவறவில்லை. ஈழத்து அரசனாகிய சோரநாகனின் மனைவி அனுலாதேவி (கி. மு. 48-44) தமிழராகிய வடுகனுடனும் தமிழ் பிராமணராகிய நீலவுடனும் கொண்ட காம ஆசை மிகுதியால் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்ட செய்தி பற்றியும் மகாவம்சம் குறிக்கத் தவறவில்லை. (M.V. XXXIV: 16-28) மேலே குறிப்பிட்ட சான்றுகள் இயற்கையாகவே தமிழகத்தவரிடம் வெறுப்புக் கொண்ட பாளி நூலாசிரியர்கள் கூட கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னர் தமிழர் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றன. ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களில் தமேழ என வரும் குறிப்புகளும் பண்டைய ஈழத்தில் தமிழகத்தின் செல்வாக்கு மேலோங்கியிருந்ததையும் இங்கே தமிழ்மொழியைப் பேசுவோர் வாழ்ந்ததையும் எடுத்துக் காட்டுகின்றது.

இத்தகைய செல்வாக்கு ஒரு முனைப்பட்டதாக அமையவில்லை. மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் பற்றி வரும் குறிப்பு மதுரையில் வாழ்ந்த தமிழ்ப்புலவர் தம்மை தாய் நாட்டின் பெயரால் 'மதுரை ஈழத்துத் பூதந்தேவனார் என அழைப்பதில் கொண்டிருந்த பெருமையினை எடுத்துக் காட்டுவது போல் மதுரையில் வாழ்ந்த இன்னொரு 'ஈழத்தவர் பற்றிய பிராமிக் கல்வெட்டொன்றும் திருப்பரங்குன்றத்தில் உளது. இக் கல்வெட்டு எருக்கோட்டூரில் வசித்த ஈழத்துக் குடும்பிகனான போலாலையனால் அமைக்கப்பட்ட கற் படுக்கை பற்றிக் கூறுகிறது. Mahalingam T. V. 1967 255-256) இவ் எருக்கோட்டூர் சங்கப் புலவர்களில் ஒருவனாகிய தாயனின் ஊரென்பதும் ஈண்டு நினைவு கூரற்பாலது. இங்கே குறிப்பிடப்படும் ஈழத்துக் குடும்பிகள்' ஈழத்தவன் என்பது, கல்வி கேள்விகளிற் சிறந்த தமிழ்ப் புலமைமிக்க ஊரில் வசித்தவன் என்பதும் தெளிவு. குடும்பிகன் என்ற பதத்திற்கும் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளில் வரும் ககபதி என்ற பதத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. இப்பதங்கள் வணிகத்திலீடுபட்டுச் செல்வமீட்டிய நிலம் புலமுள்ள தனவந்தர்களைக் குறித்து நின்றதென்பர் அறிஞர்: இவர்களும் 'கமிக' போன்ற உள்ளூர் தலைவர்கள் 'பெருமகன்' போன்ற நிர்வாகிகள் ஆகியோரும் ஒரே வகுப்பினைச் சேர்ந்தவர்களே. (Karunatilaka. P. V. B 1986) இவர்கள் வெறும் வணிகர்களாக, தனவந்தர்களாக மட்டுமன்றிக் கல்வியிலும் சிறந்தவர்களாகவும் இருந்திருக்கலாம். ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களில் தமிழர் சூடியிருந்த பெயர்களை நோக்கும் போதும் பௌத்தத்திற்குக் கொடுத்த தானங்களை நோக்கும் போதும் இவர்கள் பிராகிருத மொழிச் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தமையும் புலனாகின்றது. அநுராதபுரத்தில் உள்ள பிராமிக் கல்வெட்டு 'இலுப்பரட்ட தமேழ சுமண' எனக் குறிப்பதும், திருப்பரங்குன்றக் கல்வெட்டு 'எருங்கலத்தூர் ஈழத்துக் குடும்பிகன் எனக்திருக்கலாம். குறிப்பதும் 'தமேழ' 'ஈழ' என்ற பெயர் இரு நாடுகளை நாட்டோரையே குறித்து நின்றது புலனாகிறது. இக் கருத்தினையே சங்கப்புலவர்களில் ஒருவராகிய 'மதுரை ஈழத்துப் பூதந்தேவனார்' பற்றிவரும் குறிப்பும் உறுதி செய்கின்றது. பண்டைய ஈழத்தில் தமிழ் பேசப்பட்டதற்கும் தமிழர் அரசியலிலே அதிகாரத்தில் அமர்ந்திருந்ததற்கும் உள்ள சான்றுகள் தமிழர் இங்கு செல்வாக்குள்ளவர்களாக விளங்கியதை எடுத்துக் காட்டினாலும் கூட கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னர் தமிழர்- சிங்களவர் கலாசாரங்கள் இனரீதியாகக் கூர்மையடைய முன்னர் அனைவரும் 'ஈழ- ஈழவர் என அழைக்கப்பட்டதும் தெரிகின்றது. இதனாற்றான் ஈழத்தில்பிராமிக் கல்வெட்டுக்களில் சிங்கள - சிங்களவர் என்ற சொற்பிரயோகம் கூடக் காணப்படவில்லை. இவர்கள் பேசியமொழிகள் தமிழின் கிளை மொழிகளாகவும் இருந்

தொல்காப்பியர் தமது எழுத்ததிகாரச் சூத்திரத்தில் தமிழகத்திலிருந்த கிளை மொழிகளை 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும் தம் குறிப்பினமே திசைச் சொற்கிளவி' எனக் குறிப்பது போன்று ஈழத்திலும் இத்தகைய கிளை மொழிகள் இருந்திருக்கலாம். இவை வெவ்வேறு பெயர் கொண்டும் கூட அழைக்கப்பட்டிருக்கலாம். இவற்றுடன் சிங்களத்தின் மூதாதை மொழியாகிய 'எலுவின் செல்வாக்கு நாளடைவில் ஓங்கியிருக்கலாம்.

பௌத்த மதத்தின் வருகையாலும் தமிழ் நாட்டின் செல்வாக்காலும் பொதுவான ஈழத்துக் கலாசாரம் தமிழ் சிங்களம்- இந்து- பௌத்த கலாசாரங்களாகத் திசை மாறியது. இது பற்றி பிறிதோரிடத்தில் ஆராயப்பட்டுள்ளது. (Sitrampalam. S. K. 1988)

□

# விண்வெளி விஞ்ஞானம்

வெள்ளி சுழல்கிறது. மற்றக் கிரகங்களைப் போல அதுவும் தனது அச்சிலே சுழல்கிறது. ஆனால் மற்றக் கிரகங்களைப்போல, வெள்ளியும் தன்னைத்தானே சுற்றினாலும், அப்படிச் சுற்றுவதில் அதற்கும் மற்றக்கிரங்களுக்குமிடையே - யுரானசைத்தவிர- ஒரு வேறுபாடு உண்டு. வெள்ளியைப் பற்றி மைக்கிரோ ராடார் அலைகள் கூறிய விபரம், வானியல் அறிஞர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

யுரானஸ் என்ற கிரகத்தைத்தவிர, சுழற்சியைப்பற்றிய - அதாவது அவற்றின் சுயசுழற்சி பற்றிய விபரங்கள் அறியப்பட்ட கிரகங்கள் அனைத்துமே நேராகச் சுழல்பவை. அதாவது, சூரியனைச் சுற்றி வரும் திசையிலேயே கிரகமும் சுழல்வதாகும். உதாரணமாக, மேற்கில் இருந்து கிழக்காகச் சுழல்கிறது. அதே போல மேற்கிலிருந்து கிழக்காக பூமி சூரியனையும் சுற்றி வருகிறது. யுரனாசை தவிர மற்ற ஏழுகிரகங்களும் இதே போன்று மேற்கிலிருந்து கிழக்காக தம்மைத்தாமே சுற்றுவதோடு அதே திசையில் சூரியனையும் சுற்றி வருகின்றன.

இந்தப் பொதுவிதிக்கு விலக்காக விளங்குகிறது வெள்ளி. சூரியனைச் சுற்றிவரும் திசையிலேயே தன்னைத்தானே சுற்றாமல் வெள்ளி பின்னோக்கி சுழல்கிறது. இந்த உண்மையை ராடார் வானியல் நிரூபித்துவிட்டது. வண்டி செல்லும் போது, அது செல்லும் திசையில்தான் அதன் சக்கரங்கள் சுற்றுவது வழக்கம். இதே போல பெரும்பாலான கிரகங்கள் சுற்றுகின்றன. ஆனால் வண்டி முன்னோக்கிச் செல்ல அதன் சக்கரம் பின்னோக்கிச் சுழல்வதுபோல -வெள்ளிக்கிரகம் - பின்னோக்கிச் சுழல்கிறது. மாறிச் சுழல்கிறது.

என்ன காரணங்களினால் வெள்ளி பின்னோக்கிச் சுழல்கிறது என்பது இன்னமும் யாருக்குமே தெரியாது. இந்த அதிசயமான புதிரை வானியல் வல்லுனர்கள் ஆர்வத்தோடு வரவேற்றிருக்கிறார்கள். வெள்ளியின் (வீனஸ் என்ற தேவதையின்) மர்மங்கள் ஒவ்வொன்றாகத் துப்புத்துலக்கப்பட்டு,விளங்கிக் கொள்ளப் பட்டுவரும் வேளையில் இது போன்ற புரியாத புதிர்கள் புதிது புதிதாகத் தோன்றுவதை அவர்கள் வரவேற்பதில் வியப்பொன்றுமில்லை.

சூரிய குடும்பம் தோன்றியது எப்படி? என்ற விஷயமும்-இந்தப் புதிரை அவர்கள் விடுவிக்கும் போது - பூரணமாகப் புரிந்து கொள்ளப் பட்டுவிடும் என வானியலறிஞர்கள் நம்புகிறார்கள்.




வெள்ளியின் மாறுபட்ட சுழற்சி மிகவும் மெதுவாகவே இடம்பெறுகிறது, அது தன்னைத்தானே ஒரு தடவை சுழல 243 நாட்கள் ஆகின்றன. சூரியனை அது ஒரு தடவை சுற்றிவர 224·7 (224·5) நாட்கள் ஆகின்றன. இந்த இருவகையான சுழற்சியின் பலனாக வெள்ளியிலே 118 நாட்களுக்கு ஒரு தடவை தான் சூரியன் உதிக்கிறது. வெள்ளியின் சுய சுழற்சிக் காலத்தைத் தீர்க்கமாகத் தெரிந்துகொண்டது விஞ்ஞானிகட்குப் பெரிய உதவியாக இருந்தது. அதனுடைய நீண்டபகலிலே மிக முக்கியமான - குறிப்பிடத்தக்க - சீதோஷ்ண மாறுபாடுகள் அங்கே ஏற்படும் என்பதை ஊகிக்க முடிந்தது. இந்த ஊகமும் சரியானதே என்பது இப்பொழுது நிரூபிக்கப்பட்டுவிட்டது,

சூரியனுக்கு நேர் கீழேஉள்ள பகுதியின் உஷ்ணம் 1300°F ஆக இருக்கும். அதே சமயம் அப்பிரதேசத்துக்கு எதிர்ப்புறமாக இருக்கும் இருண்ட பகுதியின்உஷ்ணம் சுமார்600 °F ஆக இருக்கும். துருவப் பிரதேச உஷ்ணம் இதினிலும் குறைந்த அளவினதாக இருக்கலாம். அங்கே சுமார் 400°F ஆக இருக்கக் கூடும். இந்த அளவு பூமியிலே நீர் கொதிக்கும் அளவிலும் கூடியது. கடல் மட்டத்திலே நீர் 212°F இல் கொதிக்கிறது. வெள்ளியில் அங்குள்ள சூழலினால் ஏற்படும் அமுக்கம் அதிகம். ஆகவே நீர் கொதிக்கும் உஷ்ணத்தின் அளவும் பூமியிலும் கூடியதாக இருக்கும். இதனால் உஷ்ணம் குறைந்தபகுதிகளில் நீர் திரவரூபமாக இருக்கக்கூடும். அந்த நீர்கூட,இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு இயந்திரசாலையில் கொதி நீர்க் களஞ்சியத்தில் குமுறிக்கொண்டிருக்கும் நீரைப் போலவே இருக்கும்!

## வெள்ளியில் மலைகள்

பூமி, செவ்வாய் ஆகிய கிரகங்கள் தமது அச்சில் மிக வேகமாகச் சுழல்கின்றன. ஒரு தடவை பூமி தன்னைத் சுற்றுவதற்கு 24 மணித்தியாலங்கள் ஆகின்றன. ஆனால் வெள்ளி தனது அச்சில் ஒரு தடவை சுற்ற 243 நாட்கள் ஆகின்றன என்றும் சூரியனைச் சுற்றிவர 224·7 நாட்கள் ஆகின்றன எனவும் பார்த்தோம். இந்த இரு வகைச் சுழற்சியின் விளைவாக வெள்ளியில் ஒருநாள் என்பது 118ப் பூமி நாட்களுக்குச் சரிஎன்றும் அறிந்தோம். அங்கே சூரியன் 118 நாட்களுக்கு ஒருதடவை உதிக்கும்.

வெள்ளியின் தரைப் பிரதேசம் எப்படி இருக்கும் என்பதை வெள்ளியின்மீது இறங்கி ஆராய்ச்சி செய்யாமல் கூறமுடியாது என நினைப்பது சாதாரணமாகச் சரியே. இடைவெளியின்றி குடைபோல கவிந்து மூடியிருக்கும் முகில்களுக்குக் கீழே உள்ள வெள்ளியின் தரைப்பிரதேசம் எப்படி இருக்கும் என ஊகிக்க முயல்வது, பிரயோசனமற்ற ஒரு வேலைபோலத் தோன்றக்கூடும். இருந்தபோதிலும் புதிய றேடியோ வானியலின் நுட்பமான ஆய்வு முறைகளைக் கொண்டு ஆச்சரியப் படத்தக்க அபூர்வமான தகவல்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

வெள்ளியின் தரைப் பிரதேசத்திலிருந்து வரும் ரேடியோ அலைகளை -அவற்றின் நீளங்களை - அலசி ஆராய்ந்து அறிந்துகொண்டதன் மூலமாகவே இவ்வளவு தகவல்களும் சேகரிக்கப்பட்டன. நீளம் கூடிய அலைகள் ஆழமான பிரதேசங்களில் இருந்தும், நீளம் குறைந்த அலைகள், ஆழம் குறைந்த அல்லது சமதரையான பிரதேசங்களில்இருந்தும் வருகின்றன என நம்பப்படுகிறது. அத்துடன் ஆழமான பிரதேசங்களில் உள்ள பொருட்கள் ஓரளவுக்கு ஸ்திரமான ஒரே அளவான உஷ்ணத்தை உடையவை என்றும் நம்பப்படுகிறது. பகலிலே அப்பொருட்களின் உஷ்ணம்ஆகக் கூடிய அளவுக்கு அதிகரிப்பதும் இல்லை. இரவிலே அப்பொருட்களின் உஷ்ணம் ஆகக் குறைந்த அளவுக்கு இறங்கிவிடுவதும் இல்லை.ஒருயார் ஆழமான இடத்திலே கூட பகலுக்கும் இரவுக்கும் இடையிலே ஏற்படக்கூடிய உஷ்ண வேறுபாடு, மிகவும் குறைந்த அளவினதே ஆகும். இதிலிருந்து ஊகிக்கக்கூடியது என்னவென்றால், மேற்பரப்பிலே உள்ள பொருள் உஷ்ணத்தை நன்கு தடைசெய்யக் கூடியது என்பதாகும். மேற்பரப்பிலே உள்ள பொருள் சிறந்த இன்ஸுலேற்றர் - உஷ்ணம் பரவாமல் தடுக்கக்கூடியது - என்று தெரிகிறது.

இதிலிருந்து வெள்ளியின் பெரும்பாலான மேற்பரப்பு பிரதேசம் மிகவும் நுண்மையாகத் துகளாக்கப்பட்ட தூசுகளினாலான தூசுப்படலமாக இருக்கலாம். இப்படிப்பட்ட தூசுப்படலத்தினால் அதுவும் தடிப்பான தூசுப்படலத்தினால் வெள்ளியின் மேற்பரப்பு மூடப்பட்டிருக்கிறது. நுண்ணிய துகள்களினால் ஆன துசுப்படலம் உஷ்ணத்தைப் பரவவிடாமல் தடுத்து நிறுத்தி விடக்கூடிய தன்மை உடையதாகும்.

1960ஆம் ஆண்டின் முற்பகுதியிலே ராடார் வானியல் மூலம் இத்தகவல்கள் அறிந்து கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகள் மூலம் வேறும் முக்கியமான விஷயமும் கண்டுகொள்ளப்பட்டது. தரைப் பிரதேசம் நுண்ணிய துகள்களினால் மூடப்பட்டிருப்பது மட்டுமன்றி, மலைத்தொடர்கள் பெரிய மலைப் பிளவுகள் மலைப்பிளவுகளைப் போன்ற ஒரு அமைப்பு வெள்ளியிலே உண்டு என்ற உண்மையை ராடார் வானியல் ஆராய்ச்சி புலப்படுத்தியது. இராணுவ ராடரில் ஸ்கோப் (Scope) என்ற ஒரு கருவி உண்டு. இந்தக்கருவியில் விமானங்கள், கப்பல்கள் என்பன நேராக தத்ரூபமாகத் தெரியும். இதுபோல வெள்ளியில் உள்ள மலைகளோ பள்ளங்களோ ராடாரில் தத்துரூபமாகத்தெரியமாட்டா. □

**உடுவில் விவியன் நமசிவாயம்**

# நேரமும் நிலையும்

கலை முகில்கள் கூடி
கவி பொழியும் வானத்தில்
அலையும் வெண்முகில் நான்.
அன்பான மயில்களே!
வளியில் நான் அடைந்த
வேதனையின் அச்சத்தால்
மண்ணுக்கு மீள மனமின்றி
மேலுயர்ந்தேன்.

மண்பிளந்து–நீர்வரண்டு
மரஞ் செடியெலாம் வருந்தி
கண்கலங்கும் போது—
மயில்களே!
நீங்கள் வாடி வருந்தியது
என் மனதுக்குத் தெரியும்.

பல காலம் மழைமுகிலாய்
பணியாற்ற வேண்டும்
பலர் மனமும்–விளைநிலமும்
குளிராக வேண்டும்—
என நினைத்த என் முகத்தில்
எச்சிலாய் இரத்தம்
உமிழ்ந்ததனால்-நான்
உருக்குலைந்து போனேன்.


என் மனம் எரிந்த போது
சூரியனே வெப்பத்தால்
சுருங்கிப்போனான்.
என்னைத் தழுவி
இதமளித்த சந்திரனும்
'என்னால் ஆபத்து'
என்றுணர்ந்தோ – தன்னை
தூரவைத்துக் கொண்டே
சிரித்தான்

சேர்ந்து திரிந்ததனை மறந்து
தென்றலும் என்னை சினந்து
'ஓடு எங்கேனும்' என்றே
உபதேசம் செய்தது
வானத்தில் ஓடி
ஒளிக்க இடம் தேடி
நானுற்ற துயரங்கள்
நட்சத்திரம் அறியும்
மயில்களே
என்னை மன்னிக்க வேண்டும்
பூமாலை கட்டுகிறற
பூ விரலை - கோடரியால்
கொத்திக் கிழிக்கின்ற
கொடுமையினைப் போல்
மனதை - கசக்கிப் பிழிந்து
காயவிட்ட வெய்யிலின் பின்
மண்ணில் மழைபொழிய
என் மனது மறுக்கிறது.
தன் கண்ணில் மழைபொழிந்து
கவலையை குறைக்கின்றது


**நாக. சிவசிதம்பரம்**

10 - 11 - 89

இன்று ஓர் செய்தி கிடைத்தது. காது கேட்கும் சக்தி குறைவாக உள்ள ஒரு தாய் தனது மகனைப் பார்ப்பதற்காக வந்தபோது அவருக்குச் சாப்பாடு கொண்டு வந்தார். இவர் கொண்டு வந்த சாமான்களை பரிசோதனை



ஒழிக'' என்று கத்தியபோது மட்டும் தாங்கள் உற்சாகமாகச் சொன்னதாகவும் தகவல் அனுப்பினர். கொஞ்சத் தூரம் ஊர்வலம் செல்கையில் தான் அங்கு கலந்து கொண்ட அனைவருமே தங்களைப் போல் பலாத்காரமாக ஊர்வலத்துக்குக் கொண்டு வரப்பட்டவர்கள் தான் என்று தெரிந்ததாம்.



பருத்தித்துறையிலிருந்து நேரே மந்திகைச்கு வந்தேன். மந்திகை ஆஸ்பத்திரியில் நோயாளர்கள் தான் உண்டு. டாக்டர்கள் இல்லை. எமது மக்களுக்குச் சேவை செய்வது அங்குள்ள பிரான்சிய டாக்டர்களே. இந்திய அமைதிப் படையால் சுடப்பட்டுக் குடல் வெளியேறிய ஒரு மாணவனை மந்திகையில் சந்தித்துக் கவ

நோய் பாரிசவாதம், கண் வருத்தம்... இப்படியான எத்துறைக்கும் இந்நிலையே.

வவுனியா ஆஸ்பத்திரியில் எம். பி. பி.எஸ். டாக்டர் ஒருவரே உள்ளாராம்! நோயாளிகள் தொகை கூடினால், அவர்களை வெளியே போ உள்ளே வா என டாக்டர்கள் கலைக்கிறார்கள்.

வண்டி முன்னோக்கிச் செல்ல அதன் சக்கரம் பின்னோக்கிச் சுழல்வதுபோல - வெள்ளிக்கிரகம் - பின்னோக்கிச் சுழல்கிறது. மாறிச் சுழல்கிறது.

என்ன காரணங்களினால் வெள்ளி பின்னோக்கிச் சுழல்கிறது என்பது இன்னமும்

தெரிந்துகொண்டது விஞ்ஞானிகட்குப் பெரிய உதவியாக இருந்தது. அதனுடைய நீண்டபகலிலே மிக முக்கியமான - குறிப்பிடத்தக்க - சீதோஷ்ண மாறுபாடுகள் அங்கே ஏற்படும் என்பதை ஊகிக்க முடிந்தது. இந்த ஊகமும் சரியானதே என்பது இப்

## வெள்ளியில் மலைகள்

பூமி, செவ்வாய் ஆகிய கிரகங்கள் தமது அச்சில் மிக வேகமாகச் சுழல்கின்றன. ஒரு தடவை பூமி தன்னைத் சுற்றுவதற்கு 24 மணித்தியா

தேசங்களில் இருந்தும் வருகின்றன என நம்பப்படுகிறது. அத்துடன் ஆழமான பிரதேசங்களில் உள்ள பொருட்கள் ஓரளவுக்கு ஸ்திரமான ஒரே அளவான உஷ்ணத்தை உடையவை என்றும் நம்பப்படுகிறது. பகலிலே அப்பொருட்களின் உஷ்ணம்ஆகக்

(Scope) என்ற ஒரு கருவி உண்டு. இந்தக்கருவியில் விமானங்கள், கப்பல்கள் என்பன நேராக தத்ரூபமாகத் தெரியும். இதுபோல வெள்ளியில் உள்ள மலைகளோ பள்ளங்களோ ராடாரில் தத்ரூபமாகத்தெரியமாட்டா. □

மனதை - கசக்கிப் பிழிந்து
காயவிட்ட வெய்யிலின் பின்
மண்ணில் மழைபொழிய
என் மனது மறுக்கிறது.
தன் கண்ணில் மழைபொழிந்து
கவலையை குறைக்கின்றது

நாக. சிவசிதம்பரம்

# சிறைப்படாத சிந்தனைகள்



10 - 11 - 89

இன்று ஓர் செய்தி கிடைத்தது. காது கேட்கும் சக்தி குறைவாக உள்ள ஒரு தாய் தனது மகனைப் பார்ப்பதற்காக வந்தபோது அவருக்குச் சாப்பாடு கொண்டு வந்தார். இவர் கொண்டு வந்த சாமான்களை பரிசோதனை செய்தபின் சாப்பாட்டை வைத்து விட்டு ஏனையவற்றைக் கொடுக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு சாமானாக பையில் அடுக்கி வைத்த அந்தத் தாய் சாப்பாட்டையும் கொண்டு மகனைப் பார்ப்பதற்குச் செல்ல முயன்றிருக்கிறார். இதனைக் கவனித்த ஆமியினால் அவர் துடிக்கத் துடிக்கத் தும்புக்கட்டையினால் அடிவாங்கியிருக்கிறார். அடிவாங்கும் அந்தத் தாயைக் கண்ட ஏனைய பெற்றோர் கண்ணீர் விட்டு அழுதார்களாம். தும்புக்கட்டையினால் அடித்த அந்த வீரர் தனது மீசையைத்தடவி விட்டு ஏனையவர்களைப் பார்த்து ஹிந்தியில் ஏதோ சொல்லி விட்டுச் சென்றாராம். அடிவாங்கிய அந்தத் தாய் அழுதபடியே தனது மகனைப் பார்ப்பதற்குச் சென்றாராம்.

தனது மகனை ஈன்றபொழுதில் இந்தத்தாய் எத்தனை கனவுகளில் மிதந்திருப்பார்? பெற்ற மகனுக்குச் சாப்பாடு கொடுக்க விடாமல் ஒரு ஆக்கிரமிப்புக் கரம் நீளும் என்று யார் தான் நினைத்திருப்பார்கள்? பெற்றதாய் தனது மகனுக்கு விஷத்தையா கொடுத்து விடுவார்? இப்போது தான் எம்மைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கிறார்கள். கடந்த மே மாதத்திலிருந்து எம்மைப் பார்வையிடுவதைத் தடைசெய்து சில மாதங்களின் பின்னர் எம்மைப் பார்வையிட முடியாதென்றும் எமக்குச் சாமான்கள் ஏதாவது கொடுக்க விரும்பினால் அதைத் தாங்கள் கொடுப்பதாயும் வியாழக்கிழமையில் மட்டுமே சாமான்கள் கொண்டுவரமுடியுமென்றும் அறிவித்திருந்தனர் தமது பிள்ளையைத்தான் பார்க்கவிடவில்லை. சாமான்களையாவது கொடுப்போம் என்றெண்ணி வியாழக்கிழமைகளில் சாமான்களைக் கொண்டு வந்து இவர்களிடம் கொடுத்தனர். ஜூலை 29 உடன் இந்தியப்படை இலங்கையிலிருந்து வெளியேற வேண்டும் என்று பிரேமதாஸ பகிரங்கமாக அறிவித்ததும் எப்படியாவது இந்த மண்ணில் தாங்கள் நிரந்தரமாகத் தங்கிவிட வேண்டுமென்று நினைத்த இந்திய ஏகாதிபத்தியம் எமது மண்ணைவிட்டு இந்திய இராணுவம் போகக் கூடாது என்று ஊர்வலம் போகும்படி இங்கு வந்த எமது தாய் தந்தையர்கள் அனைவரையும் தமது வாகனங்களில் ஏற்றி யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு சென்று E.P.R.L.F இடம் ஒப்படைத்தார்கள். சுற்ற வர இந்திய இராணுவம் நிற்கையில் அவர்களால் என்ன செய்யமுடியும். தமது பிள்ளைகளைச் சித்திரவதை செய்து இருட்டறையில் அடைத்து வைத்து அவர்களைப் பார்ப்பதற்குக் கூட அனுமதிக்க மறுக்கும் இந்த இந்திய இராணுவம் வெளியேறக் கூடாது என்று இவர்களும் சொன்னார்களாம். சொல்லாமலிருந்தவர்களை நோக்கி S.L.R பின்பக்கத்தை உயர்த்தும் போது இவர்களால் என்ன செய்யமுடியும். ஊர்வலத்தின் முன்னே சென்ற E.P.R.L.F வினர் ''எட்டப்பர் கூட்டம் ஒழிக'' என்று கத்தியபோது மட்டும் தாங்கள் உற்சாகமாகச் சொன்னதாகவும் தகவல் அனுப்பினர். கொஞ்சத் தூரம் ஊர்வலம் செல்கையில் தான் அங்கு கலந்து கொண்ட அனைவருமே தங்களைப் போல் பலாத்காரமாக ஊர்வலத்துக்குக் கொண்டு வரப்பட்டவர்கள் தான் என்று தெரிந்ததாம். அன்று இரவு ''தூரதர்ஷனைப் பார்த்த இந்தியப் பொதுமக்களுக்கு இப்படித்தான் ஊர்வலத்துக்கு ஆட்களைக் கொண்டு வந்தார்கள் என்று தெரியவா போகிறது? T.V ஐயும் றேடியோவையும் நம்பி எத்தனை நாள் தான் ராஜீவ் ஆட்சி செய்யப்போகிறார்?

இன்று இங்கே வந்த தாய் தனது மகனுக்குச் சாப்பாடு கொண்டு வந்ததற்காக தும்புக்கட்டையால் அடிவாங்கியுள்ளார். இந்தத் தாய் அழுத கண்ணீருக்கு ஒரு சக்தி உண்டு அது வரவிருக்கும் தேர்தலில் இந்திய வாக்காளாரின் கைகளில் இதே தும்புத்தடியைக் கொடுத்து தனது பலத்தைத் திரு. ராஜீவ் காந்திக்குக் காட்டும் என்பது மட்டும் நிச்சயம்.

அன்று இலங்கைத் தமிழ் மக்கள் பட்டினியால் வாடுகின்றார்கள் என்றும் தானே இலங்கைத் தமிழ் மக்களின் ''ஆபத்பாந்தவன்'' ''அனாத ரட்சகன்'' என்று ஆகாயத்திலிருந்து உணவு போட்டு உலகைத் திசை திருப்ப முயன்றார் ராஜீவ். ஆகாயத்தைப் பார்த்து அதிசயத்தால் வாய் திறந்தவர்கள் இன்று ராஜீவின் ஒவ்வொரு செயலுக்காகவும் அதிர்ச்சியுடன் வாய் திறக்கிறார்கள். விரைவில் இதே வாய்கள் சுதந்திரமாகத் திறக்கும். அப்போது நேரு குடும்பத்தின் பெருமைகளை உரக்க ஒலிக்கும் இந்திய வானொலியும் தூரதர்ஷனும் வாயை மூடிக் கொள்ளும்! □

> இன்று இங்கே வந்ததாய் தனது மகனுக்குச் சாப்பாடு கொண்டு வந்ததற்காக தும்புக்கட்டையால் அடிவாங்கியுள்ளார். இந்தத் தாய் அழுத கண்ணீருக்கு ஒரு சக்தி உண்டு. அது வரவிருக்கும் தேர்தலில் இந்திய வாக்காளரின் கைகளில் இதே தும்புத்தடியைக் கொடுத்து தனது பலத்தை திரு ராஜீவ் காந்திக்குக் காட்டும் என்பது மட்டும் நிச்சயம்.

# அப்புக்காத்து ஆறுமுகம்



பருத்தித்துறை நகர், கடற்கரைப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளுக்கு விஜயம் செய்தேன். அங்கிருந்த பாரிய கட்டடங்கள் எல்லாம் உடைந்து தொங்குகின்றன. பருத்தித்துறை நகரில் பிரபல்யமாக இருந்த தெப்பக்குளத்துக்கு அருகே இருந்த கட்டிடங்கள் மண்ணோடு கிடக்கின்றன. மகாத்மாகாந்தி சிலையைப் பார்த்தேன். சிலைக்கு மேலே மூடிக்கட்டியிருந்த குடை அவரின் முகத்தின் மேல் விழுந்து காந்திஜியின் முகத்தை மறைத்துளளது. பாவம் காந்தி ..... அன்னை பூபதி, திலீபன் ஆகியோரின் தியாகத்தால் மனம் நொந்து தனது முகத்தை மூடிக்கொண்டார்போல் தெரிகின்றது. அண்மையில் பருத்தித்துறைக் கடற்கரையில் செபமாலையென்ற வாலிபர் மிதிவெடியில் சிக்குண்டு ஒரு காலையும் கையையும் இழந்துள்ளார். இப்படி எத்தனையோ மிதிவெடிகளை அமைதிப்படை வைத்துச் சென்றிருக்கலாம். அதனால் மக்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அமைதிப்படை இங்கு வந்த போது நாம் கை காட்டி அழைத்தோம்...... அதன் தொடர்ச்சியாக நாங்கள் கால்களையும், கைகளையும் இழக்க வேண்டிய பரிதாப நிலை. □

பருத்தித்துறையிலிருந்து நேரே மந்திகைச்கு வந்தேன். மந்திகை ஆஸ்பத்திரியில் நோயாளர்கள் தான் உண்டு. டாக்டர்கள் இல்லை. எமது மக்களுக்குச் சேவை செய்வது அங்குள்ள பிரான்சிய டாக்டர்களே. இந்திய அமைதிப் படையால் சுடப்பட்டுக் குடல் வெளியேறிய ஒரு மாணவனை மந்திகையில் சந்தித்துக் கவலையடைந்தேன். அம்மாணவன் இப்போது சைக்கிள் ஓடுகின்றான். அவனை விசாரித்துக் கேட்டபோது. நான் இன்று உயிர் வாழ்வது பிரான்சிய டாக்டர்கள் தந்த பிச்சை என்றான். □

வெளிநாட்டுக் காசு வேண்டும்; அதன் பின்பு வசதியாக வாழ ஈழம் தேவை. இதுவே டாக்டர்களுக்குபடித்த பெரும்பாலானவர்களின் சிந்தனையெல்லாம்! இல்லையென்றால் அற்ப பணத்துக்காக, இனப்பற்று இன்றி இவர்கள் எல்லாம் இங்கிலாந்து, அமெரிக்கா பறந்திருப்பார்களா? இந்த மண்ணில் டாக்டர்கள் பற்றாக்குறையுண்டு! கேட்கவே வெட்கமாகவுள்ளது! இந்தக் கல்வி கனத்த மண்ணில்!!

பிரசவத்திற்குச் சரியான டாக்டர்கள் இல்லாது பெண்கள் இறக்கிறார்கள். முறிவு நோய் பாரிசவாதம், கண் வருத்தம்... இப்படியான எத்துறைக்கும் இந்நிலையே.

வவுனியா ஆஸ்பத்திரியில் எம். பி. பி.எஸ். டாக்டர் ஒருவரே உள்ளாராம்! நோயாளிகள் தொகை கூடினால், அவர்களை வெளியே போ உள்ளே வா என டாக்டர்கள் கலைக்கிறார்கள்.

மன்னார், யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு மாவட்டம் எல்லாம் டாக்டர்கள் பற்றாக்குறையே.

யாழ்ப்பாணம் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் தாதிமார் பயிற்சிக் கல்லூரியில் போதனாசிரியர்கள் தட்டுப்பாட்டால் பயிற்சித் திட்டம் பாதிப்படைந்து உள்ளது. சுகாதாரப் பரிசோதகர்கட்கான பயிற்சியும் அளிக்கப்படவில்லை.

தெல்லிப்பளையில் புற்று நோய் வைத்தியத்திற்காகக் கட்டிடங்கள் கட்டப்பட்ட போதும் பயிற்றப்பட்ட நிபுணர்கள் இல்லாமையால் வைத்திய நிலையம் இயங்க முடியவில்லை.

இனவாதத்தால் அழிக்க முடியாத தமிழினத்தை நோய் முடக்க விடலாமா ? சென்றிடுவீர் எட்டுத்திக்கும் ., பிடித்து வாருங்கள் நாட்டை விட்டுப்போன எமது டாக்டர்களை. □

# வள்ளுவ வாக்கியம்

நிலை!

ஆமாம், உயரிய நிலைக்கு வருதல் இலேசல்ல! எனினும் நீ அதனைப் பெற்றாய். கொள்கையில் மலைபோல நின்றாய்! கொட்டிய மழைக்கும் வீழ்ந்த இடிக்கும் நீ அஞ்சினாய்! இல்லை அசைந்தாயில்லை! பொருளையும் அற்ப சுகத்தையும் உன் காலடியில் விட்டு மாந்தர் மத்தியில் நீ குன்றுபோல் நின்றாய்! ஏன். இன்றும் நீ கொள்கையில் குன்று நிலையில் மலை! எனவேதான் உன்னை மதிக்கிறேன். மெச்சுகிறேன். வாழ்த்துகிறேன்.

அன்றொருவன் உன்போல எழ முயன்றான். சிறந்து எழுந்திடவும் செய்தான். பின்னர்... இடரும் துயரும் எதிர்கொண்ட வேளையில் அவன் எது செய்தான்? தளர்வெனும் பிணிக்கு அவன் இடம் கொடுத்தான். அற்பர்கள் காட்டிய ஆசை விரிந்தது மெல்லென அவற்றிற்கு இரையானான். உள்ளம் பீடை கொண்டது! நிலையில் பிறழ்ந்தான். சரிந்தான், வீழ்ந்தே போய்விட்டான். அவன் தலையினின்று விடுபட்ட மயிர் ஆனான்! அந்தோ! அவனது மதிப்பும் அதுவே! ஆயிற்று!

எனவேதான், மானமே வாழ்வென்ற மைந்தனே! வீரமே நிலைகொண்ட வேங்கையே! உன்னை வாழ்த்துகிறேன்!

(குறள்

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி




போட்டுவிட்டு ஓடித்தப்பித் தலைமறைவாயின. இந்த உக்கிரமான போரில் கோப்பாய் சந்திக்கு வர முடியாத நிலையில் நின்ற இந்திய இராணுவத்தின் ஒரு படைப்பிரிவை அக்காச்சி குறுப் தடுத்து நிறுத்தி வைத்துக் கொண்ட நிலையில் இன்னுமொரு இந்தியப்படைப் பிரிவு மறுபக்கத்தால் உரும்பிராய் கிருஷ்ணன் கோயிலடிக்கு இரவு வந்து கரந்தன் கிராமத்திற்குள் நுழைந்து பின்னர் நீர்வேலி செம்பாட்டு பிள்ளையார் கோயிலடிக்கு வந்து வாழைத் தோட்டங்களுக்கூடாக நீர்வேலி வெங்காய கூட்டுறவு சங்கம் அருகில் வந்தது. கொமாண்டோ மோட்டோர் ஷெல் தாக்குதல்களும் செயின் புளக்குகளாலும் தாக்கிய வண்ணம் கோப்பாய்ச்சந்திக்கு இந்தியா இராணுவம் இரவு பன்னிரண்டு மணிக்கே சென்றடைந்தது. இந்திய இராணுவ நடவடிக்கைகளின் போது நீர்வேலி பகுதியில் அதிக உயிர்ச்சேதமோ பொருட்சேதமோ ஏற்படாமல் அக்காச்சியே ஏற்ற நடவடிக்கைகளை எடுத்து தனது திறமையால் கிராமத்தைக் காப்பாற்றினான் என இப்பகுதி மக்கள் நினைவு கூர்ந்து கதைத்துக் கொள்கிறார்கள்.

### வேறும்பல தாக்குதல்கள்

1987 அக்டோபர் தொடக்கம் 1988 மார்ச் வரையுள்ள காலப் பகுதியில் நீர்வேலி பகுதியில் இந்திய இராணுவத்துடன் பல தாக்குதல்களில் அக்காச்சி பங்கேற்றான். இந்த தாக்குதல்களில் பலவும் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மேற் கொள்ளப் பட்டவையாகும். அதாவது 1987 டிசம்பர் மாதத்தின் பின்னர் நீர்வேலி, அச்செழு பகுதியில் போராளிகளைத் தேடி இந்திய இராணுவம்

ஆனால் அதனைக் கடக்க மக்கள் ஆதரவு எனும் கவசம் எம்மிடம் உண்டு என்ற கூற்றை இச்சம்பவம் நினைவு படுத்துவதாக அமைந்தது.

### வன்னியில் அக்காச்சி


1988 மார்ச்மாதம் தொடக்கம் 1989 தை மாதம் வரை அக்காச்சி வன்னிப் பகுதியில் இந்திய இராணுவத்துடன் பல மோதல்களில் ஈடுபட்டான். காலத்திற்குக்காலம் பல்வேறு சங்கேத மொழிகளில் இந்திய இராணுவம் விடுதலைப் புலிகள் மீது தொடுத்த யுத்தத்தில் இந்திய இராணுவம் ஒவ்வொரு தடவையும் பலத்த இழப்புக்களைச் சந்தித்துக் கொண்டது. போராட்டத்தலைமையையும் போராட்டத்தையும் இக்கால கட்டத்தில் காப்பாற்றுவதில் வன்னிப்பகுதி வகித்த பங்கு வரலாற்றுச் சிறப்புடையது. அளப்பரிய இழப்புக்களை இந்திய இராணுவம் அடைந்ததோடு, பெரும் தியாகத்தை செய்து வரலாற்றுக் கடமையை விடுதலைப் புலிகள் நிறைவேற்ற வன்னியின் இயற்கை அரணும் மக்களும் உறுதுணையாயின. முல்லைத்தீவு பகுதியில் நின்று யுத்தத்தில் ஈடுபட்ட அக்காச்சியிடம் வன்னி அனுபவங்கள் பற்றி கேட்டபோது ஒருநாள் அடர்த்தியான காட்டில் பொழுது இருண்ட வேளையில் ஒரு இளம்புலி தனது கையிலிருந்த துப்பாக்கியால் இரண்டு தடவைகள் சுட்டான். மறுநாள் காலையில் இந்திய மாநிலச் செய்தி அந்த இடத்தைக் குறிப்பிட்டு அந்த இடத்தில் இரண்டு ஜவான்கள் இறந்ததாகச் சொன்னது. தலைவர் பிரபா அந்த இளம் புலியை அழைத்துப் பாராட்டினார். அதனை என்னால் மறக்க முடியாது என்று அக்காச்சி பதில் சொன்னான்.

### மீண்டும் அக்காச்சி

சில மாதங்களை வன்னியில் கழித்துவிட்டு மீண்டும் 1989 தை மாத மளவில் அக்காச்சி குடா நாட்டிற்குள் வந்தான் இக்காலத்தில் அக்காச்சியும் அவனது தோழர்களும் கெரில்லா வாழ்க்கையே மேற் கொண்டனர். வீதிகளைக் கடக்கும் போது அல்லது தனது ஆதரவாளர்களைச் சந்திக்க வரும்போது எதிர்பாராமல் இந்திய இராணுவத்தைச் சந்திக்க நேரிட்டால் மோதல்கள் ஏற்படுவதுண்டு. இவ்வாறான மோதல்களில் பெரும் இழப்புக்களோடு இந்திய இராணுவம் முகாம் திரும்பிய ஒரு மோதல் 17.5.89 அன்று நீர்-வேலி பகுதியில் நிகழ்ந்தது. இதே போல அக்காச்சியும் சிவனேசன் என்ற இன்னெரு போராளியும் எதிரும் புதிரு

மடையாமல் வழைத்தோட்டம் ஒன்றுக்குள் இறங்கினான் மறுபக்கமாக சீக்கிய சிப்பாய் ஒருவன் வருவதைக் கண்ட அக்காச்சி சமயோசிதமாக அந்தத் தோட்டத்தில் நின்று வேலை செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவனின் கையில் தனது சேட்டைக் கழற்றிக் கொடுத்துவிட்டு அந்த விவசாயின் சவுக்கத்தை (சால்வையை) வாங்கி தலைபா கட்டி கொண்டு அந்த விவசாயின் மாட்டை மேயக் கட்டுவது போல் சாய்ச்சுக் கொண்டு போய் அப்பால் உள்ள மரம் ஒன்றில் கட்டிவிட்டு தலை மறை வானான் மாட்டைப் பற்றி வியாசம் எழுதச் சொன்னால் மாட்டைக் கொண்டு சென்று மரத்தில் கட்டிவிட்டு மரத்தைப்பற்றி கட்டுரை எழுதும் மாணவர்கள் மலிந்த இந்தக்காலத்தில் மாட்டைக் கொண்டுபோய் மரத்தில் கட்டுவிட்டு தலைமறைவான அக்காச்சியின் புத்தி சாதுரியமும் திறமையும் போற்றுதற்குரியதே.

இதேபோல் இந்திய இராணுவம் நூற்றுக்கணக்கில் ஒருகிராமத்தைச் சுற்று வளைத்தபோது ஒரு வீட்டின் தண்ணீர்த்தாங்கி ஒன்றினுள் ஏறி அக்காச்சியும் அவனது தோழர்களும் படுத்துக் கொண்டனர். நீண்ட நேரமாகியும் இராணுவம் அகல்வதாக இல்லை. திடீரெனத் தண்ணீர் தாங்கி அருகில் இருந்த பப்பாசிமரம் அசைந்தது. திகைப்படைந்த அக்காச்சி எட்டிப் பார்த்தான். அந்த வீட்டுக்காரர் பப்பாசிமரம் வழியாக ஏறி தண்ணீர்தாங்கி அருகில் வந்து 'தம்பியவை இந்தாருங்கோ யூஸ் கரைச்சுக் கொண்டு வந்தனான்' என்று கொடுத்துவிட்டு மரத்தில் இருந்து இறங்கிச் சென்றார்.



லெப். கேணல் இம்ரான்

இதே போல் பிறிதொரு இடத்தில் அக்காச்சியும் அவனது நண்பர்களும் ஒரு சுற்றி வளைப்பின்போது தண்ணீர்த்

னது அந்தப் புன்னகையில் எம்மை மறந்து எமது கவலைகளை மறந்து மகிழ்ச்சியடைந்த நாட்கள் எத்தனை! எத்தனை!

### மக்கள் காப்பாற்றல்

ஒரு நாள் 1989 ஆகஸ்ட் மாதம் அளவில் அக்காச்சியும் அவரது நண்பர்களும் கப்புதூ என்ற கிராமத்தில் தங்கி இருந்தனர். கிராமத்தை எண்ணூறுக்கு மேற்பட்ட இந்திய சிப்பாய்கள் சுற்றி வளைத்துக் கொண்டனர். வீடு வீடாகத் தேடுதல் நடவடிக்கைகளை இராணுவம் மேற் கொண்டனர். சாதாரண மக்களைக் கொண்ட அந்தக் கிராமிய மக்கள் மிகவும் புத்தி சாதுர்யமாக அக்காச்சியையும் தோழர்களையும் காப்பாற்றினார்கள். இந்தக் கிராம மக்கள் நீண்ட காலமாகவே போராளிகளுக்கு உறுதுணையாக இருந்து வருபவர்கள்' இன்னுமொருசம்பவம் மறக்க முடியாதது.

1987 ஜூலை மாதம் 5 ஆம் திகதி மில்லர் இலங்கை இராணுவம் தங்கியிருந்த நெல்லியடி மத்திய கல்லூரி முகாம் மீது தாக்குதலை தொடுக்க முன்னர் தயாரிப்பு வேலைகளை முடித்துக் கொண்டு இக்கிராமத்துக்குள் சென்றான். கப்டன் மில்லர் எடுத்துச் சென்ற அந்த வாகனம் இலங்கா இராணுவத்தின் கண்களில் படாதபடி அந்தப் பெரிய வாகனத்தை இலை குழைகளால் மூடி மறைத்து உருமறைப்புச் செய்து உதவியவர்கள் இந்தப்பகுதி மக்கள் தான் என்று தியாகி திலீபன் பெருமையோடு சொன்னான். மில்லரின் அந்த தாக்குதல் தமிழர் வரலாற்றில் ஒரு திருப்பு முனைக்கு வழி வகுத்தது.

### கடைசித் தாக்குதல்

ஒட்டுமடம் என்ற இடத்தில் கூடாரமடித்து தேசத்துரோக செயல்களில் ஈடுபட்டிருந்த ஈ.என்.டி.எல்.எவ் என்ற தேக விரோதக் கும்பல்கள் 15.9.89 அன்று தியாகி திலீபனின் அஞ்சலி நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த பொது மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டு மக்களை இம்சைப்படுத்தி நிகழ்ச்சிகளைக் குழப்பும் நோக்குடன் நீர்வேலிக்கு ஹயர்ஸ் வான் ஒன்றைக் கடத்திக் கொண்டு வந்தார்கள். திலீபனின் அஞ்சலி பிரசுரம் ஒட்டிய மதனா என்ற இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டான். இவற்றையெல்லாம் கேள்வியுற்ற அக்காச்சி நீர்வேலி சந்தியில் நின்று கொண்டிருந்த தேசதுரோகிகளை நோக்கி சக போராளிகளோடு விரைந்தான். அங்கே பெரும் மோதல் ஒன்று ஆரம்பமானது. தேசத்

இன்று பூமி தினம்

# புல் வளர்த்து மண் காக்க..

இலங்கையில் பெரும் பிரச்சினைகளில் மண் அரிப்பும் ஒன்று. ஆண்டுதோறும், இலட்சக் கணக்கான தொன்கள் மண் மழை நீரினால் கழுவப்பட்டு ஆறுகள் வழியாகக் கடலுக்கு அள்ளிச் செல்லப்படுகின்றது.

மண், ஒரு நாட்டின் பெரும் சொத்துக்களில் ஒன்று. அதை இழப்பில் நாடே வறுமையடைந்துவிடும். பயிர்கள் வளர்வதற்கு மண் தேவை. அதுவும் செழிப்பான மண்தேவை மண்ணை இழப்பின் பயிர்கள் வளரா. பயிர்கள் வளராவிடின் மனிதன் தன் உணவுக்கு எங்கே போவது? விறகையும் மரங்களையும் எப்படிப் பெறுவது?

கிணறு வெட்டியவர்களுக்குத் தெரியும் ஒரு சில அடிகள் ஆழத்திற்கு மட்டுமே மண் உண்டு என்பது. அதற்குக் கீழ் கற்பாறை.

பூமியின் மேற்பரப்பிலுள்ள மெல்லிய மண்படலம் எப்படித் தோன்றியது. நாம் வாழும் பூமி 400 கோடி ஆண்டுகளுக்குமுன் தோன்றியது. தோன்றியபோது அது ஒரே தீப்பிழம்பாக இருந்தது பின்பு படிப்படியாகக் குளிர்ந்து மேற்பரப்பு உருவாகியது. அப்பொழுது அது ஒரே பாறை தீப்பாறை என்று அதை புவிச்சரிதவியலாளர் அழைப்பார்கள். காலப்போக்கில் அப்பாறை சூரிய வெப்பத்தில் வெடித்து, காற்றாலும் மழையாலும் அரிக்கப்பட்டு, உடைக்கப்பட்டு மண்ணாக மாறியது.

ஆரம்பத்தில் அது ஆற்று மணல் போலப் பருக்கனாகத் தான் இருந்திருக்கும். அதன் பின் புல் முளைத்து, மரம் வளர்ந்து, இலைகள், சருகுகள் உதிர்ந்து, மண் புழுக்களும் கறையானும் மற்றும் பூச்சி புழுக்களும் வாழ்ந்து மண் பதம் பெற்றது. பசளைத்தன்மை பெற்றது. இது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இடம்பெற்ற செயல்முறை.

இன்றும் அச்செயன் முறை தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால் ஒவ்வோர் ஆண்டிலும் புதிதாக உருவாகும் மண்ணிலும் பார்க்கப் பல மடங்கு மண்ணை இழந்து வருகிறோம். அந்த இழப்பை மழைகாலத்தில் மலைநாட்டிற்குப் போனால் நீங்களே அவதானிக்க முடியும். மலையிலிருந்து வழிந்தோடும் நீர் மண்ணை அள்ளிக் கொண்டுபாய்வதைக் காண்பீர்கள்.

மண்ணரிப்புக்கு மனிதன் தான் முக்கிய பொறுப்பாளி தேயிலைத் தோட்டங்களில் 'சுரண்டி' யைக் கொண்டு ஓர் இதழ் புல்லும் இல்லாமல் சுரண்டி எடுத்து விடுவார்கள். தேயிலைக்கு இடும் பசளையைப் புல் உண்டு விடும் என்பதற்காக. அதனால்மழைநீர் மண்ணை அரித்துச் சென்று விடுகிறது. அத்துடன் எமது

தி. நாகேஸ்வரன்

கொத்தும் உழும் முறைகளும் மண்ணரிப்பை ஊக்குவிக்கின்றது.

மண்ணரிப்பின் போது பசளைமிக்க மண்துகள்கள் தான் கழுவிச் செல்லப்படுகின்றன. பருக்கள் மண்கள் தப்பிவிடும். இதனால் மண்ணரிப்பு உள்ள நிலம் பசளைத்தன்மையைப் படிப்படியாக இழக்கிறது. அத்துடன் பயிர்களுக்குத் தேவையான கனிப் பொருள்களையும் இழக்கின்றன. பசளையையும் கனிப் பொருட் ளையும் இழந்துவிடும் நிலத்தால் பலனில்லை. அங்கு பயிர்கள்வளர்ந்தாலும் அவைகளால் கிடைக்கும் உற்பத்தி வெகு குறைவு. அத்தகைய நிலங்கள் பயிர்ச் செய்கைக்கு உதவாதவை எனக் கைவிடப்படுவது வழக்கம்.

மண்ணரிப்பைக் கட்டுப்படுத்த வழியுண்டு. புற்செய்கைதான் அவற்றுள் சிறந்தது விவசாயப் பயிர்களுடன்

போட்டி போடாத புல் வகைகள் உண்டு. சில புல்வகைகள் விவசாயப் பயிர்களுக்கு உதவுவன. அவரை இனத்தைச் சேர்ந்த பயிரினங்கள் மண்ணுக்கு நைதரசன் வளத்தை ஊட்டுவன.

இவைகளை விட, மலைச் சாரல்களில், வரம்புகள்போல வளர்க்கக்கூடிய புல்லினங்களும் உண்டு. நெல் வயல்களின் வரம்புகளிலும் அவற்றைப் பயிரிடலாம். அவை வளர்ந்து, மண்ணை இறுகப் பிடித்துக் கொள்ளும். மண் அரித்து போவதைத் தடுக்கும்

அத்தகைய புல்வகைகளில் சவந்தரா என்ற புல்லினம் ஒன்று. அதைப் பயிரிடுமாறு வனவிலாகாவினர் சிபாரிசு செய்கின்றனர். சவந்தரா புல் பயிரிடுவது இலகு. செலவும் குறைந்தது. சவந்தரா புல்லை எட்டு அங்குலத்திற்கொன்றாக வயலில் அல்லது காணியின் எல்லையில் நட்டால் அவை வளர்ந்து மண் அரிப்பைக் குறைத்துவிடும்.

சவந்தரா புல் ஆற்றங்கரைகளில் இப்பொழுது வளர்க்கப்படுகின்றது. சவந்தராவின் வேர் ஒன்பது அடி ஆழத்திற்குச் செல்லக் கூடியது.

சவந்தரா புல் மாட்டுக்கு நல்ல தீனி. அத்துடன் அதன் வேரில் நல்ல வாசனை எண்ணெய் உண்டு, நிலத்தைத் துளைக்கும் எலிகளுக்கு அந்த வாசனை பிடிக்காது. எனவே நெல்லை வெட்டும் அகழானிலிருந்து பாதுகாப்புக் கொடுக்கிறது சவந்தரா புல்.

வன இலாகாவில் அதைப் பெறலாம். வனவிலாகா அதிகாரி, தபால் பெட்டி 509, வனவிலாகா, கொழும்பு-2 என்ற விலாசத்திற்கு எழுதி அந்தப் புல்லைப் பெற்றுக் கொள்ளலாம். □

## குறுமணிகள்

ஏற்படாமல் அக்காச்சியே ஏற்ற நடவடிக்கைகளை எடுத்து தனது திறமையால் கிராமத்தைக் காப்பாற்றி னான் என இப்பகுதி மக்கள் நினைவு கூர்ந்து கதைத்துத் கொள்கிறார்கள்.

## வேறும்பல தாக்குதல்கள்

1987 அக்டோபர் தொடக்கம் 1988 மார்ச் வரையுள்ள காலப் பகுதியில் நீர்வேலி பகுதியில் இந்திய இராணுவத்துடன் பல தாக்குதல்களில் அக்காச்சி பங்கேற்றான். இந்த தாக்குதல்களில் பலவும் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மேற் கொள்ளப் பட்டவையாகும். அதாவது 1987 டிசம்பர் மாதத்தின் பின்னர் நீர்வேலி, அச்செழு பகுதியில் போராளிகளைத் தேடி இந்திய இராணுவம் மேற்கொண்ட சுற்றி வளைப்புகளை உடைத்து அவர்களது தேடுதல் வேட்டைகளை நீர்மூலப்படுத்தும் தற்பாதுகாப்பு யுத்தத்தில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளின் படையணியில் அக்காச்சி பெரும் பங்கு வகித்தான்.

இந்தவகையில் 1987 டிசம்பர் மாதம் 20 திகதி அச்செழுவில் ஏற்பட்ட ஒருசுற்றி வளைப்பின போது இந்திய இராணுவத்துடன் பலமாக மோதி அவர்களது தேடுதல் வேட்டையை நிர்மூலமாக்கிய பின் அக்காச்சி அங்கிருந்து தப்பி பிறிதொரு பகுதிக்குள் நுழைந்தான். இந்த சுற்றி வளைப்பின் போது காயப்பட்ட பெண் போராளி மன்னாரைச் சேர்ந்த சகிலா சைனைட்உட்கொண்டு தியாக மரணமுற்றார்.


## பொதுமகன் காப்பாற்றல்

1988 முற்பகுதியில் ஒரு நாள் அச்செழு பகுதிக்கு அதிகாலை வந்த இந்திய இராணுவம் பற்றை மறைவுகளின் பின்னால் படுத்துக் கொண்டு போராளிகளது வருகைக்காக் காத்துக் கிடந்தனர். முக்கிய போராளிகளான லெப்.கேணல் இம்ரான் கப்டன் நேரு, அக்காச்சி இப்படியாகப் பல போராளிகள் அங்கே தங்கியிருந்தனர். அதிகாலை ஆகையால் சன நடமாட்டம் மிக குறைவாகவே இருந்தது. இந்த நிலையில் இராணுவ நடமாட்டம் பற்றிய தகவல் அன்றைய தினம் போராளிகளுக்கும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் ஒரு பொதுமகன் மீன் வலைகளைத் தனது தோளில் போட்டுக்கொண்டு வந்து இராணுவ நடமாட்டம் பற்றிய தகவலைக் கொடுத்து போராளிகளைக் காப்பாற்றினார். தலைவர் பிரபாகரன் கூறியது போல ' நாம் கடக்க வேண்டியது நெருப்பாறு என்பது எமக்குத் தெரியும்.

கழித்துவிட்டு மீண்டும் 1989 தை மாத மளவில் அக்காச்கி குடா நாட்டிற்குள் வந்தான் இக்காலத்தில் அக்காச்சியும் அவனது தோழர்களும் கெரில்லா வாழ்க்கையே மேற் கொண்டனர். வீதிகளைக் கடக்கும் போது அல்லது தனது ஆதரவாளர்களைச் சந்திக்க வரும்போது எதிர் பாராமல் இந்திய இராணுவத்தைச் சந்திக்க நேரிட்டால் மோதல்கள் ஏற்படுவதுண்டு. இவ்வாறான மோதல்களில் பெரும் இழப்புக்களோடு இந்திய இராணுவம் முகாம் திரும்பிய ஒரு மோதல் 17.5.89 அன்று நீர்-வேலி பகுதியில் நிகழ்ந்தது. இதே போல அக்காச்சியும் சிவனேசன் என்ற இன்னொரு போராளியும் எதிரும் புதிருமான இந்திய இராணுவத்தைச் சந்தித்தபோது 30.5.89 அன்று பெரும் மோதல் ஒன்று நிகழ்ந்தது இந்த மோதலின் போது கப்டன் நேரு, லெப். குட்டி ஆகியோரும் இராணுவத்துடன் மோதினர். நீர்வேலி - அச்செழு வீதியில் நிகழ்ந்த இந்த மோதலில் எல்லோரும் சுற்றிவளைப்பை உடைத்து வெளியேறினர். ஆனால் போராளி சிவனேசன் நேருக்கு நேர் ஏற்பட்ட மோதலில் வீரமரணம் அடைந்தான் இதே போன்ற பிறிதொரு மோதல் 8.8.89 அன்று பருத்தித்துறை வீதியில் சிறுப்பிட்டி அருகே ஏற்ப்பட்டது. இந்த மோதலில் கப்டன் ஒருவன் உட்பட இரண்டு இந்திய இராணுவத்தினர் இறந்தனர். இந்த மோதலிலும் அக்காச்சி முக்கிய பங்கு வகித்தனர். இந்த மோதல் நிகழ்ந்த மறுதினம் காலை 7. 15 மணிக்கு ஒலிபரப்பாகும் ஆகாசவாணி டில்லி தமிழ் செய்தியில் இந்த மோதல் பற்றிக் குறிப்பிட்டு விட்டு அக்காச்சி தலைமைலான குழுவே இந்த மோதலில் ஈடுபட்டது என்றும் அந்தச் செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்து.

## சுவையான சம்பவங்கள்

1987 ஒக்டோபர் தொடக்கம் 1989 செப்ரம்பர் வரை ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளில் அக்காச்சியின் கரந்துறை வாழ்வில் பல சுவையான சம்பவங்கள் நிகழ்ந்தன 1987 டிசம்பர் மாதம் ஒரு நாள அக்காச்சி இராஜவீதி வழியாக வந்து கொண்டிருந்தான். இந்திய இராணுவ சிப்பாய்கள் வீதிகளில் நின்று வீதியால் செல்வோரை வழி மறித்து விசாரிப்பதும் அவர்களைச் சோதனையிடுவதுமாக நின்றனர் எதிரும் புதிருமாக அந்த வீதி வழியாக வந்த அக்காச்சி இராணுவத்தைக் கண்டவுடன் பதட்ட



லெப். கேணல் இம்ரான்

இதே போல் பிறிதொரு இடத்தில் அக்காச்சியும் அவனது நண்பர்களும் ஒரு சுற்றி வளைப்பின்போது தண்ணீர்த் தாங்கி ஒன்றினுள் ஒளிந்து கொண்டனர். ஏணி வழியாக ஏறி மேலே வந்த அந்த வீட்டின் ஐந்து வயதுச் சிறுவன் தானும் அக்காச்சியோடு தண்ணீர்த் தாங்கியினுள் ஒளிந்து கொள்ள வேண்டும் என்று அடம்பிடித்தான். உடனே அக்காச்சி நீ போகாவிட்டால் அடிப்பேன் என்று அதட்டிக் கூறினான். உடனே அந்த ஐந்து வயதுச் சிறுவன் அக்காச்சியிடம் 'அண்ணை இப்ப அடிப்பியளோ அல்லது ஆமி போன பிறகு அடிப்பியளோ' என்று கேள்வி எழுப்பினான்.

இதே போல அக்காச்சியும் அவரது தோழர்களும் ஒரு வீட்டிற்கு மதிய போசனத்திற்காக அழைக்கப்பட்டு இருந்தனர். அந்த வீட்டிற்குள் நுழைந்த அக்காச்சி குழுவினர் அந்த வீட்டுக்கார அம்மாவிடம் எம்மைப் போல் இன்னும் இரண்டு நண்பர்கள் இங்கே சாப்பிட வருவார்கள் என்று கூறிவிட்டு உள்ளேயிருந்து தமது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். திடீரென அங்கு வந்த அந்த வீட்டுக்கார அம்மா, ''தம்பியவை இரண்டு பேர் படலையிலை வந்து நிற்கிளம் ஒருவர் தாடியும் தலைப்பாகைமாய் நிற்கிறார். மற்றவர் ஆமி உடுப்பு போட்டிருக்கிறார் அவையளைக் கூட்டிக் கொண்டு வரட்டோ'' என்றார். வெளியே அக்காச்சி எட்டிப் பார்த்தார் படலையில் ஒரு சீக்கியனும் அவனுக்குதவியாக ஒரு தேச துரோகியும் நின்று கொண்டிருந்தனர்.

இப்படியாகப் பல சுவையான சம்பவங்களையெல்லாம் தனது கெரில்லா வாழ்க்கையின் போது தான் சந்திக்க நேரிட்டது என்று அக்காக்சி தனது நண்பர்களுக்கு கூறி தானும் சேர்ந்து சிரிப்பான். அக்காச்சியின் வசீகரமான அந்த முகத்தில் அடிக்கடி உதிரும் புன்னகை ஆயிரம் அர்த்தங்களைக் கொண்டது. அவ

விரோதக் கும்பல்கள் 15.9.89 அன்று தியாகி திலீபனின் அஞ்சலி நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த பொது மக்கள் மீது தாக்குதலை மேற் கொண்டு மக்களை இம்சைப்படுத்தி நிகழ்ச்சிகளைக் குழப்பும் நோக்குடன் நீர்வேலிக்கு ஹயர்ஸ் வான் ஒன்றைக் கடத்திக் கொண்டு வந்தார்கள். திலீபனின் அஞ்சலி பிரசுரம் ஒட்டிய மதனா என்ற இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டான். இவற்றையெல்லாம் கேள்வியுற்ற அக்காச்சி நீர்வேலி சந்தியில் நின்று கொண்டிருந்த தேசதுரோகிகளை நோக்கி சக போராளிகளோடு விரைந்தான். அங்கே பெரும் மோதல் ஒன்று ஆரம்பமானது. தேசத் துரோகிகள் பலர் தாம் கடத்தி வந்த வானையும் போட்டுவிட்டு நீர்வேலி தரவை பாதையூடாக ஓட்டம் பிடித்தனர். போரில் பல துரோகள் மாண்டு போயினர் ஒருவர் உயிருடன் பிடிபட்டான். தற்செயலாக நீர்வேலி கண்ணாடி தொழிற்சாலைக்குள் சென்ற அக்காச்சி மீது அங்கு ஒழித்துக் கொண்டிருந்த கோழை ஒருவன் துப்பாக்கி பிரயோகம் செய்தமையால் மார்பினில் குண்டை ஏந்தி அக்காச்சி மறைந்தான்.

நீர்வேலியில் பிறந்து நீர்வேலியில் கல்வி கற்றுநீர்வேலியில் பிரதேசப் பெறுப்பாளனாக விருந்து நீர்வேலியில் வீர மரணம் அடைந்த கப்டன் அக்காச்சியின் அர்த்தமுள்ள வாழ்வு விடுதலைக்குப் போராடும் மக்களுக்கு ஒரு வழிகாட்டியாகவுள்ளது. அவன் செய்த சேவையின் முத்திரைகளாக நீர்வேலிப் பிரதேசத்தில் காணப்படும் கட்டிடங்களே அவனது நினைவுச் சின்னங்களாக மிளிர்கின்றன.

இவனது ஒன்றைவிட்ட தமையனார் பல தடவைதன்னுடன் வெளி நாடு வருமாறு அழைத்தும் அங்கு செல்ல மறுத்து விட்டான். இவன் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரும் இவ்வாறான ஒரு வேண்டுகோளை அவர் அனுப்பியிருந்தார். அந்த செய்தியை கொண்டு வந்த பேர்வழியிடம் அக்காச்சி பின்வருமாறுசொன்னான்.

,, நான் செய்யும் பணிகளை வேறு ஒருவரைக் கொண்டு நிறைவு செய்ய முடியுமாயின் தான் வருவேன். அதுவரை யான் வரமாட்டேன்.

**இந்த ஆணித்தரமானபதில் வெறும் மேனி மினுக்கு வாத்தைகள் அல்ல அது ஒரு உறுதியான பிரதிக்ஞையின் வெளிப்பாடு என்பதில் சந்தேகமேயில்லை.** □

யது.

ஆரம்பத்தில் அது ஆற்று மணல் போலப் பருக்கனாகத் தான் இருந்திருக்கும். அதன் பின் புல் முளைத்து, மரம் வளர்ந்து, இலைகள், சருகுகள் உதிர்ந்து, மண் புழுக்களும் கறையானும் மற்றும் பூச்சி புழுக்களும் வாழ்ந்து மண் பதம் பெற்றது. பசளைத்தன்மை பெற்றது. இது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இடம்பெற்ற செயல்முறை.

றன. பசளையையும் கனிப் பொருட்ளையும் இழந்து விடும் நிலத்தால் பலனில்லை. அங்கு பயிர்கள்வளர்ந்தாலும் அவைகளால் கிடைக்கும் உற்பத்தி வெகு குறைவு. அத்தகைய நிலங்கள் பயிர்ச் செய்கைக்கு உதவாதவை எனக் கைவிடப்படுவது வழக்கம்.

மண்ணரிப்பைக் கட்டுப் படுத்த வழியுண்டு. புற்செய்கைதான் அவற்றுள் சிறந்தது விவசாயப் பயிர்களுடன்

வாசனை பிடிக்காது. எனவே நெல்லை வெட்டும் அகழானிலிருந்து பாதுகாப்புக் கொடுக்கிறது சவந்தரா புல்.

வன இலாகாவில் அதைப் பெறலாம். வனவிலாகா அதிகாரி, தபால் பெட்டி 509, வனவிலாகா, கொழும்பு-2 என்ற விலாசத்திற்கு எழுதி அந்தப் புல்லைப் பெற்றுக் கொள்ளலாம். □

## குறுமணிகள்

ஐந்து கண்டங்களைக் குறிக்க ஐந்து வளையங்கள் கோத்ததுபோல் அமைந்தது ஒலிம்பிக் சின்னம் நீலம்,[1] மஞ்சள், கறுப்பு, சிவப்பு, பச்சை ஆகிய நிறங்களில் இவ் வளையங்கள் இருக்கும்

● ● ●

வயலின் மேலைத்தேய இசைக்கருவிகளில் ஒன்று இப்போது இந்தியா இதனை முக்கிய துணைக்கருவியாகக் கொண்டுவிட்டது. முதன் முதலில் வயலினைப் பயின்று அதிலே கர்நாடக இசையை வாசிக்க முடியுமென் பதைக் காட்டிவர் பாலஸ்வாமி தீட்ஷிதர்.

● ● ●

நாகபாம்பின் விஷத்துக்கு அடுத்தபடியாக எலிக்கடியால் உண்டாகும் விஷம் கொடியதும் ஆபத்தானதும் என வைத்திய நூல்கள் கூறுகின்றன, எலி விஷம் பதினைந்து இருபது வருடம் கூட இரத்தத்தில் ஊறிக்கிடந்து உடல் வலிமை குன்றும் போது கேடு விளைவிக்கக் கூடியது

● ● ●

இராக ஆலாபனை கர்நாடக இசைக்கு மட்டுமே உண்டு.

## குடாநாட்டில்..

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு ஆதாரங்கள் இருப்பதைப்போல் ஈழம் என்ற இடப்பெயர் கூட ஆதியில் இலங்கையின் ஒருபாகத்திற்கு இடப்பட்டு பின்னர் முழு இலங்கையையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

பூநகரியில் பரமன்கிராய் என்ற இடத்தில் கிடைத்த மற்றொரு மட்பாண்ட பிராமிச் சாசனம் 'வேள்' என்ற குலத்தைக் குறிக்கிறது. தமிழ் நாட்டுப் பிராமிக் கல்வெட்டில் வரும் இந்த வேள் பற்றிய சான்று சங்க இலக்கியத்தில் வரும் வேளீர் என்ற குறுநில மன்னர்களைக் குறிப்பதாக அறிஞர் கொள்வர். அப்படியானால் பூநகரியிலும் ஆதியில் 'வேளீர்' என்ற குறுநிலமன்னர்கள் ஆட்சி இருந்ததெனக் கூற முடியும். இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட புராதன அரசியல் படையெடுப்புக்களைஇனக்கண்ணோட்டத்துடன் கூறும் மகாவம்சம் என்ற நூல் கிறிஸ்துக்கு முற்பட்ட காலத்தில் அநுராதபுர அரசை பத்து தமிழ் மன்னர்கள் 82 வருடம் 2 மாதம் ஆட்சி புரிந்ததாகக் கூறுகிறது. இலங்கையுடன் தமிழ் நாடு கொண்டிருந்த வர்த்தக சமயத் தொடர்புகளைக் கூறும் சங்க இலக்கியங்கள் இலங்கையுடன் கொண்டிருந்த அரசியல் தொடர்பு பற்றியோ படையெடுப்புப் பற்றியோ குறிப்பிடவில்லை. அத்துடன் சங்க இலக்கியம் கூறும் தமிழ் நாட்டை ஆண்ட குறுநில மன்னர்களின் பெயர்களுக்கும் இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர்களின் பெயர்களுக்கும் இடையே அதிக ஒற்றுமை இருப்பதாகவும் தெரியவில்லை. இதனால் அநுராதபுர அரசை வெற்றிகொண்ட தமிழ் மன்னர்கள் அனைவரும் தமிழ் நாட்டில் இருந்து படையெடுத்தவர்களா அல்லது இலங்கையின் இன்னொரு பிரதேசத்தில் இருந்தும் படையெடுத்து வெற்றிகொண்டவர்களா என்பது ஆராயப்பட வேண்டியுள்ளது. இத்தகைய கேள்விகளுக்கு பூநகரியில் கிடைத்த தமிழ்ப் பிராமிச் சின்னங்கள் ஆதிச்சாசனங்கள் ஆதாரமாக அமைகின்றன. இதற்கான விடையை எதிர்கால ஆய்வுகள் தான் உறுதி செய்ய வேண்டும். □